நகர சபை, யாழ்ப்பாணம்

YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
மார்ச் 11 - 17

ஓசை : 01 | நாதம் : 19 | வெள்ளிக்கிழமை 11.03.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

# புலிகளின் பயிற்சி முகாம்கள் குறித்த தகவலை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வழங்கினாரா?



வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரியில் சகல வசதிகளுடனான கணினி கற்கை நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் வடமாகாண ஆளுநர், சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் வரவேற்கப்படுவதையும் ஆளுநர் மற்றும் முகவரமைப்பின் பிரதிநிதியினால் பெயர்ப்பலகை திறந்து வைக்கப் படுவதையும் படங்களில் காணலாம்.

## பகிரங்கப்படுத்த வேண்டும்; ஐ.தே.க. வலியுறுத்தல்

(ஜே.ஜி. ஸ்டீபன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் தமிழகத்தில் இயங்கி வருவதாக இலங்கை அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்தது எவ்வாறு என்று கேள்வி எழுப்பியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அந்தத் தகவலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொடுத்து அனுப்பினாரா? அல்லது இந்தியத் தூதரகத்திடமிருந்து கிடைக்கப்பெற்றதா என்பதை பிரதமரும் அரசாங்கமும் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. (6 ஆம் பக்கம் பார்க்க)

## அடிப்படை உதவிகளை வழங்க கோரி சாகும்வரை உண்ணாவிரதம்

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.இந்நிலையில் நேற்று முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஒருவர் குதித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பை ஏமாற்றவோ பிரிக்கவோ நாம் முயலவில்லை

### அமைச்சர் டலஸ் கூறுகிறார்

அரசாங்கம் மிகவும் நேர்மையான நோக்கத்துடனேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகின்றது. அவர்களை ஏமாற்றவோ பிரிக்கவோ நாங்கள் முயற்சிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகின்றோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். தற்போது அரசாங்க தரப்பினர் பலரும் தேர்தல் நடவடிக்கைகளில்(6 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தல் முடிவுற்றதும் நாடளாவிய ரீதியில் மக்கள் சபைகள்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

உள்ளூராட்சி தேர்தல் முடிவுற்றதும் நாடளாவிய ரீதியில் மக்கள் சபைகள் அமைக்கப்படும். சில கிராம சேவை பிரிவுகள் இணைந்து ஒரு மக்கள் சபை நிறுவப்படும். பிரதேச முக்கியஸ்தர்கள் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த மக்கள் சபையில் அங்கத்தவர்களாக இடம்பெற்று கிராமங்களின் அபிவிருத்திகளை மேற்கொள்வார்கள். இது தொடர்பான புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த வலி. வடக்கு மக்களுக்கு நிவாரண உதவிகள்இல்லை

யாழ்ப்பாணம், வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கடந்த இரு மாதங்களுக்கு மேலாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை - கனடா நேரடி விமானசேவை

இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய இராச்சியம் அனுமதி வழங்கியுள்ளது.இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட விமான சேவைகள் ஒப்பந்தத்தின் படி இந்த வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இந்த இணக்கப்பாட்டின் கீழ் ஸ்ரீ லங்கா எயார் லைன் நிறுவனத்திற்கு கொழும்பிலிருந்து லண்டன் ஊடாக கனடாவின் ரொறன்ரோ வரையில் பயணிகளைக் கொண்டு செல்வதற்கும் கொண்டுவருவதற்கும் (6 ஆம் பக்கம் பார்க்க)



# தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றால் எமது பூர்வீக வாழ்விடங்கள் பறிபோகும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. எச்சரிக்கை

வவுனியா,

இந்தத் தேர்தலில் அரசாங்கக் கட்சிகள் வெற்றி பெற்றால், எமது பூர்வீக வாழ்விடங்களும் விளை நிலங்களும் எமது கையை விட்டுப் பறிபோகக் கூடிய ஆபத்து இருக்கின்றது. எனவே, நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் கைப்பற்றச் செய்ய வேண்டும் என மல்லாவியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் எமது வேட்பாளர்கள் வெற்றி பெற்றால் எமது பிரதேசத்தை நாமே அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். இந்த வெற்றியின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலம் பெறவும், அந்தப் பலத்தின் ஊடாக அரசாங்கத்துடன் வலுவாக நாங்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்கின்ற அதேவேளை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை ஏற்படுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு நாங்கள் சர்வதேச சமூகத்தை வலியுறுத்தவும் முடியும். எனவே இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அழுத்தத்தைக் கொடுப்பதற்கு மக்கள் இந்தத் தேர்தலின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அதற்குரிய ஆணையை வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதன் மூலம் எமக்கு வழங்கப்படுகின்ற இந்த ஆணையைக் கொண்டு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வுக்காக நாங்கள் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். அது மட்டுமல்லாமல் பேச்சுவார்த்தை அரங்கில் அரசாங்கம் எம்மை ஏமாற்ற முடியாது.

தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றால் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இல்லை என சர்வதேசத்திற்குக் காட்டி வருகின்ற அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை உதாசீனம் செய்யக் கூடிய வாய்ப்பும் இருக்கின்றது.

எனவே இப்போதைய அரசியல் நிலைமைகளை மக்கள் நன்கு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எமது எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ற வகையில் எமது வாக்குகளை நாங்கள் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்றார்.

# திருமணநாளில் பேராசிரியை குழந்தைகளுடன் மாடியிலிருந்து குதித்து துடிதுடித்து மரணம்

## மும்பையில் சம்பவம்

கணவனுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனது திருமணநாளில் இரண்டு குழந்தைகளுடன் 19ஆவது மாடியிலிருந்து பேராசிரியை ஒருவர் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த பரிதாப சம்பவம் மும்பை மலாடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் மூவரும் துடிதுடித்து மரணித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மும்பை மலாடுபகுதியைச் சேர்ந்தவர் பவன்குப்தா (35) இவருடைய மனைவி நிதிகுப்தா (32). நிதிகுப்தா ஆடிட்டராக இருந்ததுடன் கல்லூரி ஒன்றில் பகுதி நேர பேராசிரியராகவும் வேலை பார்த்து வந்தார்.

இவர்களுக்கு கவுரவ் (6) என்ற மகனும் மகிகா(3) என்ற மகளும் இருந்தனர். அடுக்குமாடி குடியிருப்பில் 9ஆவது மாடியில் உள்ள வீட்டில் அவர்கள் வசித்து வந்தனர். கணவன் - மனைவி இடையே தகராறு இருந்து வந்ததாகத் தெரிகிறது. நேற்றுமுன்தினம் அவர்களுக்கு திருமண நாள்.

இந்த நிலையில் நிதிகுப்தா தனது குழந்தைகள் இருவரையும் அடுக்குமாடி குடியிருப்பின் 19ஆவது மாடிக்கு லிப்டில் சென்றார். அங்குள்ள பல்கனியில் இருந்து இரு குழந்தைகளையும் கீழே தள்ளி விட்டார். பின்னர் அவரும் கீழே குதித்தார். 3 பேரும் அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர்.

நிதிகுப்தா ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். அதில், நான் எடுத்த முடிவுக்கு யாரும் காரணம் இல்லை என்று குறிப்பிட்டு இருந்தது. அதில் இருந்தே கணவன் - மனைவி இடையே பிரச்சினை இருந்துள்ளது. இதனால்தான் அவர் குழந்தைகளுடன் தற்கொலை செய்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. திருமணநாளில் நிதிகுப்தா குழந்தைகளுடன் தற்கொலை செய்து இருப்பதால் வேறு காரணம் ஏதும் இருக்குமா எனவும் விசாரணை நடக்கிறது.

# வவுனியா நகர சபைத் தலைவர் நாதன் பதவியிலிருந்து ராஜினாமா

## உதவி தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

(நமது நிருபர்)

வவுனியா நகர சபையின் தலைவர் எஸ். என். ஜி. நாதன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இதற்கான கடிதத்தினை வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவி விலகுவதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இராஜினாமா கடிதங்களின் பிரதிகள் வடமாகாண ஆளுநருக்கும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருந்த எஸ். என். ஜி. நாதன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதால் இவர் நகர சபையின் அங்கத்தவர் பதவியை இழந்துள்ளதாகவும் அது சம்பந்தமாக வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்த வேளையிலேயே இவர் நேற்று பதவியை இராஜினாமா செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 5 ஆயிரம் தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளை சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை

தமிழ் பேசும் ஐயாயிரம் பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும். இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். அரசியலமைப்பு திருத்தச் சட்டங்கள் குறித்து பேசிக்கொண்டிருப்பதைவிட இவ்வாறான செயற்பாட்டு விடயங்களே முக்கியமானவையாக உள்ளன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடு கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது

வடக்கில் அண்மையில் அரசாங்கம் சுமார் 1000 பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொண்டது. அவர்களுக்கான பயிற்சிகள் இடம் பெற்றுவருகின்றன.

இன்னும் 5000 தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். விரைவில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

உண்மையில் இவ்வாறான செயற்பாட்டு பிரச்சினைகளுக்கே உடனடியாக தீர்வு காணவேண்டிய தேவை உள்ளது. அதனைவிடுத்து அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்து பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

வடக்கு மக்களின் ஜனநாயகம் குறித்து பேசும் ஐக்கிய தேசிய கட்சி இதுபோன்று செயற்பாட்டு ரீதியில் ஏதாவது தீர்வுகளை மேற்கொண்டுள்ளதா? யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமே நிர்மாணித்தது.

மேலும் அண்மையில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் கிளை கல்வி நிலையம் மற்றும் தேசிய தொழில்நுட்பவியல் கல்லூரி என்பன யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டன. இவ்வாறு இதுவரை காலமும் அம்மக்களுக்கு கிடைக்காத வசதிகளை நாங்கள் அங்கு ஏற்படுத்திவருகின்றோம்.

# அமைச்சர் பஷில் பங்குகொள்ளும் நெல் அறுவடைப் பெருவிழா

கிளிநொச்சி,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டிலான நெல் அறுவடைப் பெருவிழா இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 .00 மணிக்கு கிளிநொச்சி, உருத்திரபுரம் - பொறிக்கடவை அம்மன் ஆலயப் பகுதியில் உள்ள முதலாம் வாய்க்காலில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் விவசாயிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக கிளிநொச்சி அரச செயலக மீள் எழுச்சித் திட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் ஆர். இராசகுலேந்திரன் தெரிவித்துள்ளார்.

noolaham.org | aavanaham.org

# 2010 ஆம் ஆண்டு கலை, இலக்கிய போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

மானிப்பாய்,

யாழ். மாவட்ட செயலகத்தினால் 2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரங்களை மாவட்ட செயலகம் வெளியிட்டுள்ளது.

மாவட்ட செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள் போன்றவற்றில் வெற்றிபெற்றோரின் விபரங்கள் வருமாறு:-

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம்:- தே. காயத்திரி - சங்கானை பிரதேச செயலகம்

2 ஆம் இடம்:- அ. சாம்பவி - உடுவில் பிரதேச செயலகம்

3 ஆம் இடம்:- த. தேனுஜா -வேலணை பிரதேச செயலகம், து. மேதுஷா - தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு) - ஆங்கிலம்**

1 ஆம் இடம்- ம. திரிஷா - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்

2 ஆம் இடம் -ஜெ. ஜெசிந்தன் -பருத்தித்துறை பிரதேச செயலகம்

3ஆம் இடம் கா. கிரிதரன் -பருத்தித்துறை பிரதேச செயலகம்

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம் -சண்முகப்பிரியா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - சசிகலா -சாவகச்சேரி பிரதேச செயலகம்

3ஆம் இடம் - செ. சர்வகா-உடுவில் பிரதேச செயலகம், சு. சுஜித்தா - சங்கானை பிரதேச செயலகம்.

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம் -சு. விஜிதா -தெல்லிப்பழை பிரதேச செயலகம்

2 ஆம் இடம்-க. கஜேந்தினி- கோப்பாய் பிரதேச செயலகம்

3 ஆம் இடம்-ட. சுகன்யா - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

**கவிதை (கனிஷ்ட பிரிவு) ஆங்கிலம்**

1 ஆம் இடம்- பா.வர்சனா - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்

**கவிதை (சிரேஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம்-செ. நிவேதனா - கோப்பாய் பிரதேச செயலகம்

2 ஆம் இடம் தெ. பானுகா - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்

3 ஆம் இடம் - வி. ஜானுசா - பருத்தித்துறை பிரதேச செயலம், அ. கனுஜா - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.

**கவிதை (திறந்த பிரிவு)**

1ஆம் இடம் - பா. பாலச்சந்திரன் - உடுவில் பிரதேச செயலகம்

2ஆம் இடம்- ப. வல்லிபுரம் - கரவெட்டி பிரதேச செயலகம்

3ஆம் இடம் - வ. சின்னப்பா - சாவகச்சேரி பிரதேசசெயலகம்

**கவிதை - திறந்த பிரிவு (ஆங்கிலம்)**

1 ஆம் இடம்-வ. சின்னப்பா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - பா. பாலச்சந்திரன் - உடுவில் பிரதேச செயலகம்

3ஆம் இடம் ப. கலைச்செல்வன் - கரவெட்டி பிரதேச செயலம்.

**சிறுகதை (கனிஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம் - சி.லக்சியா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - பா.கிரிஸா -சாவகச்சேரி பிரதேச செயலகம்

3 ஆம் இடம்-இ.ஸ்ரீவாணி -தெல்லிப்பளை பிரதேச செயலகம்

**சிறுகதை (சிரேஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம் - க. மனோசா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - கிரிஸா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

3 ஆம் இடம் - இ. ஸ்ரீவாணி- தெல்லிப்பழை பிரதேச செயலகம்

**சிறகதை (திறந்த பிரிவு)**

1 ஆம் இடம் - த.சுகந்தினி -காரைநகர் பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - நா. தயாளன் -ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

3ஆம்இடம்-சி. கோமளாதேவி -கோப்பாய் பிரதேச செயலகம், ப. உதயகுமார் - தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**பாடலாக்கம் (கனிஷ்ட பிரிவு)**

1 ஆம் இடம்-வி. வினோதினி - உடுவில் பிரதோச செயலகம்

2 ஆம் இடம் - க.நிரோஜன் - கோப்பாய் பிரதேச செயலகம்

3 ஆம் இடம் றெ.ரனிஸ்லஸ் - ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிர் பணிமனை

**பாடலாக்கம்**

1 ஆம் இடம்-பா. கெஸ்ரன் - தெல்லிப்பழை பிரதேச செயலகம்

2 ஆம் இடம் தெ. நிதர்ஷன்-தெல்லிப்பழை பிரதேச செயலகம்

3 ஆம் இடம் - பா. கிரிஸா-தெல்லிப்பழை பிரதேச செயலகம்

**பாடலாக்கம்**

1 ஆம் இடம் - அ.நேதிகா - உடுவில் பிரதேச செயலகம்

2 ஆம் இடம் - க. ஸ்ரீரங்கநாதன் - சாவகச்சேரி பிரதேச செயலகம்

3 ஆம் இடம் - லக்சுயா - சாவகச்சேரி பிரதேச செயலகம்

**பாடலாக்கம் (திறந்த பிரிவு) ஆங்கிலம்**

1 ஆம் இடம்-பா.பாலச்சந்திரன்-உடுவில் பிரதேச செயலகம்

2 ஆம் இடம்-ம.விவேகானந்தன்-சாவகச்சேரி பிரதேச செயலகம்

3 ஆம் இடம்-ச.உருத்திராதேவி-சாவகச்சேரி பிரதேச செயலகம்.


For Your Independent Future & Higher Education

வெளிநாட்டில் உயர்கல்வியும் / குடியேறல்

▶ வெளிநாட்டில் உயர்கல்வி
அங்கிகரிக்கப்பட்ட முகவர்களாகிய எம்முடாக லண்டனில் பல கல்லூரிகளில்

▶ வெளிநாட்டிலுள்ள உங்கள் குடும்பத்துடன் இணைந்து கொள்ளுவதற்கு
join Your Family in Overseas (Student, HSMP Dependents)

▶ Need Business / Visit Visas For Any Country?

▶ உங்கள் வீசா நிராகரிக்கப்பட்டு விட்டதா?

▶ வெளிநாட்டிலுள்ள(UK&Other Countries) உங்கள் பிள்ளைகளுடன் இணைந்து கொள்ளுவதற்கு

▶ Migrate to UK / Other Countries

பல கேள்விகளுக்கு
ஒரே பதில்.... "ஆம்"



BRIT COLLEGE

AZMARA INTERNATIONAL CONSULTANT
(IMMIGRATION & EDUCATION)
Member of the Intl Education Charter

No. 8/3/7 Bristol Street, 3rd Floor
Bristol Bldg, Colombo 01
E-Mail: azmaraintl@yahoo.com
HotLine : +94 11 2335138
Mobile : +94 77 3293881,+94 77 3293883


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 மார்ச் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முறையான திட்டங்கள் அவசியம்

வடக்கு கிழக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு படிப்படியாகத் திரும்பிக் கொண்டிருக்கும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருவதை அறிவோம்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்ற இன்றைய நிலையில் அங்கு மீளக்குடியேறி வாழ்ந்து வருகின்ற மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவது அவசியமாகும்.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் கணிசமானோர் தற்போது கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் மீளக்குடியேறி வருகின்றனர். இன்னும் பலர் மீள்குடியேறுவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றனர். இவ்வாறானவர்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கத்தைப் போன்றே வெளிநாடுகளும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளும் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை முன்னெடுத்து வருவதை இந்த இடத்தில் மறப்பதற்கில்லை. அந்த வகையில் தற்போது அமெரிக்காவின் 'யு.எஸ்.எயிட்' நிறுவனம் வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்குவதற்காக 462 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதி மூலம் 371,000 பேருக்குத் தேவையான மரக்கறி எண்ணெய், பருப்பு, கோதுமை மா போன்ற பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடமும் சுமார் 3.6 பில்லியன் ரூபாவினை அமெரிக்க அரசாங்கம் வழங்கியிருந்த நிலையிலேயே தற்போதும் பெருந்தொகை நிதியினை இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கியுள்ளது.

இவ்வாறு வெளிநாடுகளும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளும் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றின் அவசியம் பரவலாகவே உணரப்பட்டு வருவதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அவ்வப்போது வழங்கப்படும் உதவிகள் மூலம் மக்கள் பயன்பெற்றாலும் கூட அவர்களின் வீடு, கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான உதவிகளும் இன்று அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகின்றன.

தமது சொந்த பூமியில் மீண்டும் குடியேறி வாழ்வதற்கான ஆசையில் மக்கள் வடக்கில் தற்போது மீளக்குடியேறி வருகின்ற போதிலும் நிரந்தரமாக அங்கு தங்கியிருந்து தமது வாழ்வை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை முழுமையாக ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தினதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும் கடமையாகும்.

எனவே மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக உதவிகள் வழங்கப்படுவது போன்று நிரந்தரமான உதவிகள் அம் மக்களைச் சென்றடையவும் அதன் மூலம் அவர்கள் தமது இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களும் தற்போது படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றனர். இருந்த போதிலும் தாம் மீள்குடியேறி வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் போதாது எனும் மனக்குறை முஸ்லிம்கள் மத்தியில் நிலவுவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறி இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மீண்டும் வடக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள் என்றும் நம்புகிறோம்.

## தமிழகத் தேர்தலுக்கான இடைவேளையே மீனவர் பிரச்சினைக்கான தீர்வு

(சென்றவாரத் தொடர்ச்சி) எந்தவகையிலும் குறைந்ததாக தெரியவில்லை.

தேர்தல் என்று வரும் போது தான் தமிழ்நாட்டின் பிரதான கட்சிகள் தமிழினம் மீதான அடக்கு முறையை பற்றியும் சிந்திக்கின்றன.

ஆக மீண்டும் தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் பற்றிய பேச்சுகள் பரவலாக அடிபடுகிறன. இந்த நிலையிலே கட்சிகள் கூட்டுகள் போடுவதிலும் இட ஒதுக்கீடு செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இவ்வளவு காலமும் தமது சொந்த பிரச்சினைகள் குறித்து ஒருவரை ஒருவர் சாடி விளையாடிக்கொண்டிருந்த கட்சிகாரர்கள், தேர்தல் என்றதுமே நடைமுறையில் நாட்டில் என்னென்ன பிரச்சினைகள் கொழுந்து விட்டெரிகின்றன என்பது குறித்து கவனிக்கத் தலைப்படுவர்.

அதிலே எதை அணைப்பது எதை கையாள்வது என்பது குறித்து ஆராய்வதே வழமை. இதனை பழைய தேர்தலுக்கு முந்திய செயற்பாடுகள் குறித்த செய்திகளில் பலமுறை படித்த ஞாபகம் எம்மில் பலருக்கு வரலாம்.

ஊடகங்களில் மீனவர்கள் படுகொலை குறித்த செய்திகள் பரவலாக வெளிவந்த வண்ணமுள்ளன. தென்கரையோரத்தில் இருந்து மீன்பிடிதொழில் செய்பவர்கள் இலங்கை கடல் எல்லைகளில் வைத்து கொல்லப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இடம்பெற்று வருகின்றன- வந்துள்ளன.

பலகாலமாக இடம்பெற்று வரும் இந்தப்பிரச்சினையை தமிழ்த் தேசியம் சார்ந்து உழைக்கவல்ல சில கட்சிகளும் சில இளைஞர் அமைப்புகளும் கிராமம் கிராமமாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பொருட்டு பல கடினங்களின் மத்தியில் மீன்பிடி தொழிலாளர் பிரச்சினையை மக்கள் முன் நிறுத்தியதால் தமிழ்நாட்டில் மீனவர் பிரச்சினை தற்போது முன்னிலைக்கு வந்துள்ளது.

தமிழ் நாடு அரசாங்கம் இந்த பிரச்சினையை சந்தர்ப்பங்களில் மூடி மறைத்தோ திரிபுபடுத்தியோ அல்லது தனக்கு சாதகமான வகையிலோ வெளியிட்டு வந்தபோதிலும் வெறும் மீனவர் பிரச்சினை எனப் பார்க்க முயன்ற தமிழ் நாட்டு மற்றும் இந்திய மத்திய அரசாங்கங்களின் தந்திரங்களின் மத்தியில் இந்த பிரச்சினை தமிழினம் என்றவகையில் முனைப்பு பெறத்தொடங்கி விட்டது.

அதுமட்டுமல்லாது பிரச்சினையின் முக்கியத்துவமும் இந்திய வெளியுறவுச்செயலர் இலங்கை தலைவரை சந்திக்க பறந்து சென்ற பிரத்தியேக தன்மையிலிருந்து தெரியவந்திருக்கிறது.

சென்னையிலிருந்து வெளிவரக்கூடிய இந்திய மத்திய அரசையும் அதன் செயற்பாடுகளையும் காத்து நிற்கக்கூடிய சிந்தனையாளர்கள் குழுமக்கட்டுரைகளில் இது இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்ட ஒரு பிரச்சினையே, அங்கு கடற்பரப்பிலே இலங்கை கடற்படையினர் தரித்திருக்கவில்லை. இது இந்திய இலங்கை உறவை முறிக்க முயலும் சக்திகளின் சதியாக இருக்கலாம் என இலங்கை தூதரக அதிகாரி கூறுகிறார்.

இந்திய மீனவர்கள் கடலிலே எல்லை மீறி நகர்வதை கட்டம் கட்டமாக இலங்கை கடற்படை செய்கோள்மூலம் அவதானித்திருக்கிறது.

இவ்வாறு இனிமேல் நடைபெறாதவாறு கூட்டு குழுக்கள் உருவாக்க இருதரப்பாலும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என இலங்கை கடற்படையில் குற்றமில்லை மீனவர்கள் மீதுதான் தப்பு இருக்கிறது என்பதுபோல நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு பெரும் பிரயத்தனங்களை சில தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் பிரச்சினையை இலகுவாக எவ்வாறு தம்பக்கம் எடுத்து கொண்டு வெற்றி கொள்வது என்பதே ஆட்சியில் இருப்பவரது தந்திரமாக இருக்கலாம்.

டில்லியில் இடம்பெற்ற முதல்வர்கள் மகாநாட்டிற்கு சென்ற முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழ்நாட்டு மீனவர்களுக்காக குரல் கொடுத்தார்.

மேலும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விட்டு வந்த இந்திய வெளியுறவு செயலர் நிருபமா ராவுடன் முதலமைச்சர் பேசினார். அத்துடன், சேது சமுத்திரக் கடலிலே மீனவர் கொலை பற்றிய செய்திகள் எதுவும் வரவுமில்லை.

இப்பொழுது வெற்றி கலைஞருக்கே.

இத்தனை கடின உழைப்பின் மூலம் கிராமம் கிராமமாக வேலைகள் செய்து பிரச்சினையை வெளிக்கொண்டு வந்த தமிழின பற்று கொண்ட கட்சிகள் வெறும் சட்ட ஒழுங்கை மீறும் சக்திகளாகவே சித்தரிக்கப்பட்டனர்.

அதேவேளை, தமிழ் திரைப்படங்களில் இடைவேளை வருவது போல தேர்தல் முடியும் வரை சேதுக்கடலிலே மீனவர் அழிப்பிற்கு ஓர் இடைவேளை விடும்படிதான் சம்மந்தப்பட்ட தரப்பிடம் கேட்கப்பட்டதா என்பது மீனவர் சமுதாயத்திலும் மக்கள் மத்தியிலும் எழும் கேள்வியே.

ஏனெனில் கடந்த கால அனுபவங்களிலிருந்து பார்க்கும் போது மீனவர்கள் மீதான தாக்குதல் இடைவேளை விட்டுத் தொடர்வது வழக்கமான ஒரு விடயமே. கோடி கோடியாய் தன் குடும்பத்திற்கு பணம் சேர்க்கும் கலைஞர் 'மீனவ நண்பன்' ஆகவும் முடியாது.

**லோகன் பரமசாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடும் மக்களும் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள்: தி.மு.க., பிரதமரை கடுமையாக சாடும் பாண்டியன்

**சென்னை :**

காங்கிரஸும் தி.மு.க.வும் கடைப்பிடிக்கின்ற தவறான பொருளாதாரக் கொள்கைகளால், நாட்டில் விலைவாசி உயர்வடைந்துள்ளதோடு ஊழல் மலிந்து நிர்வாகச் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அமைந்துள்ள டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசில் காங்கிரஸ் கட்சியும் தி.மு.க.வும் பங்கு வகிக்கிறார்கள். இந்தக் கட்சிகள் கடைப்பிடிக்கின்ற தவறான பொருளாதாரக் கொள்கைகளால், விலைவாசி உயர்வு, பெற்றோல் உயர்வு என நம்முடைய வாழ்க்கையில் இதுவரை கண்டிராத பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.



இது எல்லாவற்றிற்கும் மேலாக ஊழல் மலிந்து நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டதற்கு நானே பொறுப்பு என்று ஒப்புக்கொள்கின்ற அளவிற்கும், ஆனால் ஏன் நடந்தது என்று தான் தெரியவில்லை, யார் செய்தார் என்றும் புரியவில்லையே என்று பதில் கூறக் கூடிய ஒரு அவலநிலை ஒரு பிரதமருக்கு ஏற்பட்டுள்ளதையும் இந்த நாடு அண்மையில் தான் கண்டது.

அதில் முக்கிய பங்கு வகித்த தி.மு.க. தான் இந்த இரண்டாவது தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் மிகப்பெரும் ஊழல் செய்திருக்கிறது என்பதை ஏதோ சிலர் இட்டுக்கட்டிச் சொல்வதாக அல்லது ஆளுகிற கட்சி மீது உள்ள பொறாமை காரணமாகச் சொல்லுவதாக முதலமைச்சரும் சொன்னார், பொதுக் குழுவைக் கூட்டி அத்தகைய தீர்மானத்தையும் நிறைவேற்றினார்.

ஆனால் அவர்களும் அங்கம் வகிக்கும் மத்திய அரசினுடைய தலைமை தணிக்கை அதிகாரியே புள்ளி விபரங்களோடு ஏற்பட்டிருக்கிற இழப்புக் கணக்கையும் காட்டினார். அதேபோல் மத்தியப் புலனாய்வுத் துறை இன்றைக்கு, நாங்கள் யாரும் கண்டிராத ஒலிப்பதிவு நாடாக்களை எல்லாம் வெளியிட்டு, நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறார்கள்.

இத்தனை அநியாயங்களைச் செய்த காங்கிரஸ் கட்சியும், தி.மு.க.வும் கடைசியில் கூட்டுக் கொள்ளை அடித்தது மட்டும் அல்ல, கூட்டு அணி சேர்ப்பதிலும் மோதிக் கொண்டதில் இந்த தேர்தல் தொடக்க வேலையைக் கூட குழப்பத்திற்கு ஆளாக்கப் பார்த்தார்கள்.

அதிலும் தி.மு.க. மிகப்பெரிய நாடகத்தையே அரங்கேற்றியது என்றார்.

## சி.பி.ஐ.யிடமிருந்து தப்பிக்க பணத்தை தீ வைத்து கொளுத்திய சுங்க அதிகாரி

**அகமதாபாத் :**

தன் வீட்டை சோதனை செய்ய வந்த சி.பி.ஐ. பொலிஸாரைக் கண்டதும் சுங்க இலாகா அதிகாரி ஒருவர் ரூ.10 இலட்சம் இலஞ்சப் பணத்தை தீ வைத்து எரித்த சம்பவம் ஒன்று குஜராத் அருகே இடம்பெற்றுள்ளது.



குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரத்தில் செயற்பட்டு வரும் ஒரு ஏற்றுமதி-இறக்குமதி நிறுவனம் தங்களது சரக்குகள், தடையின்றி ஏற்றுமதி - இறக்குமதி செய்வதற்காக சுங்க இலாகா அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதாக புகார்கள் வந்தன.

இதனைத் தொடர்ந்து, முதல் கட்டமாக சூரத் நகரில் உள்ள சுங்க இலாகா அதிகாரி தேவிந்தர் என்பவர் வீட்டுக்குகள் சி.பி.ஐ. பொலிஸார் நுழைந்தனர். இதனிடையே சி.பி.ஐ. தன் வீட்டிற்கு வரப்போவதை அறிந்த தேவிந்தர், தன்னிடம் இருந்த 10 இலட்சம் ரூபா பணத்தை குவித்து மதுபானத்தை ஊற்றி தீ வைத்துக் கொளுத்தினார். இந்நிலையில் அங்கு வந்த சி.பி.ஐ. பொலிஸார் தீயை அணைத்து எரிந்தும், எரியாமலும் இருந்த பணத்தை கைப்பற்றியதோடு தேவிந்தரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினார்கள்.

## 'பொலீரோ' காரில் பவனி வரும் ஆடம்பர பிச்சைக்காரர்கள்

**அனந்தபுரம் :**

அரசியல் தலைவர்கள், பணக்காரர்கள் ஆடம்பரமான கார்களில் வலம் வருவதை பார்த்திருக்கிறோம். ஆனால் ஆந்திராவில் பிச்சைக்காரர்கள் குழு, 10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள, 'பொலீரோ' காரில் வந்து பிச்சையெடுத்து அப்பகுதி கிராமத்தினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளனர்.

அனந்தபுரம் மாவட்டம் தாடிபத்திரி அருகே நந்தலபாடு கிராமத்தை சேர்ந்த பிச்சைக்காரர்கள் சிலர் மூன்று நாட்களாக ஆடம்பரமான, 'பொலீரோ' காரில் வந்து, இதே மாவட்டத்தில், புட்லூர் மண்டலப் பகுதியில் சாலையோரமாக காரை நிறுத்தி விட்டு, இப்பகுதியில் உள்ள நகரம் மற்றும் கிராமப்புறங்களுக்கு சென்று, வீடு வீடாக பிச்சையெடுத்து பண வசூலில் ஈடுபடுகின்றனர். மாலை நேரமானதும், அனைவரும் பொலீரோ காரில் நந்தலபாடுக்கு புறப்பட்டு செல்கின்றனர்.

தினமும் காரில் வந்து இறங்கும் இவர்கள், எங்கு செல்கின்றனர் என்பதை கண்காணித்த புட்லூர் பகுதி பொதுமக்கள், அவர்களை பின் தொடர்ந்ததில், அனைவரும் அருகில் உள்ள இடங்களுக்கு சென்று பிச்சையெடுத்து பணம் சம்பாதிப்பதை கண்டு, மூக்கின் மீது விரலை வைத்தனர்.



## ஏழ்மையிலும் எம்.ஜி.ஆர். நினைவில் வாழும் மூதாட்டி

**பனமரத்துப்பட்டி :**

பனமரத்துப்பட்டியில், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். கொடுத்த இடத்தில் குடிசை அமைத்து, 33 ஆண்டாக அவரது நினைவாக மூதாட்டி ஒருவர் வாழ்ந்து வருகிறார்.



தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்த போது, 1979ஆம் ஆண்டு பனமரத்துப்பட்டி அ.தி.மு.க., எம். எல்.ஏ.வாக இருந்த சுப்பராயன், உடல் நலக்குறைவால் இறந்தார். எம்.ஜி.ஆர். திருமனூரில் உள்ள சுப்பராயன் வீட்டுக்கு சென்றுவிட்டு, காரில் சேலம் வந்து கொண்டிருந்தார். அப்போது, பனமரத்துப்பட்டி ஆத்துமேட்டில், காரை நோக்கி ஓடி வந்த பெண்ணை பார்த்தவுடன், எம்.ஜி.ஆர். காரை நிறுத்தி இறங்கினார். எம்.ஜி.ஆரின் அருகே வந்த பெண், 'விவசாய கூலி வேலை செய்யும் நாங்கள், புறம் போக்கு நிலத்தில் குடிசை அமைத்து வசித்து வருகிறோம். அந்த குடிசையை விட்டுச் செல்லும்படி மிரட்டுகின்றனர்' எனக்கூறி கண்ணீர் விட்டார். இதனையடுத்து அவருக்கு ஆறுதல் கூறிய எம்.ஜி.ஆர்., உடனே அதிகாரிகளை அழைத்து, குடிசை உள்ள இடத்தை, அந்த பெண்ணின் பெயரில் பட்டா வழங்க உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். வழங்கிய இடத்தில், 33 ஆண்டாக குடிசை போட்டு வசித்து வரும் மணிமேகலை (வயது 62), பல இக்கட்டான சூழ்நிலையிலும், அந்த நிலத்தை விற்காமல் எம்.ஜி.ஆர். நினைவாக பாதுகாத்து வருகிறார். இதுகுறித்து மணிமேகலை கூறியதாவது:

எம்.ஜி.ஆர். கார் வருவதை பார்த்து, வயல் வேலையை விட்டுவிட்டு ஓடிவந்தேன். அப்போது, நான் வரம்பில் தடுக்கி விழுந்ததை பார்த்த எம்.ஜி.ஆர். காரை நிறுத்தி, இறங்கினார். என்னை அருகே அழைத்து, 'எதற்காக, இப்படி ஓடி வந்தாய்' என்ன வேண்டும் உனக்கு?' என அன்போடு விசாரித்தார். 'புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் குடிசையை விட்டுச் செல்லும்படி, மிரட்டுகின்றனர்' எனக்கூறி அழுதேன். உடனே பஞ்சாயத்துத் தலைவரை அழைத்த அவர், குடிசை இருந்த புறம் போக்கு நிலத்தில், ஒரு பகுதியை எனக்கு பட்டா போட்டு கொடுக்கும்படி உத்தரவிட்டார். கஷ்டப்பட்டபோது, அந்த இடத்தை விற்கும்படி பலர் வற்புறுத்தினர். ஆனால், எம்.ஜி.ஆர். கொடுத்த நிலம் என்பதால், அவரது நினைவாக நிலத்தை விற்காமல், குடிசையில் குடியிருந்து வருகிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படை... (தொடர்ச்சி)

முஸ்லிம் மக்கள் தமக்கு உலர் உணவு நிவாரணம்,வீட்டுவசதிகள்,குடிதண்ணீர் வசதி,மலசலகூட வசதி மற்றும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உள்ளிட்ட பல அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு கோரியே கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் சுழற்சி முறையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இது குறித்து அரச அதிபர் கருத்துக் தெரிவிக்கையில், முஸ்லிம் மக்கள் கோருகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அந்தந்த துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் உரிய முறையில் தொடர்பு கொண்டுள்ளேன். அதற்கான அனுமதி கிடைத்ததும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். அத்துடன் அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை மட்டுமன்றி இந்திய அரசின் நிதியுதவியுடன் வீட்டுத் திட்டங்களையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## இடம்பெயர்ந்த... (தொடர்ச்சி)

எதுவித வருமானமுமின்றி நிவாரணத்தையே நம்பிவாழ்ந்து வரும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிவாரணத்தை எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்றன.

சகல வசதிகளுடனும் வாழ்ந்துவந்த வலி. வடக்கு மக்கள் குடாநாட்டில ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து குடாநாட்டுள்ள பல பிரதேசங்களிலுமுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான நிவாரணம் மாதந்தோறும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. இதனால், இவர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றார்கள்.

கடந்த டிசெம்பர் மாதம் மூன்று மாதங்களுக்குரிய நிவாரணமும் சேர்த்து வழங்கப்பட்டது. அதன்பின்பு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்குரிய நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை.

மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 10 நாட்கள் முடிந்த நிலையிலும் நிவாரணம் வழங்கப்படாததனால் இவற்றை நம்பி வாழ்ந்துவரும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரையும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்தநிலை மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வடபகுதி கடலில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

வடமராட்சி

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் மீண்டும் அதிகரித்துள்ளது.

இந்திய மீனவர்களின் ஊடுருவல்களினால் வடமராட்சிப் பிரதேச மீனவர்கள் மாத்திரமன்றி குடா நாட்டு கரையோர மீனவர்கள் அனைவரும் கடந்த சில வருடங்களாக ஒட்டு மொத்தமாகப் பாதிக்கப்பட்டதுடன் தொடராக நஷ்டங்களையும் அனுபவித்து வந்தனர்.

கடல் வளத்தை சூறையாடுவதுடன் மீனவர்களின் கோடிக்கணக்கான பெறுமதியான மீன் பிடிவலைகளையும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அறுத்துச் செல்வதையும் பொறுக்க முடியாத வடமராட்சி,மாதகல் பிரதேச மீனவர்கள் பாக்கு நீரிணையூடாக இலங்கை கடற்பரப்பில் இழுவைப் படகுகள் மூலம் தொழில் புரிந்து வந்த இந்திய மீனவர்களையும் அவர்களது இழுவைப் படகுகளையும் கடந்த மாதம் சிறைப் பிடித்திருந்தனர். பின்னர் அவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இப்போது மீண்டும் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளில் இலங்கை கடல் பிரதேசத்தில் ஊடுருவி- அத்துமீறி பிரவேசித்து கடற் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் வடமராட்சி ,மாதகல் பகுதி மீனவர்கள் கடற்தொழிலைச் செய்ய முடியாதுள்ளதுடன் மீன்பிடிப்பதற்காக கடலில் வீசும் மீன்பிடி வலைகளை இந்திய இழுவைப்படகுகள் அறுத்துச் செல்கின்றன. இதன் காரணமாக இப்பகுதி மீனவர்கள் தொடர்ந்து சொத்து இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர்.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் அரசி வங்கிகள் மற்றும் நிறுவனங்களிடம் கடன் பெற்று வாங்கிய தொ[illegible] உபகரணங்கள் அழிக்கப்படுவதால், தொழிலையும் சொத்துக்களையும் இழக்கும் நிலைக்கு தொடர்ந்து தள்ளப்பட்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பை... (தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளதால் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை தேர்தலின் பின்னர் நடைபெறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் ஒருபுறம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டு மறுபுறம் கூட்டமைப்பை பிரிக்க முயற்சிக்கின்றது என்று அதன் பிரதிநிதிகள் அண்மையில் தெரிவித்திருந்தமை தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் மிகவும் நேர்மையான முறையிலேயே பேச்சுக்களை நடத்திவருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மீள்குடியேற்ற செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்திவருகின்றது.

இந்நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிரிக்கவோ அதனை ஏமாற்றவோ அரசாங்கம் முயற்சிப்பதாக அவர்கள் கருதுவதாயின் அது தவறான விடயமாகும். நாங்கள் ஒருபோதும் அவ்வாறு செயற்படவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் விவகாரங்கள் தீர்மானிக்கப்படும்போது அவர்களின் பங்களிப்பு இருக்கவேண்டும் என்று எண்ணுகின்றோம். அதனால் தான் முதன்மை அடிப்படையில் நாங்கள் பேச்சுக்களை நடத்துகின்றோம்.

மேலும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் அரசாங்கம் இவ்விடயங்கள் குறித்து பேச்சு நடத்திவருகின்றது. தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டுவருகின்றோம்.

## உள்ளூராட்சி... (தொடர்ச்சி)

மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபைக்கு எதிர்காலத்தில் தேர்தல் நடக்கும். ஆனால் ஜனநாயகமாக தெரிவு செய்யப்படும் கொழும்பு மாநகர சபை நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஒரு நிறுவனம் அமைக்கப்படும். அந்த நிறுவனம் அதிகார சபையா என்று தற்போது தீர்மானிக்க முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது

உள்ளூராட்சி தேர்தலும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பும் முடிவடைந்ததும் நாடளாவிய ரீதியில் மக்கள் சபைகள் நிறுவப்படும். எதிர்காலத்தில் இந்த மக்கள் சபைகளின் ஊடாகவே கிராமங்களின் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும். சில கிராம சேவை பிரிவுகள் இணைந்து ஒரு மக்கள் சபை நிறுவப்படும். பிரதேச முக்கியஸ்தர்கள் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த மக்கள் சபையில் அங்கத்துவர்களாக இடம்பெற்று கிராமங்களின் அபிவிருத்திகளை மேற்கொள்வார்கள். இது தொடர்பான புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும்

இது தொடர்பான சட்டமூலம் தற்போதைக்கும் தயாராகிவிட்டது. ஆனால் புள்ளிவிபர திணைக்களத்தின் கணக்கெடுப்பு முடியும் வரை நாங்கள் காத்திருக்கின்றோம். கணக்கெடுப்பின் பிரகாரம் புதிய கிராம பிரிவுகள் மற்றும் எல்லை நிர்[illegible]கள் இடம்பெறும். அதன்படி மக்கள் சபைகள் அமைக்கப்பட்டு கிராமத்தின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## இலங்கை... (தொடர்ச்சி)

வாரத்திலில் 7 பயணங்களும் மேற்கொள்ளவும் அனுமதிகிடைத்துள்ளது.

இதன் மூலமம் இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் பயணிக்கும் விமானப் பயணிகளுக்கும் பாரிய நன்மைகள் ஏற்படுவதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அவ்வாறே புதிய ஒப்பந்தத்தின் பயனாக இதுவரையில் இலங்கைக்கும் லண்டனுக்கும் இடையில் நிலவிவந்த வாரத்தில்13 பயணங்கள் எதிர்வரும் பனிக்காலம் முதல் வாராந்தம் 21 பயணங்களாக அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

## புலிகளின்... (தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டத்தை நியாயப்படுத்துவதற்காகவே இவ்வாறான பொய்க்கதைகளைக் கூறிவருகின்ற அரசாங்கம், புலிகளின் பயிற்சி முகாம்கள் தமிழகத்தில் இயங்கி வருவதாக தகவல் அறிந்திருப்பின் அதனை இங்கு கூறிக்கொண்டிருப்பதை விடுத்து இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் மங்கள சமரவீர எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்:-

இந்தியாவின் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் இயங்கி வருவதாக பிரதமர் தி.மு. ஜயரத்ன நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்காக இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டதானது மிகவும் பாரதூரமானதாகும்.

இங்கு பிரதமர் தமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதையே பாராளுமன்றத்தில் வாசித்துக்காட்டியிருக்கிறார். அதாவது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராலேயே இந்த தகவல்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு அது பிரதமரிடம் வழங்கப்பட்டு பின்னரது பாராளுமன்றத்தில் வாசித்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அங்கு உலகத் தரமிக்க புலனாய்வுத் துறை இருக்கின்றது. இந்நிலையில் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் இயங்கிவருவதாக இலங்கை அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருப்பதாக கூறி அது பாராளுமன்றத்தில் கூறப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடித்துக் கொள்வதற்காக இவ்வாறான கதைகள் அரசாங்கத்தினால் கூறப்படுகின்றன.

இந்தத் தகவல்கள் எங்கிருந்து கிடைக்கப் பெற்றன என்பது தெரியாதுள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இருந்து மேற்படி தகவல் இலங்கையின் பிரதமருக்கு கிடைக்கப் பெற்றதா? அல்லது இந்திய தூதரகத்திலிருந்து தகவல்கள் வழங்கப்பட்டனவா? இல்லாவிட்டால் யார் இந்தத் தகவல்களை வழங்கினார்கள் என்பது தொடர்பில் உண்மை நிலைவரங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக் கலை



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

இறுதியாக ஏதாவது கடும் வண்ண நூலில் அவுட் லைன் போடலாம். இவ் அவுட் லைனுக்கு 'கோட்' நூலினையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ் டிசைனை மேலும் மெருகூட்ட விரும்பினால் முத்து, பாசி, கல், சீக்குயின்ஸ் ஆகியவற்றைக் கொண்டும் அலங்கரித்துக் கொள்ளலாம். இறுதியாக இப் 'பஞ்ச் எம்பிரோய்டரி' முறையினைப் பார்த்தால் பிற்பகுதியில் எங்குமே நாம் கட்டுப்போடாத படியால் ஏதாவது ஒரு நூல் இழுபடும் போது அனைத்து நூலுமே கழன்றுவிட வாய்ப்புண்டு. எனவே, அதனைத் தவிர்ப்பதற்கு முடிவின் போது பப்றிக் 'க்ளூ' வினைப் பயன்படுத்தி பிற்பகுதியில் அனைத்துப் டிசைன்களுக்கும் பெப்ரிக் க்ளூவினை பூசிவிடுதல் வேண்டும். இப்போது ஒரு நூல் இழுபடும் போதும் ஏனையவை வெளிவராமல் இருக்கும். இனி எமது தேவைக்கேற்ப எம்ரோய்டரி செய்யப்பட்ட துணியை வடிவமைத்துக் கொள்வோம். இப் பஞ்ச் எம்ரோய்டரியினை தொடங்கும் போதும் முடிக்கும் போதும் துணியின் பிற்பகுதியிலேயே ஆரம்பமும் முடிவும் இருத்தல் வேண்டும். இதனை செய்து எமது வீட்டினை அலங்கரிக்கும் போது வித்தியாசமான முறையில் வீடு அழகாக இருப்பதைக் காணலாம்.

இத்தையல் முறையினை நாம் எமது நண்பர்கள், உறவினர்களுடன் அளவளாவிய வண்ணமே செய்யக்கூடியவாறு இருக்கும். அதேநேரம், பொறுமையாகவும் விரைவாகவும் செய்யக்கூடியது இத்தையல் முறை. எனவே, நாம் கற்றதை நமக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படும் விதமாக நடைமுறைப்படுத்துவதில்தான் கற்ற கல்வி முழுமை பெறுகிறது. இதுமட்டுமன்றி, இப் பஞ்ச் எம்பிரோய்டரி போன்றே 'பீட்ஸ் எம்ரோய்டரியும்' விளங்குகிறது.

அது தோற்பை, சான்டில்ஸ், சுடிதார் மற்றும் பல வகைப் பொருட்களில் இதனைப் பயன்படுத்தி அலங்கரித்துக்கொள்ளலாம். எனவே, எம்ரோய்டரி வேலையினை அனைவரும், விசேடமாக பெண்கள் கற்று தமது வாழ்க்கையினை வளப்படுத்திக்கொள்ளலாம். தற்போது எத்துறையினை எடுத்துக்கொண்டாலும் பெண்களின் பங்களிப்பு சிறப்பானதொரு இடத்தில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. வீட்டிலிருக்கும் பெண்களுக்கு ஊடகங்களின் பங்களிப்பும் பெருமளவில் உறுதுணை புரிகின்றது. எனவே, அனைத்து மகளிரும் தம்மை ஏதோவொரு வகையில் வளர்த்துக்கொள்ள இதைப்போன்ற சில துறைகளை கற்றுப் பயனடைவீர்!

* * *

## அலட்சியப்படுத்த வேண்டாம்

தொண்டைப் பாதிப்பை அல்ட்சியப்படுத்த வேண்டாம் உடலுறுப்புகளில் மிகவும் எளிதில் நோய்கள் பற்றிக் கொள்வது தொண்டைப் பகுதியாகும். ஆகையால், பெரும்பான்மையோரை தொண்டை சம்பந்தமான நோய்கள் தாக்கியிருக்கும். குழந்தைகளுக்கு தொண்டையில் சதை வளருதல், பெரியவர்களுக்கு தொண்டை வலி, வாய்ப்புண், சரியாக உணவு உட்கொள்ள இயலாமை, குரல் மாற்றம், தொண்டையில் புற்றுநோய், புகையிலையால் ஏற்படும் பாதிப்புக்கள் என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

குழந்தைகளுக்கு தொண்டையில் சதை வளர்வதை 'டொன்சில்' என்று பெயர். குழந்தைகள் சரியாக சாப்பிட வில்லை என்றாலும் ஒரு முறை தொண்டைப் பகுதியை மருத்துவரிடம் காண்பித்து பரிசோதிப்பது முக்கியம்.

(தொடரும்...)

# சர்க்கரைச் சாதம்



**தேவையான பொருட்கள்**

சிவப்பு அரிசி-1 சுண்டு, பாசிப்பயறு-1/2 சுண்டு (வறுத்துக்குற்றியது), சர்க்கரை- 200 கிராம், சீனி-2 மேசைக்கரண்டி, தேங்காய்ப் பால் - (1 கப் தடிப்பானது), முந்திரிப்பருப்பு -1 மேசைக் கரண்டி, முந்திரிகை வற்றல் - 1 மேசைக் கரண்டி, ஏலப்பொடி-1 தேக்கரண்டி, நெய் - 1 மேசைக்கரண்டி, உப்பு-அளவு, தண்ணீர்-4 தம்ளர்.

**செய்முறை**

தண்ணீரைக் கொதிக்கவைத்து அரிசி, பருப்பு இவற்றை இட்டு வேகவிடவும். அரிசி நன்கு வெந்ததும் பால், சர்க்கரை, சீனி, உப்பு இவற்றைச் சேர்த்துக்கொள்ளவும்.

முந்திரிப் பருப்பு, முந்திரிகை வற்றல் போன்றவற்றை நெய்யில் பொன்நிறமாக வறுத்துச் சேர்க்கவும். ஏலப்பொடியையும் சாதத்துடன் சேர்த்து அடிப்பிடிக்காது துளாவி, ஓரளவு இறுகியதும் இறக்கிக் கொள்ளவும்..

# பாகற்காய் கறி



**தேவையான பொருட்கள்**

பாகற்காய்- 250 கிராம், சின்ன வெங்காயம்- 4பல்லு, பச்சை மிளகாய்-2, தேங்காய்ப் பால்- 1/2 தம்ளர், மிளகாய்த்தூள்- 1 1/2 தேக்கரண்டி, இளநீர்-1 தம்ளர், வெந்தயம்- 1/2 தேக்கரண்டி, பழப்புளிக் கரைசல்- 3 மேசைக் கரண்டி, உப்புத்தூள், கறிவேப்பிலை- தேவையானளவு.

**செய்முறை**

பாகற்காயைச் சுத்தம்செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டவும். வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலையைச் சுத்தம் செய்து அளவாக வெட்டிக் கொள்ளவும்.

வெட்டிய பாகற்காய், வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, வெந்தயம் யாவற்றையும் சேர்த்து அதனுடன் இளநீர், புளிக்கரைசலைவிட்டு மெல்லிய நெருப்பில் மூடி வேகவிடவும். பாகற்காய் மசிய வெந்ததும் தேங்காய்ப்பால், மிளகாய்தூள், உப்பு இவற்றைச் சேர்த்துக் கொதிக்கவைத்துக் கறி கூட்டுப் பதமாகியதும் இறக்கிக் கொள்ளவும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் கிளிநொச்சி

கிளிநொச்சி, இலங்கையின் 25ஆவது மாவட்டம். இம் மாவட்டம் உருவானதற்கு பிரதான காரணம் முன்னர் யாழ். மாவட்டத்துடன் இணைந்திருந்ததால் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புக்களின் போது காட்டப்பட்ட பாரபட்சமான புறக்கணிப்புத்தான் என்றால் அது மிகையாகாது.

இத் தனி மாவட்டம் உருவாவதற்கு கிளிநொச்சி மாவட்ட முன்னாள் எம்.பி. வி. ஆனந்தசங்கரி தலைமையில் மாவட்ட சபை உறுப்பினர் இ. கிருஷ்ணராாசா, திருகோணமலை நகர சபை தலைவராக இருந்த அமரர் சூரியமூர்த்தி உட்பட பெரும்எண்ணிக்கையான இளைஞர்கள் பலவித போராட்டங்களை அன்று நடத்தினார்கள்.

இதன் பிரதிபலிப்பே கிளிநொச்சி தனி மாவட்டமாவதற்கு கரணமாக அமைந்தது. இம் மாவட்டத்தின் முதல் அரசாங்க அதிபராக ஜெயநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவருடன் சிரேஷ்ட அதிகாரிகளான பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் (கே. குணராசா), எஸ். அமிர்தலிங்கம், யாழ். சுவாமிநாதன், திருமதி. பவானி ஸ்ரீஸ்கந்தராசா முதலானவர்களும் இங்கு கடமையாற்றி வந்தனர்.

இவர்களில் கே. குணராசா செயலகத்தின் உதவி அரசாங்க அதிபராகவும் பின்னர் கரைச்சி உதவி அரச அதிபராகவும் எஸ். முருகவேள் காணிக்குப் பொறுப்பான மேலதிக அரச அதிபராகவும் எஸ். அமிர்தலிங்கம் நிர்வாகத்திற்குப் பொறுப்பான மேலதிக அரச அதிபராகவும் பதவியேற்றனர்.

அன்று இவ் அதிகாரிகள்/இளைஞர்கள் - இவர்களின் நடை, உடை, பாவனை எல்லாம் மிகவும் கவர்ச்சியாக கச்சிதமாக இருந்தன. பணிகளும் அவ்வாறே இருந்தன. செங்கை ஆழியான் (கே. குணராசா) கிளிநொச்சியில் உள்ள பத்திரிகையாளர்கள், வாசகர்களை இணைத்து பத்திரிகையாளர் - வாசகர் நலன்புரிச் சங்கத்தை உருவாக்கியதுடன் கிளிநொச்சி இலக்கிய வட்டத்தையும் பிரபலப்படுத்தினார். இவரின் ஆக்கங்கள் பல கிளிநொச்சியை மையப்படுத்தி உருவாகின. பல ஆய்வுகளூடாக ருசிகரமாக வெளிவந்தன.

கிளிநொச்சியின் முதல் மாவட்ட செயலகம் 'ஏ-9' வீதியில் கரடிப்போக்கு சந்திக்கு சமீபமாக நெல் சந்தைப்படுத்தும் சபை கட்டடத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. பின்னர் தற்போதைய மாவட்ட செயலக வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களாக இதுவரை பத்துப் பேர் வரை கடமையாற்றிய போதிலும் கிளிநொச்சி மண்ணை பூர்வீகமாகக் முன்னாள் அரச அதிபரும் தற்போதைய வட மாகாண பிரதி பிரதம செயலாளருமான தி. இராசநாயகத்தின் பங்கும் பணியும் அன்றும் இன்றும் கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருந்துவருகிறது. மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இவர் அரச அதிபராகக் கடமையாற்றி தன்னால் இயன்ற பணிகளை மாவட்ட அபிவிருத்திக்காக மேற்கொண்டார். அத்துடன், இளைஞர்-யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கவும் கல்வியில் மறுமலர்ச்சி காணவும் பாடுபட்டார். குறிப்பாக தொழில்நுட்பக் கல்லூரி, அழகியல் கலா மன்றம் மற்றும் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் உருவாக இ[illegible]சாநாயகம் மூலகாரணமாக இருந்தார்.

சமயத்துறை வளரவும் இவர் அரும்பாடுபட்டதுடன், கூட்டுறவுத்துறைக்கும் புத்தூக்கம் அளித்தார். மகாதேவா ஆச்சிரமம், யோகர்சுவாமி திருவடி நிலையம், வன்னேரிக்குளத்தில் முதியோர் இல்லம் ஆகியவை பல விதத்திலும் அபிவிருத்தி காணப் பாடுபட்டார். இன்றும் இந் நிறுவனங்களுக்கு உதவிவருகிறார்.

கிளிநொச்சியில் உணவுத் தட்டுப்பாடான காலம் ஒன்று இருந்தது. உரம், கிருமிநாசினி, விதை, தானியம் அனைத்திற்கும் தடையேற்படுத்தப்பட்டதால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டது. அத்துடன், போரும் உக்கிரமாக நிகழ்ந்ததால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படவே அரச அதிபர் தி. இராசநாயகம் மாணவர்களுக்கான இலைக்கஞ்சித் திட்டத்தை பாடசாலைகள் தோறும் ஆரம்பித்ததுவைத்தது டன், கடும் மருந்துத் தட்டுப்பாடு நிலவியதை கவனத்தில் எடுத்து ஆயுள்வேத மருத்துவர்களை அழைத்து ஆலோசனைகளைப் பெற்று உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு அவற்றிலிருந்து சுதேச மருந்துகள் தயாரிக்கவும் மக்களின் நோய்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் வழிவகை செய்தார்.

இதற்கென சித்த மருத்துவ இணையம், ஆயுள்வேத பாதுகாப்புச் சபை, மூலிகை கூட்டுறவுச் சங்கம் முதலான வற்றை நிறுவினார்.

அன்று மக்கள் கொடிய மலேரியாவாலும் காய்ச்சல், சளி இருமலாலும் தோல் நோயாலும் பீடிக்கப்பட்டிருந்தனர். இதற்கான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாக இருந்தன. சில மருந்துகள் அறவே இருக்கவில்லை.

இதற்காக மலேரியா பாணி, இருமல் சளி, சரும ரோக நிவாரணி மருந்துகளை உற்பத்திசெய்து அரச வைத்தியசாலைகளூடாகவும் நடமாடும் வைத்திய சேவையூடாகவும் பொது மக்களுக்கு வழங்க வழிசெய்தார். இன்று பூநகரி - சங்குப்பிட்டி பாலம் நிர்மாணிக்கப்பட்டு வட பகுதிக்கான போக்குவரத்துப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகிட்ட பிரதான பாகம் வகித்தவர் தி. இராசநாயகம் ஆவார். அத்துடன், பல்கலைக்கழக கல்விக்கும் ஆசிரியர்களின் நலனுக்கும் புத்தூக்கம் அளித்தவர். இவரின் பார்வை அன்றும் இன்றும் அரசுடன்-அரச கட்சியுடன் சேர்ந்ததாக இருந்தபோதும் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்ததாகவே விளங்கிவருகிறது.

கல்வித்துறை அபிவிருத்தியில் தற்போதைய வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் அரியரெத்தினம், கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா, பிரதி கல்விப்பணிப்பாளர் சின்னராசா ஆகியோர் அன்றும் இன்றும் ஆற்றும் பணிமுக்கியமானது. இவர்கள் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர்கள்.கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்காக அன்றும் இன்றும் பாடுபடுபவர்களில் சமூகசேவை உத்தியோகத்தரும், ஆணையாளருமான பொன். நித்தியானந்தன் ஒருவர். அபிவிருத்திப் பாதையில் இவரது பணி ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றாலும், கிளிநொச்சிக்கான பொதுச் சந்தையை நகருக்கு அப்பால்- நகர மையத்தை விட்டு பிறிதொரு இடத்திற்குக் கொண்டுசென்றதால் வர்த்தகர்கள், பொது மக்கள், அரச ஊழியர்கள் மத்தியில் இன்று அதிருப்தி நிலவுகிறது.



## அன்றும் இன்றும்

கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டு விளங்கும் இளம் பெண் உயர் அதிகாரி ரூபவதி கேதீஸ்வரன் இன்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக உள்ளார்.

இதையிட்டு பொது மக்கள் மத்தியில் இவருக்கு நல்வரவேற்பு உண்டு. மிகவும் சுறுசுறுப்பாக மாவட்ட மக்கள் நலனுக்காக - மாவட்டத்தின் அபிவிருத்திக்காக அயராது உழைத்துவருகிறார். இவரது பெருமுயற்சியால் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் துரிதமாக இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் அரச அதிபராகப் பதவியேற்ற போது 'வீரகேசரி'யில் நான் குறிப்பிட்டதை மீண்டும் ஒரு முறை பார்ப்போம்.கிளிநொச்சியை சேர்ந்த ரூபவதி கேதீஸ்வரன் இன்று கிளிநொச்சி அரச அதிபராகப் பதவி ஏற்கிறார். இது குறித்து கிளிநொச்சி மக்கள் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்துள்ளனர்.இவர் மீது இன்று பாரிய பொறுப்பு சுமத்தப்படுகிறது. ஒன்று மீள்குடியேற்றம்; அபிவிருத்தி. இவ்வாறு அவருடைய பணி நீண்டு செல்கிறது அச்செய்தி. நீலவர்ணத்தில் மிக அழகாக-முக்கியத்துவத்துடன் பத்திரிகையில் அச்செய்தி அச்சாகி பிரசுரமாகி இருந்தது.இதை அரச அதிபர் சாதுரியமாக - திறமையாக நிறைவேற்றிவருவதைக் காணமுடிகிறது. இதேவேளை, மீள்குடியேறியுள்ள மக்கள் பலவித பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வேலையில்லாப் பிரச்சினையும் இளைஞர், யுவதிகள் மத்தியில் அதிகரித்துள்ளது. மழை வெள்ளத்தால் விவசாயச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணமும் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால், மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

● கே.வி.கே.திருலோகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

பொதுவாக ஒரு பழத்தின் விதைகள் பழத்திற்குள் தான் இருக்கும். ஆனால், முந்திரி விதை (கொட்டை) மட்டும் பழத்திற்கு வெளியே இருக்கும்.

சரி, இந்த முந்திரியின் பூர்வீகம் எது தெரியுமா? பிரேசில், தென்னமெரிக்க நாடாகும். முந்திரிப் பழம் ஒரு பொய்க் கனியாகும். இது பழம் போலத் தோன்றினாலும் அது உண்மையில் பழம் இல்லை. இந்த பழத்தின் வெளியே முந்திரி விதை உருவாகும். முந்திரியைப் பாதுகாக்கும் வகையில் அமைந்திருக்கும் இந்த பழத்தின் திரவம் நமது தோலில் பட்டுவிட்டால் எரிச்சலையும், கொப்புளத்தையும் ஏற்படுத்திவிடும்.

பிரேசில் இதன் பூர்வீகமாக இருந்தாலும் உலகளவில் முந்திரி அதிக பரப்பளவில் பயிரிடப்படுவது இந்தியாவில் தான். இந்தியாவில் கேரள மாநிலம் தான் முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.

முந்திரிப் பழத்தில் இருந்து முந்திரி விதையை மனிதர்களால் பிரிக்கமுடியாது. எனவே, மூடப்பட்ட சிலிண்டருக்குள் முந்திரி விதைகளைப் போட்டு சிலிண்டரை சூடுபடுத்துவார்கள். அப்போது அந்த பழம் வெடித்து முந்திரி தனியாகப் பிரியும்.

முந்திரிக் கொட்டை திரவமும் பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்படுகிறது.

உண்மையில் முந்திரியும் நச்சுத்தன்மை வாய்ந்த ஐவி என்ற தாவரமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை தான்.

பலருக்கும் முந்திரி விதையால் ஒவ்வாமை ஏற்படுகிறது. ஆனாலும், எல்லா விதை வகைகளையும் எடுத்துக்கொண்டால் முந்திரி விதை குறைந்த அளவு ஒவ்வாமை கொண்டதாக உள்ளது. நிலக்கடலை தான் அதிக ஒவ்வாமைத் தன்மை கொண்ட விதை பருப்பு வகையாகும்.

- உலகில் ரயில் போக்குவரத்தே இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்.
- உலகிலேயே அதிக அளவில் மீன்பிடிக்கும் நாடு ஜப்பான்.
- உலகின் மிகப்பெரிய சட்டசபை உள்ள நாடு சீனா.
- உலகின் மிகப்பெரிய தீபகற்பம் அரேபியா.
- உலகிலேயே வைரம் அதிகமாக கிடைக்கும் நாடு ஆபிரிக்கா
- உலகிலேயே பட்டு அதிகமாக ஏற்றுமதியாகும் நாடு சீனா.

## நூலகம்

சின்ன சின்னப் பிள்ளை
குழப்படி செய்யாத பிள்ளை
வண்ணப் புத்தகம் வாங்கித் தாறேன்
பள்ளிக்கு நீ போய் வருவாய்
பாலும் சோறும் அம்மா தருவா
பட்டுச் சட்டை அப்பா தருவார்
பள்ளிக்கு நீ போய் வருவாய்

*பா. சாநுகேசன் ஜெயந்தினி*
பாலர் பாடசாலை,
சுன்னாகம்.

## விடையை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

1. சருகுச் சேலைக்காரி சமையலுக்கு உதவுவாள். அவள் யார்?
2. கோடையில் சுற்றிவரும்; வாடையில் முடங்கிவிடும். அது என்ன?
3. கொலுவிலும் இருக்கும்; குழந்தையிடமும் இருக்கும். அது என்ன?
4. கையை வெட்டுவார்; கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?
5. கூடவே வருவான்; ஆனால், பேசமாட்டான். யார் அவன்?
6. கையில்லாமல் நீந்துவான்; கால் இல்லாமல் ஓடுவான். அவன் யார்?
7. குட்டி போடும்; ஆனால் எட்டிப் பறக்கும். அது என்ன?



நகுமத்துல்லா முஹமட் ஜாசர் தரம் 11 A
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

# என் வீடு

ஒரு நாள் கடும் மழை. அத்தோடு, பலத்த காற்று. மரங்களெல்லாம் வேரோடு பெயர்ந்துவிடுவது போல் பேயாட்டம் ஆடின. மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டே வந்த நரி ஒன்று ஒட்டகத்தின் வீட்டுக் கதவை தட்டியது. ஒட்டகம் ஒரு சிறிய குகையில் ஒரு தடுப்பானை போட்டுக்கொண்டு வாழ்ந்துவந்தது.

ஒட்டகம் கொஞ்சமாகக் கதவைத் திறந்து, 'நீ யார்? உனக்கென்ன வேண்டும்?' என்று கேட்டது.

''நான் ஒரு நரி. இந்தக் காட்டில் வசிப்பவன். மழையில் சொட்டச்சொட்ட நனைந்துவிட்டேன். ஒதுங்க சிறிது இடம் கொடு. கருணை செய்'' என்று கெஞ்சியது நரி.

ஒட்டகத்துக்கு ரொம்ப இளகிய மனசு. யாரையும் சுலபமாக நம்பிவிடும். கதவைத் திறந்து நரிக்கு இடம்கொடுத்தது. சிறிது நேரம் கழிந்ததும், ''கால் ரொம்ப வலிக்கிறது. உட்கார்ந்துகொள்ளட்டுமா?'' என்று கேட்டது நரி. அதற்கும் சம்மதித்தது ஒட்டகம்.

சிறிது நேரம் சென்றதும், ''இடுப்புக்கு கடுக்கிறது. கண்ணை அசத்துகிறது, படுக்க அனுமதி தருவாயா?'' என்று கேட்டது நரி. தான் எழுந்துகொண்டு நரி படுக்க இடம் கொடுத்தது ஒட்டகம்.

விடியற்காலை மழையும் காற்றும் ஓய்ந்திருந்தது. ஒட்டகம், நரியின் தூக்கத்தைக் கெடுக்கவேண்டாமென கதவை மெதுவாகத் திறந்துகொண்டு உணவு தேடச் சென்றது.

வயிறார உணவு சாப்பிட்டு விட்டு அது திரும்பும் போது வெயில் உச்சிக்கு வந்துவிட்டிருந்தது. குகைக்கு வந்து கதவைத் தள்ளினால் கல் வைக்கப்பட்டிருந்தது.

கதவைத் தட்டியது ஒட்டகம்.

''யார்?'' என்று குரல் கொடுத்தது நரி.

''நான்தான் ஒட்டகம்'' என்றது.

''எந்த ஒட்டகம்?'' என்று கேட்டது நரி.

''அதுதான், நேற்று ராத்திரி மழை பெய்யும் போது உனக்கு இடம்கொடுத்தேனே... அந்த ஒட்டகம்'' என்று தன்னை அடையாளப்படுத்தியது ஒட்டகம்.

''அது நேற்றைய சமாசாரம். எப்போது உனது குடியிருப்பை அந்நியனை நம்பி அவனிடம் ஒப்படைத்துவிட்டுப் போனாயோ அப்போதே அது அவனுக்கு சொந்தமாகி விட்டது. இப்போது இது என் இருப்பிடம். நீ போய் வேறு இடம் தேடிக்கொள். இனிமேலாவது இப்படிப்பட்ட அசட்டுத்தனமான காரியங்களைச் செய்யாதே'' என்று உறுதியாகச் சொன்னது நரி.

நரி கூறிய வார்த்தைகளைக் கேட்டு ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டது ஒட்டகம். அதனால் தான், முன்பின் தெரியாதவர்களை நம்பி எமது உடைமைகளை அவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது என்பர்.



செ.இலக்கியா தரம் 6
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**விடைகள்**

1. வெங்காயம்
2. மின்விசிறி
3. பொம்மை
4. தையல்காரர்
5. நிழல்
6. படகு
7. வௌவால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இராணுவத்தை அனுப்ப பரிசீலனை



லிபியாவில் இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் அதிகரித்து வருகிறது. இதனால், அங்கு அமைதியை ஏற்படுத்த இராணுவத்தை அனுப்புவது பற்றி பரிசீலிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. லிபியாவில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் வலுவடைந்து வருகிறது. ஆனால், ஜனாதிபதி கடாபி பதவி விலக மறுத்து வருகிறார். கிளர்ச்சியாளர் மீது இராணுவ தாக்குதல் நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கடாபியை ஆட்சியிலிருந்து அகற்றவும், நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ஏனைய நாடுகளின் ஒத்துழைப் போடு லிபியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அனைத்து வழிகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என வெள்ளை மாளிகையின் செய்தித் துறை அமைச்சர் ஜே கார்னி தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் மீதான வான்வழி தாக்குதலை தடுக்க, லிபியா மீது விமானம் பறக்க தடைவிதிப்பது, மீறினால் அவற்றை சுட்டுத் தள்ளுவது உட்பட இராணுவ உதவியை வழங்குவது குறித்து அமெரிக்கா தீவிரமாக பரிசீலித்து வருகிறது. எனினும், அமெரிக்காவின் இந்த செயலுக்கு பலநாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

லிபிய ஜனாதிபதி கடாபி பதவியிலிருந்து விலகினாலும், மனித உரிமைகளை மீறி செயற்பட்டதற்காக அவருக்கும் அவருக்கு துணையாக இருந்தவர்களுக்கும் தண்டனை நிச்சயம் வழங்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. கடாபி உடனடியாக பதவி விலக வேண்டும். அதேநேரம் பதவி விலகினா லும் வெளிநாடு தப்பிச் செல்ல அனுமதிக்கக் கூடாது.

ஏராளமான அளவில் அப்பாவி மக்களை கொன்று குவித்த அவருக்கு தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் கிரவ்லி தெரிவித்துள்ளார்.

# இளவரசரைத் தொடர்ந்து இளவரசிக்கும் திருமணம்



இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ் - மெடில்டன் திருமணத்தைத் தொடர்ந்து, ராணி இரண்டாம் எலிசபெத்தின் பேத்தியின் திருமணம் ஜூலை 30 ஆம் திகதி நடக்கவுள்ளதாக லண்டன் அரண்மனை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் மகன் வில்லியம்ஸ், தனது கல்லூரி தோழி கேதி மெடில்டன் திருமணம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெஸ்ட்மின் ஸ்டர் மாகாணத்தில் உள்ள நூறு ஆண்டு பழைமையான தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் கோலாகலமாக நடந்து வருகின்றன. இந்நிலையில் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் மூத்த மகள் இளவரசி அன்னியின் மகள் ஜாரா பிலிப் என்பவருக்கும், இங்கிலாந்து ரக்பி விளை யாட்டு கிளப் அணியின் கேப்டனான மைக்டின் டல் என்பவருக்கும் எடி ன்பெர்க் மாகாணத்தில் ஜூலை 30 ஆம் திகதி நடக்கவுள்ளதாக அரண் மணை செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து திருமண வர வேற்பு நிகழ்ச்சிகள் லண்ட னின் ஸ்கொட்லாந்து மாகாணத்தில் மன்னர் மாளிகையான ஹோலி ரோஸ் மாளிகையில் நடக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஈரான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிரிய பிரதமர் முகம்மது நாஜி ஓட்ரி (இடது) தலைநகர் டெஹ்ரானில் ஈரான் முதல்துணை ஜனாதிபதி முகமது ரெஸா ரஹிமியால்(வலது) வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அரசியல் தந்திரத்தை இந்தியாவில் கற்றேன்

## பான் கீ மூன்

அரசியல் தந்திரத்தை இந்தியாவில் தான் கற்றுக் கொண்டேன் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்தார்.

ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பணியாற்றியபோது, இந்திய அரசியல் தந்திர முறைகளையும், இந்திய இசையைப் பற்றியும் தெரிந்து



ஐ.நா.வில் அண்மையில் நடந்த இந்திய இசை நிகழ்ச்சியை ரசிக்க வந்த பொதுச் செயலாளர் பான் கீ மூன் (வலமிருந்து 3-வது), வயலின் கலைஞர் எல். சுப்பிரமணியம் (வலமிருந்து 2 - வது)

கொண்டேன் என அவர் தெரிவித்தார்.

ஐ.நா. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பிரபல இசைக் கலைஞர் எல். சுப்பிரமணியத்தின் வயலின் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த போது அவர் இவ்வாறு கூறினார்.

பான் கீ மூன் தனது கல்வியை முடித்ததும் தென் கொரியாவின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் பணியில் சேர்ந்தார். முதலில் இந்தியாவிலுள்ள தென் கொரிய தூதரகத்தில் பணியில் அமர்த்தப் பட்டார்.

இந்தியாவில் பணிபுரியும் காலத் தில் ராஜதந்திரம் என்றால் என்ன என்று படித்தேன். அந்த காலகட்டத்தில்தான் இந்திய இசை குறித்தும் தெரிந்து கொண்டேன் என அவர் தெரிவித்தார்.

பான் கீ மூனின் ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக் காலம் இந்த ஆண்டின் இறுதியோடு முடிவடைகிறது. அவர் இரண்டாவது முறையாக பதவி வகிக்க இந்தியா போன்ற நாடுகளின் பின்துணை அவசியம்.

அவர் மீண்டும் பதவிக்கு வர விருப் பம் தெரிவிக்கும் பட்சத்தில் இந்தியா அவருக்கு ஆதரவளிக்கும் என ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

# மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு கடாபி பொறுப்பேற்க வேண்டும்



லிபிய ஜனாதிபதி கடாபி பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறினாலும் அந்நாட்டின் மனித உரிமை மீறல்களுக்கு அவர் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்கா கூறியுள்ளது. கடாபியின் 40 ஆண்டு கால ஆட்சியை எதிர்த்து அந்நாட்டில் ஆங்காங்கே மக்கள் போராட்டத்தில் ஈடுப ட்டு வருகின்றனர். போராட்டக்காரர்கள் மீது அரசுக்கு ஆதரவான பாதுகாப்பு படையினர் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு அடக்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விமானப் படையைக் கொண்டு போராட் டங்களில் ஈடுபட்டு வருவோர் மீது குண்டு வீசப்படுகிறது.

இந்நிலையில், லிபிய அரசுக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து பல்வேறு நிலைகளில் உலக நாடுகள் விவாதித்து வருகின்றன. அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் பி.ஜே.கிரெவ்லி இது குறித்து கூறியது: கடாபி பதவி விலக வேண்டும். அவர் விலகினால் தான் மாற்று அரசு அமைய முடியும். அப்போதுதான் அந்த நாட்டில் வன்முறை அடங்கி அமைதி திரும்பும். அவர் நாட்டைவிட்டு வெளியேறினால் யாரும் தடுக்கப் போவதில்லை.

ஆனால், அப்படி வெளியேறினா லும், லிபியாவின் மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு கடாபி பொறுப்பேற்றுத் தான் ஆக வேண்டும். அவருடைய குடி மக்களுக்கு எதிராக கொடூரமான ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறார். இதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது. அவருடைய செய்கைகளுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் அவர் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் புலமைப் பரிசில்கள் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகள்

மானிப்பாய்,

கல்வி அமைச்சின் ஈ.கே.எஸ்.பி. நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு 5 ஆயிரம் புலமைப் பரிசில்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தைச் சேர்ந்த க.பொ.த. (சா/த) உயர்தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகம் செல்லமுடியாமல் வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கே இந்த புலமைப்பரிசில் மூலமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஆங்கிலம், கணினித் திறன், வியாபாரத் தொழில் முயற்சித் திறன் என்பன சம்பந்தமான பயிற்சிகளே இப்புலமைப் பரிசில் மூலம் வழங்கப்படவுள்ளன.

இவ் புலமைப்பரிசில் மூலம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளை பூர்த்திசெய்பவர்களுக்கு சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சி பெற்றவர்களுக்கு உள்ளகப் பயிற்சிகளை வழங்குவதற்கு இலங்கை வர்த்தக சபை முன்வந்துள்ளது.

இப் பயிற்சிநெறிகளை மேற்கொள்ள விரும்புவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவர்களூடாக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், நேரடியாக விண்ணப்பம் செய்பவர்கள் 'ஈ.கே.எஸ்.பி.' (EKSP) செயற்றிட்ட மாகாண முகாமையாளர்,வட மாகாணக் கல்வித்திணைக்களம், மருதனார்மடம்,சுன்னாகம் எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

சாவகச்சேரி,

தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் தரம் 12, 13 க்கு இந்து நாகரிகம், இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு இன்று 11 ஆம் திகதியும் , நாளை 12 ஆம் திகதியும் காலை 8.00 மணிக்கு வரணி ஆசிரிய மூலவள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடத்திட்டம்,மாதிரி வினாத்தாள் புத்தகம்,பஞ்சாங்கம் ஆகியவற்றை தம்முடன் எடுத்து வரும் படியும் வினாத்தாள் தயாரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வரும் படியும் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் கே. வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார்.

# திருட்டுச் சந்தேக நபர்கள் இருவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி,

கொடிகாமம் பகுதியில் இரவு வீடு புகுந்து களவில் ஈடுபட்டதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரின் வழக்கு விசாரணை கடந்த 09 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நீதிவான் மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் தலா இரண்டு ஆட்பிணையில் செல்ல அனுமதித்து மறுவிசாரணையை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து தீர்ப்பளித்தார்.

பிணை நிற்பவர்கள் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டவர்களாக இருப்பதுடன் தினமும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

# மீளக்குடியேற்றப்படவுள்ள மக்களின் விபரங்களைத் திரட்டும் படையினர்

தெல்லிப்பழை,

இளவாலை - சேந்தாங்குளம் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட உள்ள மக்களின் விபரங்களை கடற்படையினர் திரட்டிவருகின்றனர். கடந்த சில வருடங்களாக படையினர் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இளவாலை வடமேற்கின் மற்றொரு பகுதியான இளவாலை - சேந்தாங்குளம் கடற்கரையோரத்தில் உள்ள வீடுகளில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு முன்னேற்பாடாகவே இந்த நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாதுகாப்பு அமைச்சின் நிதியுதவியுடன் தெல்லிப்பழை மகாஜனவில் வகுப்பறைகள்

தெல்லிப்பழை,

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு பாதுகாப்பு அமைச்சின் நிதியுதவியுடன் பார்வையாளர் அரங்கு, வகுப்பறைகள், அழகியற்கூடங்கள் உள்ளடங்கலாக 3 மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி. சி.அனந்தசயனன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் 51 ஆவது படைப் பிரிவுப் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஜெ. வல்ஹம கலந்துகொண்டார்.

விருந்தினராக 513 ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் பி.பி.எஸ்.டி. சில்வா , 515 ஆவது படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் பி.பி. ரன்தெனிய, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டடங்களுக்கான அடிக்கல்லினை 51 ஆவது படைப்பிரிவுத் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஜெ. வல்ஹம,வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், கல்லூரி அதிபர் திருமதி. சி.அனந்தசயனன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.



யாழ்ப்பாணம் பிரதானவீதி மக்கள் வங்கிக் கிளையில் மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் வடபிராந்திய உதவி முகாமையாளர் எஸ்.பத்மநாதன் மங்களவிளக்கேற்றுவதையும் பாஷையூர் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் திருமதி கலிஷ்டா சான்றிதழ் வழங்குவதையும் வங்கியின் பொது முகாமையாளர் வி.எஸ்.முதலி ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள் நெடுந்தீவு நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்டத்தில் தேர்தலின்போது 1007 உத்தியோகத்தர்கள் கடமையில்

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 1007 பேர் உத்தியோகத்தர்களாக கடமையாற்றவுள்ளனர்.

உதவி தெரிவ த்தாட்சி அலுவலர்களாக 75 பேரும், சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களாக 149 பேரும் கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களாக 304 பேரும் இலிகிதர்களாக 378 பேரும் கடமையாற்றவுள்ளனர்.

இவர்கள் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களில் உத்தியோகத்தர்களாக கடமையாற்றவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள், உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள், கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகரசபை பிரிவில் 28 வாக்களிப்பு நிலையங்களும் ஏறாவூர் நகர சபை பிரிவில் 26 வாக்களிப்பு நிலையங்களும் ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவில் 23 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பலநோக்கு மண்டப கட்டிடங்கள் மற்றும் குர்ஆன் மதரஸாக்கள், பாலர் பாடசாலைகள் என்பன வாக்களிப்பு நிலையங்களாக அமைக்கப்படவுள்ளன.

# நாவிதன்வெளி பிரதேசத்தில் 12799 பேர் வாக்களிக்க தகுதி

கல்முனை,

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு 07 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 12 ஆயிரத்து 799 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஐந்து அரசியல் கட்சிகள் இச் சபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்றன.

கடந்த 2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இச்சபையில் இலங்கை தமிழரசுக் கட்சி 5779 வாக்குகளைப் பெற்று 05 ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2645 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன.

இப்பிரதேச சபைக்கென வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு 15 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வாக்காளர்கள் மரபு ரீதியாகவன்றி அறிவு ரீதியாக சிந்தித்து செயற்பட வேண்டும்

**- வேட்பாளர் சைபுடீன்**

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

மக்களுக்கும் பிரதேசத்திற்கும் நன்மையில்லாத கட்சிகளுக்கு வாக்களிப்பதனால் என்ன பயன்? என்பது குறித்து வாக்காளர்கள் நன்கு சிந்திக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் சிறந்தவர்களையே தெரிவு செய்ய வேண்டும்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பட்டியலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர், ஓய்வு பெற்ற அதிபர் ஏ. சீ. சைபுடீன் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை 14 ஆம் பிரிவு அமைப்பாளர் எம். எஸ். தமீம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய வேட்பாளர் சைபுடீன் மேலும் கூறியதாவது,

அட்டாளைச்சேனை பிராந்திய வாக்காளர்கள் மரபு ரீதியாகவன்றி, அறிவு ரீதியாகச் சிந்தித்து தொழிற்பட வேண்டும். தங்களினதும் பிராந்தியத்தினதும் சமூகத்தினதும் நலன்களில் அக்கறையில்லாது தேர்தல் காலங்களில் மாத்திரம் வாக்குகளைச் சூறையாடுபவர்களினால் ஏற்பட்ட அல்லது ஏற்படப் போகும் நன்மை என்ன என்பது குறித்து அலசி ஆராய வேண்டும்.

தேசிய காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ். உதுமாலெவ்வை ஆகியோரினால் அட்டாளைச்சேனை பிரதேசம் அதிகரித்த அபிவிருத்தி கண்டுள்ளது. எதிர்வரும் காலங்களிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கடந்த 5 வருட ஆட்சியில் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்த பிரதேச சபை, தேசிய பாடசாலை கிழக்கு வீதியை கொங்கிறீட் வீதியாக அபிவிருத்தி செய்ய மறந்தது.

# 'திவிநெகும' நிகழ்ச்சித் திட்டம் நாளை பெரியநீலாவணையில் ஆரம்பம்

(துறைநீலாவணை நிருபர்)

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் பத்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் (திவிநெகும) கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரியநீலாவணைக் கிராமத்தில் நாளை 12 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தெரிவித்தார்.

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் கந்தையா- லவநாதன் தலைமையில் பெரியநீலாவணையில் ஆரம்பமாகவுள்ள 'திவிநெகும' திட்டத்தின் மூலமாக இவ்வூரில் வீட்டுத் தோட்டம், மீன்பிடி, சிறுகைத் தொழில், உள்ளிட்ட சுய முயற்சியாளர்கள் நூறு பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள் 50 பேரை கிராம சேவை உத்தியோகத்தரும் 50 பேரை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

'திவிநெகும' திட்டத்தின் மூலம் சுய தொழில் முயற்சியில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான சுயதொழில் உபகரணங்கள் மானியமாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. வின் பக்கம் மக்கள் நாளாந்தம் அணி திரள்கின்றனர்

**- முன்னாள் எம்.பி. இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்**

காங்கேயனோடை,

ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் நாளாந்தம் அணிதிரண்டு கொண்டிருக்கின்றார்கள் என முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் காத்தான்குடியில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் இன்று மக்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியின் சொந்தப் பிரதேசமான ஹம்பாந்தோட்டையிலும் மக்கள் இன்று எங்கள் அணியில் இணைந்து வருகின்றனர்.

இந்த அரசாங்கம் இன்று மக்களின் தலைமேல் சுமத்தியுள்ள படு மோசமான சுமையை மக்கள் தாங்கிக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளன. அன்றாடம் தேவையான உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்கின்றது.

யுத்த காலத்தில் இல்லாத விலை ஏற்றம் இன்று ஏற்பட்டுள்ளது. வெண்டிக்காய், கொச்சிக்காய், வெங்காயம் போன்றவற்றின் விலைகளை நீங்கள் பார்க்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கான செல்வாக்கும், ஆதரவும் அதிகரித்து வருகின்றது என்றார்.

# முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழு பிரசாரப் பணிகளில் தீவிரமாக ஈடுபாடு

(துறைநீலாவணை நிருபர்)

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்ட குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிர தேர்தல் பிரசார பணியில் ஈடுபட்டு வருவதை காண முடிகிறது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ். சுபைர் தலைமையில் ஏறாவூர் நகர சபைக்கான தேர்தலில் களம் இறங்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், இக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத், பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் உரையாற்றினர்.

இதே போன்று இக் கட்சியின் உயர் மட்டக் குழுவினர் ஓட்டமாவடிக்குச் சென்று தேர்தல் பணியில் ஈடுபட்டனர். முன்னாள் அமைச்சரும் இக் கட்சியின் தவிசாளருமான எம்.எஸ். அமீரலி தலைமையில் இடம்பெற்றது.

அஃதே காத்தான்குடியில் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீது கலந்து கொண்டு உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான குளிர்பானம் அருந்திய 2 வயது சிறுமி வைத்தியசாலையில்

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

காலாவதியான குளிர்பானம் அருந்திய 2 வயது சிறுமியொருவர் மயக்கமடைந்த நிலையில் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன் தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி- ரம்புக்பிட்டி பகுதியிலுள்ள கடையொன்றிலேயே இந்த குளிர்பான போத்தல் விற்பனை செய்யப்பட்டதாகவும் 2010 ஆம் ஆண்டு முற்பகுதியில் குறித்த குளிர்பானம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதையடுத்து பொலிஸார் மேற்படி விற்பனை நிலைய உரிமையாளரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சப்ரகமுவவில் 7 உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைப்பு

பலாங்கொடை,

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தாக்கல் செய்யப்பட்ட மொத்த வேட்பு மனுக்களில் 452 வேட்பு மனுக்கள் [illegible]ரிவத்தாட்சி அலுவலர்களால் நிராகரிப்புச் செய்யப்பட்டுள்ளதோடு இவற்றில் 66 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் சப்ரகமுவ மாகாணத்தின் ஏழு உள்ளூராட்சி சபைகளும் இதில் உள்ளடங்குகின்றன.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாகவே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டி நகரசபை, பலாங்கொடை பிரதேச சபை, வெலிகபொல பிரதேச சபை, இரத்தினபுரி பிரதேச சபை என்பனவும், கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கேகாலை நகர சபை, வறக்காபொ[illegible] பிரதேச சபை, ருவன்வெல்ல பிரதேச சபை ஆகிய ஏழு உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மேற்படி உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி தேர்தல்கள் நடைபெற மாட்டாது என தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

## ரோஸி எம்.பி பதுளை விஜயம்

(பதுளை மேலதிக நிருபர்)

பாராளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க இன்று பதுளைக்கு விசேட விஜயத்தை மேற் கொள்கின்றார்.

பதுளை பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சி சார்பில் முதன் முறையாகப் போட்டியிடும் ஒரே முஸ்லிம் வேட்பாளரான ஹூஸைன் சம்சுதீனின் விசேட ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 5 மணிக்கு ப/ஹந்தெனிய அராவ மைதானத்திலும், இரவு 7 மணிக்கு பதுளுசிரிகம சந்தியிலும் இடம்பெறும் விசேட பொதுக்கூட்டங்களில் ரோஸி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# 13 வயதுச் சிறுமியை வல்லுறவிற்கு உட்படுத்திய இளைஞன் 17 வருடங்களின் பின்னர் கைது

பதுளை,

பதின்மூன்று வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திவிட்டு தலைமறைவாகியிருந்த இளைஞன் 17 வருடங்களின் பின்னர் விகாரையொன்றிலிருந்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளான்.

அசலக்க பகுதியின் 13 வயது சிறுமியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதாக கடந்த 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதியன்று அசலக்க பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோர் முறைப்பாடொன்றினை பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் அச்சிறுமி அசலக்க அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

மருத்துவ மனையின் வைத்திய அறிக்கையின் பிரகாரமும் சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் சம்பந்தப்பட்ட இளைஞனைக் கைது செய்ய நடவடிக்கையெடுத்த போதிலும் அவ் இளைஞன் பிரதேசத்தைவிட்டு தலைமறைவாகியிருந்ததினால் கைது செய்ய முடியவில்லை.

அதனையடுத்து அவ் இளைஞன் அதிகாரகம விகாரையொன்றில் ஊழியராக கடமையாற்றி வருவதாக கிடைத்த தகவலொன்றின் பேரில் அசலக்க பொலிஸார் விரைந்து அவ் இளைஞனை கைது செய்துள்ளனர்.

17 வருடங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்ட இவ் இளைஞன் விசாரணையின் பின்னர் மகியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென பொலிஸார் தெரிவித்தனர்.

# சேவையாற்றக் கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்வதில் வாக்காளர்களின் பங்கு முக்கியமானது

## -அம்பகமுவ வேட்பாளர் பிரசாத்

மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வேட்பாளர்களை இனம் கண்டு வெற்றி பெறச் செய்வதில் வாக்காளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்று மலையக மக்கள் முன்னணியின் அம்பகமுவ வேட்பாளரும் மலையக இளைஞர் முன்னணியின் செயலாளருமான ரி. பிரசாத் தெரிவித்தார்.

மஸ்கெலியா பகுதியில் நடைபெற்ற பல்வேறு மக்கள் சந்திப்புகளில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

அம்பகமுவ பிரதேசம் மிகவும் பரந்துள்ள மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக இருப்பதால் இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள், நன்கு திட்டமிடப்பட்டு முழு மக்களும் பயன் பெறுவது போல மேற்கொள்ளப்பட வேண்டும். சிறு சிறு திட்டங்களின் மூலமாகவோ அல்லது ஒழுங்கான பிரதிநிதித்துவம் இல்லாத நிலையினாலோ தாமதமாகும். அபிவிருத்தி திட்டங்களினால் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைவதற்கு மிக நீண்ட காலங்கள் நீடிக்கும்.

எனவே, மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும்போது ஒரு தேர்தல் என்ற கணிப்பீட்டிற்கு அப்பால் தம்மை வழி நடத்தும் தமது தேவைகளில் திட்டமிட்டு செயற்படும் பிரதிநிதிகளையே தெரிவு செய்ய வேண்டும்.

தாம் வாக்களிக்கும் சபைகளின் ஊடான முழுபயனும் தமக்குக் கிடைக்கும் அளவிற்கு தாம் தெரிவு செய்யும் பிரதிநிதிகளை இம் மக்கள் பயன்படுத்த வேண்டும்.

மக்களின் வாக்குகளினால் தெரிவான பிரதிநிதிகளும் இதனை பதவியாகவோ அந்தஸ்தாகவோ கருதாமல் மக்கள் சேவையை முதன்மைப்படுத்தி செயற்பட வேண்டும்.

# திடீர் தீயினால் வர்த்தக நிலையம் பலத்த சேதம்

பதுளை,

பதுளை - அபயபுர என்ற இடத்தின் வர்த்தக நிலையமொன்று நேற்று முன்தினம் இரவு திடீரென தீப்பற்றி எரிந்து பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பதுளைப் பொலிஸ் நிலையத்தில் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் முறைப்பாடொன்றினை பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவத்தினால் வர்த்தக நிலையத்திற்கு ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதம் அடைந்திருப்பதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பதுளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார ரட்ணாயக்க தீவிரபுலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார்.

விஷமிகளினால் இவ் வர்த்தக நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டதா அல்லது மின் ஒழுக்கினால் இத் தீ ஏற்பட்டதாவென்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கோரம் இன்மையால் ஊவா மாகாண சபை காலவரையறையின்றி ஒத்திவைப்பு

### மாதம் இருமுறை கூடிய போதிலும் முதல் வாரத்தில் கூடும் சபையமர்விற்கு உறுப்பினர்கள் வழமையாகவே சமுகமளிப்பதில்லை

பதுளை,

ஊவா மாகாண சபையின் அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிய போதிலும் சபை அமர்வினை முன்னெடுக்கக் கூடிய கோரம் இல்லாமையினால் சபை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

சபையின் உறுப்பினர்கள் 34 பேர் இருந்த போதிலும் நேற்றைய சபை அமர்வில் 9 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர். சபையின் தலைவர் ஹேமா ரட்னாயக்கவும் சபைக்கு சமுகமளிக்காமையினால் சபையின் உபதலைவர் சாலிய சுமேத ஜயசேன சபை அமர்வின் தலைமையை ஏற்றிருந்தார். சபை அமர்வு 10 மணிக்கு ஆரம்பமாகிய போது சபை உறுப்பினர்கள் 9 பேர் மட்டும் சமுகமளித்திருந்தமையினால் 10 நிமிடங்களுக்கு சபை ஒத்தி வைக்கப்பட்டு பின்னர் சபை கூடியது.

இதன் போதும் சபையை முன்னெடுக்க கூடிய உறுப்பினர்கள் இல்லாமையினால் கோரம் இல்லாத நிலை ஏற்பட்டதையடுத்து சபை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

சபையில் முதலமைச்சர் உள்ளிட்ட நான்கு அமைச்சர்களும் சமுகமளித்திருக்கவில்லை. ஆளும் கட்சி சார்பாக 8 உறுப்பினர்களும், எதிர்க்கட்சி சார்பில் க. வேலாயுதமும் கலந்து கொண்டிருந்தனர்.

ஊவா மாகாண சபை மாதம் இரு முறை கூடிய போதிலும், மாதம் முதல் வாரத்தில் கூடும் சபை அமர்விற்கு உறுப்பினர்கள் வழமையாகவே சமுகமளிப்பதில்லை.

மாதத்தின் இறுதி வாரம் கூடும் சபை அமர்வு நடைபெற்றதும் உறுப்பினர்களுக்கு மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதினால் அனைத்து உறுப்பினர்களும் சபை அமர்வில் கலந்து கொண்டு, கொடுப்பனவுகளையும் பெற்றுச் செல்கின்றனர்.

இந் நிலையே ஊவா மாகாண சபையில் இடம்பெற்று வருகின்றது.

ஊவா மாகாண சபை சம்பள சபையென்றே வர்ணிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

வெள்ளை - சுதுபாட்ட

சிவப்பு - ரதுபாட்ட

பச்சை - கொலபாட்ட

நீலம் - நில்பாட்ட

மஞ்சள் - கஹபாட்ட

ஊதா - தம்பாட்ட

சாம்பல் - அலுபாட்ட

ரோஸ் - ரோசபாட்ட

மண்ணிறம் - தும்புறுப்பாட்ட

கறுப்பு - கலுபாட்ட

**இவை பிரதான நிறங்களாகும். இனி உடல் பற்றி பார்ப்போம்.**

தலை - ஒலுவ

கண் - எஸ்

காது - கன

வாய் - கட்ட

மூக்கு - நாய

கழுத்து - பெல்ல

வயிறு - பட

கை - அத்த

கால் - கக்குல

விரல் - எங்கில

மார்பு - பப்புவ

முடி - கொண்டே

நகம் - நியபொத்த

மணிக்கட்டு - மணிக்கட்டுவ

பாதம் - பாதய

இவைகள் எமது உடலின் பிரதான பாகமாகும்.

**இனி மிருகங்கள் பற்றிப் பார்ப்போம்**

மாடு - அரக்கா

ஆடு - எலுவ

பூனை - பூசா

நாய் - பல்லா

பன்றி - ஊரா

குதிரை - அஷ்பேயா

மான் - முவா

குரங்கு - வந்துரா

அணில் - லேனா

முயல் - ஹாவா

கழுதை - பூறுவா

சிங்கம் - சிங்ஹயா

புலி - கொட்டியா

யானை - அலியா

கரடி - வலஹா

**இவை மிருகங்களில் சில. மேலும் உத்தியோகம் செய்பவர்களில் சிலரைப் பற்றிப் பார்க்கலாம்.**

தபால் காரன் - தபால்காரயா

பொலிஸ் காரன் - பொலிஸ் காரயா

நீதிபதி - நடுக்காரயா

வைத்தியர் - தொஸ்தர

தொழிலாளி - கம்கரு

நடத்துனர் - கொந்தொஸ்தர

சாரதி - ரியதுரு

கிராமசேவகர் - கிராம் நிலதாரி

காவலாளர் - முரக்காரய

கங்காணி - கங்காணன்

பிரதேச செயலாளர் - பிரதேசிய லேக்கம்

மாவட்ட செயலாளர் - திசாபதி துமா

**மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்.**

● வேலுஸ்ரீவராஜா

# SPOKEN ENGLISH

***It is a Sunday Morning Rohan is on the way to Market. He meets his friend Theepan on his way. The dialogue is on follows.***

**ஞாயிற்றுக்கிழமை காலை ரொஹான் சந்தைக்கு போய்க்கொண்டிருக்கும் வழியில் அவனது நண்பன் வசந்தனை சந்திக்கிறான். இவர்கள் இருவருக்கிடையிலான உரையாடல் கீழே ......**

*Rohan:* Good morning Theepan.

ரொஹான்: காலை வணக்கம் தீபன்

*Theepan:* Good morning Rohan. It is long since we met. Is n't it? Where to early in the morning?

தீபன்: காலை வணக்கம் ரொஹான். நாங்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு சந்திக்கறோமல்லவா? காலையில் எங்கே போகிறாய்?

*Rohan:* I am on the way to Thirunelveli Market. By the way where are you going?

ரொஹான்: நான் திருநெல்வேலி சந்தைக்குச் செல்கிறேன். நீ எங்கே செல்கிறாய்?

*Theepan:* I am on the way English tuition class?

தீபன் : நான் ஆங்கில வகுப்புக்குச் செல்கின்றேன்.

*Rohan:* Are you preparing for an Exam or just you want to improve your English Knowledge?

ரொஹான்: நீ பரீட்சைக்கு தயார் செய்யவா? அல்லது ஆங்கில அறிவை விருத்தி செய்யவா?

*Theepan:* mm…mm…. actually speaking for both reasons.

தீபன் : ம்ம்ம்...... உண்மையில் இரண்டுக்குமாகத் தான்.

*Rohan:* That means have you got an idea of going abroad?

ரொஹான்: அது வந்து வெளிநாட்டுக்கு செல்வதற்கான திட்டம் ஏதும் இருக்கின்றதா?

*Theepan:* Yes, please. In another two month times.I will be sitting for my IELTS Examination. conducted by British Council.

தீபன்: ஆம். அடுத்த இரண்டு மாத இறுதியில் நான் ஐஎல்ரிஎஸ் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்றேன்.

*Rohan:* So you are very serious is preparing for your exam studying English.

ரொஹான்: ஆகவே, நீ மிகவும் கடுமையாக ஆங்கிலத்தை பரீட்சைக்காக படித்துக்கொண்டிருக்கிறாய்.

*Theepan:* Of course. How about you?

தீபன்: நிச்சயமாக. நீ எப்படி இருக்கின்றாய்.

*Rohan:* I have faced a job interview is a private bank. I have faced well in the interview and they are satisfied with my qualification. hope fully I will get the appointment soon.

ரொஹான்: நான் ஒரு வேலைக்காக தனியார் வங்கியொன்றின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றேன். நான் நல்லபடியாக நேர்முகத் தேர்வை எதிர்கொண்டேன். அவர்களும் என்னுடைய கல்வித் தகைமை பற்றி திருப்தியடைந்துள்ளார்கள். நிச்சயமாக நான் விரைவில் பணி நியமனத்தைப் பெற்றுவிடுவேன்.

*Theepan:* Is that so, my congratulation. By the way are you staying at the same place still.

தீபன்: அப்படியானால் எனது வாழ்த்துக்கள். அத்துடன், நீ இப்பவும் முன்னர் வசித்த இடத்திலேயா இருக்கின்றாய்?

*Rohan:* Oh, yes. You could visit me when you are free.

ரொஹான்: ஆம். நீ ஓய்வாக இருக்கும் போது என்னை வந்து சந்திக்க முடியும்.

*Theepan:* OK. when time permits I will visit you. Rohan it is time for me to take leave of you…

தீபன்: எந்த நேரத்தில் நான் உன்னை வந்து சந்திப்பது? ரொஹான், நீ புறப்படும் நேரம் வந்துவிட்டது....

*Rohan:* Now it is 8.05 am, when in your class.

ரொஹான்: இப்பொழுது நேரம் 8.05. என்ன நேரம் உனக்கு வகுப்பு?

*Theepan:* It is at 8.30 am.

தீபன்: காலை 8.30 மணிக்கு.

*Rohan:* Ok. then you carry on. I am very happy, I met you. good bye.

ரொஹான் : சரி. உன்னை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். போய்வருகிறேன்.

*Theepan:* I too very happy. we will meet again. Good bye.

தீபன்: எனக்கும் மிக்க மகிழ்ச்சி. நாங்கள் மீண்டும் சந்திப்போம். போய்வருகிறேன்.

**எஸ். சிவசுப்பிரமணியம்**
முன்னாள் வருகை தரு விரிவுரையாளர்
யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பற்றாக்குறையுடன் நீண்ட காலமாக இயங்கிவரும் பலாலி ஆசிரியர் கலாசாலை

## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் விரிவுரையாளர் ம. இக்னேசியஸ் உடன் ஒரு சந்திப்பு



கல்விக் கூடங்கள் எனப்படுபவை மாணவர்களை எதிர்காலத்தில் உயர்ந்த வர்களாக மிளிரச்செய்யும் கலைக்கோயில். சமூக நன்நோக்கில் சிறப்பிடம் பெறும் கல்விக் கூடங்களில் ஏற்படும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் சிறந்த மாணவர்களை உருவாக்குதல் என்ற நோக்கத்திற்குக் குந்தகமாக அமைகின்றன.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இயங்கிவருவதாகக் குறிப்பிடுகிறார் அதன் அதிபர் ம. இக்கேசியஸ். இப் பயிற்சிக் கலாசாலையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக அவர் யாழ் ஓசையுடன் மனந்திறந்து பேசினார். அதனை இங்கு வாசகர்களுக்காகத் தருகிறோம்.

இக் கலாசாலையானது 1946 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 இல் தான் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் பலாலி ஆசிரியர் கலாசாலையே யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த உயர் கல்வி நிறுவனமாக விளங்கியது.

ஆங்கில மொழி மூலப் பாடநெறிகளே அன்று போதிக்கப்பட்டன. இதனால், ஆங்கில மொழியில் பரிச்சயமான மாணவர்கள் இக்கலாசாலை மூலம் தோற்றுவிக்கப்பட்டனர். பெருமளவு மாணவர்கள் அக்கால கட்டத்தில் கற்றுவெளியேறினர்.

மத்திய கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் இக் கலாசாலையானது முன்னர் பலாலியில் சுமார் 50 ஏக்கர் பரப்புக் காணியில் இயங்கிவந்தது. 1986 இல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து, தற்போது ஆடியபாதம் வீதியில் உள்ள சின்ன முத்துத்தம்பி பாடசாலையின் கட்டடத் தொகுதியில் பல்வேறு வசதியீனங்களுக்கும் மத்தியில் இயங்கிவருகின்றது. தற்போது இக் கட்டடத் தொகுதியில் கற்றல் - கற்பித்தலுக்கான போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லை. இதனால், ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இடவசதிகள் மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாமை இங்கு ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது.

எனவே, இடம் இல்லை என்ற காரணத்தை வைத்து பயிற்சி ஆசிரியர்களின் கல்வி வாய்ப்பை மறுப்பது நன்றன்று. எனவே தான், இருக்கின்ற வசதி வாய்ப்பைப் பயன்படுத்தி விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் பெற்றுக் கொண்டு இயங்கிவருகிறது. 2004ஆம் ஆண்டு சுமார் 500க்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் இங்கு கல்வி பயின்றனர். இவர்களுக்குப் போதிய இடவசதிகள், தளபாட வசதிகள் இல்லாமையால் பெரும்பாலானவர்கள் படிகளிலும் நிலத்திலும் அமர்ந்திருந்தவாறே கற்கைநெறிகளைப் பயின்றனர்.

இந்நிலையானது ஆரம்ப காலத்தில் இருந்த திண்ணைக் கல்வி முறையை ஒத்தாக இருந்தது. கடந்த 2009ஆம் ஆண்டில் தான் இக் கலாசாலை தனது கடைசிப் பிரிவு மாணவர்களை வெளியேற்றியது. சுமார் 60 மாணவர்கள் வெளியேறினர். இதற்குப் பிறகு இடவசதியைக் காரணம் காட்டி மாணவர்களை இக் கலாசாலைக்கு அனுமதிப்பதில் கல்வி அமைச்சு பின்னடிக்கிறது.

எனவே, எதிர்வரும் காலத்தில் இதனை வேலணை மத்திய கல்லூரியில் இயக்குவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். இதற்கு அப்பாடசாலை அதிபர் தனது பூரண சம்மதத்தைத் தெரிவிக்கின்றார்.

எனவே, எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி பயிற்சி ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சிகளை வழங்குவதே எமது கலாசாலையின் நோக்கமாகும் என்றார் அதிபர்.

-நேர்கண்டவர் எஸ். நதி-

## சண்டிலிப்பாய் பிரதேச பிரிவில்அபிவிருத்தி திட்டங்கள்

ஏழாலை,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தித் திட்டத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பொதுக் கிணறுகள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், சாவல்கட்டு கிராமத்தில் 9 இலட்சம் ரூபா செலவில் பொது மண்டபம், பெரியவிளான் கிராமத்தில் சமுர்த்தி கடைத்தொகுதி 5 இலட்சம் ரூபா செலவிலும், சுதுமலை தெற்கில் 3 இலட்சம் ரூபா செலவில் தையல் பயிற்சிநிலையமும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

வேலணை வர்த்தக சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வேலணையில் நடைபெற்றது. சின்னையா சிவராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக போசகர் சின்னையா சிவரா( தோழர் போல்) , தலைவர் க.ஜெயச்சந்திரமூர்த்தி (ஜே.பி) , உப தலைவர் க.பாஸ்கரன்,செயலாளர் க.மார்க்கண்டுதாசன், உப செயலாளர் சோ.காந்தரூபன், பொருளாளர் க.அருளானந்தம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## சாவகச்சேரியில் சடலம் மீட்பு

சாவகச்சேரி,

கைதடி - நாவற்குழிப் பகுதியில் கிணற்றில் வீழ்ந்து இறந்ததாகக் கருதப்படும் இனங்காணப்படாத ஒருவரின் சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த 9 ஆம் திகதி மீட்கப்பட்டது. இது தொடர்பாக

சாகவச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட நீதிவான் மாணிக்கவாசகம் கணேசராசா அம் மரணம் தொடர்பாக நேரில் சென்று பார்த்து மரணவிசாரணை நடத்தி அதன் அறிக்கையை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் படி சாவகச்சேரி பிரதேச மரண விசாரணை அதிகாரி ந.சசிகலாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## அங்கத்தவர்களுக்கு கடன் உதவி

ஏழாலை,

சுன்னாகம் - கந்தரோடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு கடன் உதவிகளை வழங்கிவருகின்றது.

கந்தரோடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாகவும், சுயதொழிலுக்குத் தேவையான நிதி வசதியினை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் தொழில் முன்னேற்றத்தை அடைய வழிவகை செய்வதற்குமாகக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.



யாழ்ப்பாணம் திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற 'வானோர்விடுதூது' என்ற நாட்டிய நாடக நிகழவின் போது கொழும்பு திருமறைக்கலாமன்ற நடன ஆசிரியர் குமாரி றொசிட்டா பீற்றர் 'ஆடற்கலைச்செல்வி' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். நாட்டிய நிகழ்ச்சியையும், திருமறைக்கலாமன்ற இயக்குனர் பேராசிரியர். நீ. மரியசெவியர் அடிகள் விருது வழங்குவதையும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அனன்யா யாரு? கேட்கிறார் மாதவன்

**ஹொலிவுட்டில்** சோலோவாக நடித்துக்கொண்டிருந்தாலும் பாலிவுட்டில் மல்டி ஸ்டார் படங்களில் நடிக்கிறார் மாதவன். முதன் முறையாக 'தனு வெட்ஸ் மனு' படத்தில் சோலோ ஹீரோவாக நடித்தார். சமீபத்தில் இப்படம் திரைக்கு வந்தது. இதையடுத்து 2 படங்களில் ஹீரோவாக நடிக்க பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறார். இதற்கிடையில் மாதவன் ஜோடியாக 'நாடோடிகள்' அனன்யா ஹிந்தியில் நடிப்பதாகவும் இதன் மூலம் பாலிவுட்டில் அவர் அறிமுகமாகிறார் என்னும் தகவல் வெளியானது.

இது குறித்து மாதவன் கூறும்போது, ''ராம் கோபால் வர்மாவின் உதவியாளர் படத்தில் நான் நடிப்பதாகவும் எனக்கு ஜோடியாக அனன்யா நடிப்பதாகவும் கிசுகிசு வருகிறது. வர்மாவின் உதவியாளர் யாரிடமும் நான் கதை கேட்கவில்லை. மேலும், அனன்யாவை யார் என்றே எனக்குத் தெரியாது. அவர் எனக்கு ஜோடியாக நடிக்கிறார் என்று எழுதுவது கற்பனைதான். ஹிந்தியில் தற்போது 2 படங்களில் நடிக்க பேசிக்கொண்டிருக்கிறேன். ஒப்பந்தம் ஆனவுடன் அதுபற்றிச் சொல்கிறேன். தமிழில் 'வேட்டை' படத்தில் நடிக்கிறேன் என்றார்.





அன்புள்ள மான்விழியே

**'குஜாரிஸ்'** படத்தில் ஐஸ்வர்யா ராய் கவர்ச்சியாக நடித்ததாகவும், அபிஷே
எனவே கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவு
ஐஸ்வர்யாராய் அளித்த பேட்டி வருமாறு:- எனக்கு கணவராக வாய்த்த அபிஷே
செய்த புண்ணியத்தால்தான் அவர் எனக்கு கணவராக கிடைத்துள்ளார். திருமண
விட்டேன். எல்லா படங்களிலுமே நல்ல கேரக்டர்கள் கிடைத்தன. இந்த அ
அபிஷேக் பச்சன்தான். அவர் சுதந்திரம் கொடுத்ததால்தான் இ பல்லாம்
அவர் தடைபோட்டிருந்தால் வீட்டில் முடங்கியிருப்பேன். என்னைப் பெறுத்
வைத்துள்ளேன். அதை ஒருபோதும் மீறமாட்டேன். என் மாமனார் அமிதாப் ப
பச்சன் மூவரும் சினிமாவில் இருப்பதால் என்னை நன்றாகப் புரிந்துவைத்துள்
பிரபலமானது. அந்தத் குடும்பத்துக்கு கெட்ட பெயர் வரும்படி நடந்துகொள்ள

சி னி மா

## கமல் + மணி

**மணிரத்தினம்** இயக்கவிருக்கும் 'பொன்னியின் செல்வன்' கதை விவாதத்தில் பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் இருக்கிறார் என்பதை அனைவரும் அறிவர். தற்போது நடிகர் கமலிடம் இப்படம் குறித்து அவ்வப்போது விவாதித்து வருகிறாராம் மணிரத்தினம்.

இப்படத்தில்பயன்படுத்திக்கொள்ள பிரெஞ்ச் தேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான குதிரைகளை இறக்குமதிசெய்ய முடிவெடுத்திருக்கிறார் மணி. தனது 'மருதநாயகம்' படத்திற்காக கமல் அங்கிருந்து தான் குதிரைகளை இறக்குமதி செய்தாராம். அதுபற்றித்தான் கமலிடம் அபிப்பிராயம் கேட்டிருக்கிறார் மணி. சில அனுகூலங்களை சொல்லியிருக்கிறார் கமலும். அத்துடன், 'பொன்னியின் செல்வன்' கதை விவாதத்தில் இவர்களையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று இரண்டு எழுத்தாளர்களை சிபாரிசு செய்தாராம். அவர்கள் கவிஞர் புவியரசு, எழுத்தாளர் இரா. முருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிளாஷ்பேக்கை சரியாக எடுப்பதில்லை - புது இயக்குநர் தாக்கு

**'அன்புள்ள மான்விழியே'** பட இயக்குநர் பிரம்மன் கூறியது: கும்பகோணத்தில் தமிழ் இளைஞருக்கும் மராட்டிய பெண் ஒருவருக்கும் இடையே மலர்ந்த காதலும், இரு நண்பர்களின் நட்பும் கலந்த கதையாக உருவாகிறது. சுனில், நசீர், ஹாசினி நடிக்கின்றனர். இப்படத்துக்காக மராட்டிய முறைப்படியான திருமணக் காட்சி படமாக்கப்பட்டது. இதற்காக வெள்ளை நிறத்தில் பச்சை போர்டர் போட்ட சேலையை ஹீரோயினுக்காக கும்பகோணத்தில் வாங்கினேன். இரண்டு பெரிய கூடைகள் வாங்கி அதில் அம்மிக் கல்லை போட்டு இரு கூடையிலும் ஹீரோ, ஹீரோயின் நிற்க திருமணம் நடத்தப்பட்டது. இந்த காட்சியை முறைப்படி படமாக்குவதற்காக மராட்டிய திருமணச் சடங்குகள் பற்றிய தனிவீடியோ ஆல்பம் வாங்கி பார்த்து எடுத்தேன். அதிலிருந்து நிறைய விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். இப்படத்தில் வரும் காட்சிகள் அந்தந்த கதாபாத்திரங்களின் கண்ணோட்டத்தில் பிளாஷ்பேக்கில் சொல்கிறேன்.

வழக்கமாக பிளாஷ்பேக் காட்சிகள் என்றால் ஒருவரே ஒரு இடத்தில் உட்கார்ந்து முழுக்கதையும் சொல்வது போல் படமாக்கிறார்கள். அது சாத்தியமில்லை. அது சரியும் கிடையாது. சம்பந்தப்பட்ட சம்பவங்கள் மட்டுமே குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்கு தெரியும் என்ற பட்சத்தில் எல்லாச் சம்பவங்களையும் ஒரே பாத்திரம் சொல்வது போல் சீன்கள் அமைப்பது சரியான பார்முலா கிடையாது. என் படத்தில் அதை மாற்றியிருக்கிறேன்.

பிஷேக் பச்சன் இதனை விரும்பவில்லை என்றும்
நாகவும் செய்திகள் வந்தன. இதற்குப் பதிலளித்து
புபிஷேக்பச்சன் சொக்கத்தங்கம். போன பிறவியில்
திருமணத்துக்கு பிறகு நிறைய படங்களில் நடித்து
த அளவுக்கு நான் வளரக் காரணம் என் கணவர்
லாம் ச க முடிந்தது. சினிமாவில் நடிப்பதற்கு
பாறுத்தவரை எனக்குள்ள எல்லையைத் தெரிந்து
தாப் பச்சன், மாமியார் ஜெயா, கணவர் அபிஷேக்
த்துள்ளனர். அபிஷேக் குடும்பம் சினிமா உலகில்
காள்ள மாட்டேன் என்றார்.




## சினி பிட்ஸ்

- வளர்ந்துவரும் சிறு காமெடியன்கள் சோலோ காமெடியன் ஆகவேண்டுமென்றால் ஒவ்வொருவருக்கும் தனிப் பாணி தேவை என்று தன்னுடன் நடிப்பவர்களுக்கு அட்வைஸ் சொல்கிறார் விவேக்.
- சீரியல்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டு படங்களில் கவனம் செலுத்தத் துவங்கி இருக்கும் நீலிமா, 'முரண்', 'நண்பா', 'மதில்மேல் பூனை' படங்களில் நடிக்கிறார்.
- பாலிவுட் ஹீரோயினாக தொடர்ந்து முயற்சிக்கும் பியா, அங்கு நல்லவாய்ப்பு கிடைக்கும் வரை தமிழில் நடிப்பராம்.
- கல்லூரி மாணவன் தோற்றத்திற்கு மாற வேண்டும் என்று ஸ்ரீகாந்துக்கு ஷங்கர் கண்டிஷன் போட்டதால் 'டயட்' இருந்து இருவேளை மட்டுமே சாப்பிடுகிறாராம்.
- கே.வி. ஆனந்த் இயக்கும் 'மாற்றான்' படத்தில் சூர்யா ஜோடியாக டாப்ஸி நடிக்கிறார்.
- 'முத்துக்கு முத்தாக' படத்தை அதில் நடித்த நடிகர், நடிகைகளுக்கு சிறப்புக் காட்சியாக திரையிட்டுக் காண்பித்துள்ளார் டைரக்டர் ராசு மதுரவன்.
- 'சூழ்நிலை' படத்தில் வில்லன் வேடத்தில் நடிக்கிறார் இசையமைப்பாளர் தினா.
- அமெரிக்காவில் '180' பட ஷூட்டிங்கின் போது பிரியா ஆனந்தை தினமும் காரில் ஷூட்டிங் தளத்தில் டிராப் செய்தது அங்கு வசிக்கும் அவரது தாயும் அத்தையும் தானாம்.
- ஜெயம் ரவி, ரோகினி, பரத், எஸ்.பி. சரண் ஆகியோர் தேர்தலில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வு படத்தில் நடித்துள்ளனர்.
- 'நான்' படத்தில் நடிக்கும் விஜய் அன்டனி,'வேலாயுதம்','யுவன் யுவதி' மற்றும் பிரபு தேவா இயக்கும் படங்களுக்கு இசையமைக்கிறார்.

திருத்தணி




அவன் இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



# கவிமணி அன்னைதாசன் கே.ஆனந்தராஜா

## இவரைப் பற்றி 25

ஈழத்தில் தொன்றுதொட்டு நிலைத்து நின்று வரும் கலை நிகழ்வுகளில் ஒன்றாக கதாப்பிரசங்கம் இருந்துவருகிறது. இந்து ஆலயங்களில் புராணக்கதைகளையும், இதிகாசங்களையும் இசையோடும், வாய் அசைவோடும் வாய் அசைவின் லயத்தின் மூலம் தனியொருவர் வெளிக்காட்டும் தமிழ்க் கலாசார நிகழ்வாக இன்றும் இது இருந்துவருகிறது. இதில் தனக்கென ஓர் தனி இடத்தைப் பிடித்திருப்பவர் தான் அன்னைதாசன் என்றழைக்கப்படும் கே. ஆனந்தராஜா. இவரைப் பற்றி சில குறிப்புக்கள்...

* யாழ்ப்பாணத்தில் வயாவிளான் என்ற கிராமத்தில் கந்தையா - சின்னம்மா தம்பதிகளுக்கு தவப்புதல்வனாக 1949ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி பிறந்தார்.
* ஆனந்தராஜா தனது ஆரம்பக் கல்வியையை வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாசாலையிலும், வயாவிளான் மகாவித்தியாலயத்திலும் கற்றுக் கொண்டார்.
* உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கற்கும்போது இசைத்துறை சார்ந்த போட்டிகளில் பங்குபற்றி தனது திறமையை வெளிப்படுத்தினார்.
* இயல்பாகவே இசையுடன் கதைகளை - பாடல்களாகப் பாடும் திறமைகொண்ட இவரை குருராமலிங்க வாத்தியார் இசை கற்றுக்கொள்ள வழிகாட்டியாக இருந்தார்.
* இசையுடன் இயங்கி வந்த விவசாய பண்ணைப் பாடசாலையில் கல்வி கற்று 1970 - 1971 ஆம் ஆண்டுகளில் விவசாய விஞ்ஞான ஆசிரியராக வெளியியேறினார்.
* விவசாய ஆசிரியரான இவர் மட்டக்களப்பு முஸ்லிம் மகாவித்தியாலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் அதிபராகவும் கடமையாற்றினார்.
* 1976 ஆம் ஆண்டில் காரைநகரைச் சேர்ந்த ஆசிரியையான பரமேஸ்வரியுடன் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார்.
* சிறுவயது முதல் கதாப்பிரசங்கத்தில் ஆர்வமாக இருந்த ஆனந்தராஜா, ஆலயங்களில் கதாப்பிரசங்கம் செய்வதில் மிகுந்த நாட்டமுடையவராக இருந்தார்.
* ஈழத்தில் பிரபல்யமான கதாப்பிரசங்கிகளான கவிஞர் நித்தியானந்த சர்மா, கவிஞர் விநாசித்தம்பி ஆகியோரைப் போல் இவரும் பிரபல்யமானவராகத் திகழ்ந்தார்.
* சிவராத்திரி மற்றும் ஆலயங்களில் நிகழும் விழாக்களில் தொடர் கதாப் பிரசங்கங்களை பக்கவாத்திய இசைகளுடன் செய்துவருகின்றார்.
* கதாப் பிரசங்கத்தின் மூலம் புராணக் கதைகளையும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் இசையுடன் நல்ல வசன நடையிலும் மக்கள் மத்[illegible]யம்பி வந்தார்.
* ஆனந்தராஜா கதாப்பிரசங்கம் செய்யும் போது பக்க வாத்தியங்களாக உடுக்கு, மிருதங்கம், தபேலா, ஆர்மோனியம், மோர்சிங் போன்றவற்றைப் பயன்படுதி வந்தார்.
* 'கவிமணி' என்ற பட்டம் பெற்ற இவர், சமூகத்திற்கு ஏற்ற நல்ல பல கருத்துக்களை பாடல்களாக எழுதி இசையுடன் பாடிவந்தார்.
* ஆனந்தராஜா தனக்குள் இருக்கும் இசைஞானம், கவித்துவம், விடய ஞானம், பேச்சாற்றல், நடிப்பாற்றல் என்பவற்றை கதாப்பிரசங்கத்தின் மூலம் வெளிப்படுத்தி வந்தார்.
* கதாப்பிரசங்கம் மட்டுமல்லாது பட்டிமன்றம், சமயச் சொற்பொழிவுகள் என்பவற்றிலும் திறம்பட செயற்பட்டு வருகின்றார்.
* பரந்த மனப்பான்மையுடை இவர் இக்கலைத்துறைகளின் தான் மட்டும் தனித்து நிற்காது தன்னுடைய மாணவர்களையும் அவற்றில் ஈடுபடுத்திக் கொண்டார்.
* கவிமணியான இவர் கவிதைகள் எழுதுவதிலும் பாடல்களை எழுதி இசையமைப்பதிலும் விற்பன்னராகத் திகழ்கின்றார்.
* இவர் சொற்பொழிவாளராகவும், கதாப்பிரசங்கியாகவும், பட்டிமன்ற நடுவராகவும் கலை உலகில் சஞ்சரித்த வண்ணமுள்ளார்.
* கதாப்பிரசங்கத்தில் பல பாத்திரங்களை ஏற்று நடிப்பதில் திறமைமிக்கவராக கதாப்பிரசங்கி இருக்க வேண்டும். அந்த வகையில், அன்னைதாசன் தன் குரல் வளத்தால் பல பாத்திரங்களை திறமையாக வெளிக்காட்டினார்.
* அம்மனின் தீவிர பக்தரான இவர் இருக்கின்றமையால் அன்னைதாசன் என எல்லோராலும் அழைக்கப்பட்டு வருகின்றார்.
* ''தமிழ் மொழிக்கு இன்னல் என்றால் தமிழனே இல்லை தந்தை செல்வா வாழ்விலே என்றுமே தொல்லை......'' என்ற பாடலை தமிழரசுக் கட்சியின் மேடையில் பாடி தன் நாட்டின் பற்றையும் வெளிப்படுத்தினார்.
* விவசாய ஆசிரியரான இவர் மண்ணைப் பற்றியும் அதன் திறனைப் பற்றியும் பாடல்களைப் பாடி விவசாய உலகிற்கு பெருமை சேர்த்துள்ளார்.
* இவருக்குப் பிடித்தமான ரஞ்சினி ராகத்தில் பல பக்திப் பாடல்களையும் சமூகச் சீர்திருத்தப் பாடல்களையும் இயற்றி கதாப்பிரசங்கங்களில் பாடியுள்ளார்.
* கவிமணி அன்னைதாசன் பாடிய ''அம்மா அம்மா என் தாயே....'' என்ற பாடலுக்கு பொற்கிழி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
* 'கவிமணி', 'சொல் இசைச்செல்வர்', 'இன்னிசைச் செல்வர்', 'அன்னைதாசன்' போன்ற பல பட்டங்களைப் பெற்றுள்ள இவர், கதாப்பிரசங்கத்தில் என்றும் தன்னிகரில்லாத கலைஞனாக திகழ்கின்றார்.



தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவலுப்பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி இரண்டு)

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

சட்டமும் சமூகமும் 18




வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம்

1936 இல் தனிச் சிங்கள மந்திரி சபையின் உதயம் இதனைத் தீவிரப்படுத்தியது. ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மையாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தலைவரான டி.எஸ். சேனநாயக்க, எமக்கு தமிழர்களின் ஒத்துழைப்போ சகவாழ்வு அரசியலோ (Politics of Co - existence) தேவையில்லை என்பதை எடுத்துக்காட்டவே இந்தத் தனிசிங்கள மந்திரி சபையை (Pan Sinhala Cabinet) அமைத்தோம் என்றார்.

இந்தத் தனிச் சிங்கள மந்திரி சபை அமைக்கும் கணித சூத்திரத்தை சொல்லிக் கொடுத்தவர் தமிழரான கணிதப் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் என்பவரே யாகும்.

இதன் பின்னர் 1939 - 1945 வரையான காலப் பகுதி இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் இலங்கை அரசியல் மௌன மாகவே நகர்ந்தது. இக் காலகட்டத்தில் கோல் டி கொட் (Calldicott) என்பவரது அறிக்கை வெளியானது. அதில் சிறுபான்மை மக்கள் சார்பாகவும் கையொப்பம் இடவேண்டிய நிலைமை இருந்தது.

தந்திரோபாய சூழ்ச்சிகளில் புகழ்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டி.எஸ். சேனநாயக்க சில தமிழர்களை தனது சூழ்ச்சிப்பொறியில் சிக்கவைத்தார். கோல் டி கொட் அறிக்கைக்கு எதிராக காலஞ்சென்ற S.V.J. செல்வநாயகம் (தந்தை செல்வா) ஒரு கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்தார். அந்தக் காலத்துச் சட்ட சபை உறுப்பினர்களாகவிருந்த இராஜகுலேந்திரன் (பண்டாரவளை), தியாகராஜா ஜெகந்நாதன் (மன்னார்), அருணாசலம் மகாதேவா (யாழ்ப்பாணம்), R.R. நல்லையா (கல்குடா), சுப்பையா நடேசன் (காங்கேசன்துறை) எனப் பலர் D.S. சேனநாயக்கவின் தந்திரோபாய அணுகுமுறைகளுக்குப் பலியானார்கள்.

இக் காலகட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலம் லண்டன் சென்றிருந்தார். அவர் அங்கிருந்து கொண்டு தான் இலங்கை திரும்பும்வரை எத்தகைய அரசியல் தீர்வு முயற்சியிலும் ஈடுபட வேண்டாம் என்று அப்போதைய அரசாங்க சபை தமிழ் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். ஆனால், ஆளுக்கு ஆள் அவர்கள் பதவிக்கு பேரம் பேசியமையால் எட்டப்படக்கூடிய உடன்பாடுகள் யாவும் பிசுபிசுத்துப்போயின.

அக்கால அரசாங்க சபையில் அங்கத்துவம் வகித்த பேராசிரியர் சுந்தரலிங்கம் மற்றும் சுப்பையா நடேசன் (ச. நடேசபிள்ளை) போன்றோர் நிபந்தனைகள் எதுவுமற்ற சரணாகதி அரசியலை (Surrendering Politico Sans Condition) மேற்கொள்ளாமல் ஆக்கபூர்வமான நிபந்தனைகளோடு கூடிய இணக்கப்பாட்டு அரசியலை (Co-existence plus conditions) மேற்கொண்டிருந்தால் தமிழர்கள் சில வரப்பிரசாதங்களை அடைந்திருக்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஈ.கு. சேனநாயக்க அதற்கு கொள்கையளவில் உடன்பாடு கொண்டிருந்தார் என சில விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், தமிழ்த்தலைமைகள் ஆளுக்கு ஆள் வெவ்வேறு கோணங்களில் கம்பளம் விரித்து சரணாகதி அரசியலையே நோக்கி வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறான குழம்பிய அரசியல் சூழ்நிலையில் தாம் விரும்பிய இலக்கை (TARGET) அடைவதற்காக பொதுவாக அரசியல்வாதிகள் மிக மோசமான- மிக மட்டகரமான சுயநலவாதிகளாகவே மாறிவிடுவது இலங்கை அரசியல் வரலாற்றில் சர்வ சாதாரணமான விடயமாகும். இத்தகைய அரசியல் நிலைமைகளை glimsy Political Environment என்பார்கள்.

குழம்பிய குட்டையில் மீன்பிடித்தல் சுலபம் என்பதன் தாற்பரியமும் இதுவே யாகும். 1947 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கையின் ஜனப் பிரதிநிதிகள் சபையின் தேர்தலின் போது தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று கோஷம் எழுப்பிய தமிழ்க் காங்கிஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் கோரிக்கைகளையும் கைவிட்டு கோஷத்தையும் தூக்கி எறிந்து விட்டு ஈ.கு. சேனநாயக்காவின் மந்திரி சபையில் கைத்தொழில் மந்திரிப் பதவியை ஏற்றார் என்றால் கொள்கை, கோட்பாடுகள் எவையுமே அரசியல் சாக்கடையில் விலைபோகும் பண்டப் பொருட்கள் என்பதில் ஐயமில்லை.

*(தொடரும்...)*

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்


**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சந்நியாசி மீது கோபம் கொண்ட ஒரு தேசத்து அரசன், அவரை தூக்கிலிட உத்தரவிடுகிறான். கொல்வதற்கு முன்பு அரசன் அவரிடம், ''உனக்கு இன்னும் 24 மணிநேரம் தான் இருக்கிறது - நீ அதை எப்படி வாழவேண்டும் என்று விரும்புகிறாய்'' என்று கேட்டார்.

இதைக் கேட்ட சந்நியாசி சிரித்தவாறு, ''நான் எப்போதும் வாழுவது போல - கணத்துக்குக் கணம் வாழ்கிறேன்! என்னைப் பொறுத்தவரையில், இந்த கணத்துக்கு மேல் எதுவும் கிடையாது. ஆகவே, எனக்கு இன்னும் 24 மணிநேரம் இருந்தால் என்ன? 24 வருடம் இருந்தால் என்ன? எனக்கு இதில் எந்த வேறுபாடும் இல்லை. நான் கணத்துக்குக் கணம் வாழ்ந்துவந்திருப்பதால், இந்தக் கணமே எனக்கு அதிகம் தான். இந்த ஒரு கணம் போதும்'' என்றார்.

அரசர் ஒன்றும் புரியாமல் விழித்தார். அப்போது சந்நியாசி அரசரிடம், ''நான் உங்களை ஒன்று கேட்க அனுமதி கொடுங்கள். நீங்கள் தொடர்ந்து இரண்டு கணங்கள் ஒரே சமயத்தில் வாழமுடியுமா?'' என்று கேட்டார்.

யாருமே அப்படி வாழ்ந்தது கிடையாது. வாழ்வதற்கு ஒரே வழி, ஒரு சமயத்தில் ஒரு கணம் வாழ்வது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | ■ |
| ■ | 08 | 09 | 10 | 11 | ■ | 12 | 13 |
| 14 | 15 | ■ | 16 | 17 | 18 | ■ | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | ■ | ■ | 30 | 31 | 32 |
| 33 | 34 | ■ | 35 | 36 | ■ | 37 | ■ |
| 38 | 39 | 40 | ■ | 41 | 42 | 43 | 44 |
| ■ | 45 | 46 | 47 | ■ | 48 | 49 | 50 |

**இடமிருந்து வலம்**

1. அனுமான், பீஷ்மர் போன்றோரை இப்படி கூறுவார்கள்
8. இனிமை
12. புவி
14. தச்சு வேலைக்கு பக்கபலம் இது
16. நாம் குடியிருந்த கோவில் (குழம்பியுள்ளது)
20. அழகை இதைக் கொண்டு பார்க்க வேண்டும்
23. நான்கு பக்கமும் ஒரே அளவு
27. பித்தம் தலைக்கு ஏறினால் வருவது
30. மரங்களின் சத்துணவு (குழம்பியுள்ளது)
33. அழகிற்கு பெயர் போனவள்
35. மந்தரைக்கு இராமனால் ஏற்பட்ட பெயர்
38. மாலை (திரும்பியுள்ளது)
41. பிரபல்யமான துடுப்பாட்ட வீரர்.
45. அநுகூலம் (குழம்பியுள்ளது)
48. தேவலோக அழகிகள் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

2. மிகப் பிரபல்யமான பெண் எழுத்தாளர்
3. கயிற்றின் மூலப்பொருள் (இறுதி எழுத்தின்றி தலைகீழாகவுள்ளது)
4. விருட்சம்
5. பயம் (குழம்பியுள்ளது)
7. சிறுவர்கள் விரும்பியுண்ணும் மாவினால் செய்த உணவு
13. மிகுதி (குழம்பியுள்ளது)
14. ஒரே நேரத்தில் பல மனிதர்கள் எழுப்பும் சத்தங்கள்
18. பழத்தைத் தருகின்ற முள்ளு மரம்
22. தானியங்களுள் ஒன்று (தலைகீழ்)
25. சிவனின் மறுபெயர்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
36. ஒரு கிரகம்/ஒரு கிழமை (தலைகீழ்)
40. வீட்டைச் சுமந்துசெல்லும் ஊர்வனவற்றுள் ஒன்று
44. இனியது, இயற்கையானது, மருத்துவ குணம் கொண்டது (தலைகீழ்)

**குறுக்கெழுத்துப் போட்டி 16க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா | த | ல | ர் | தி | ன | ம் | ■ |
| ப் | ■ | க | வ | ண் | ■ | யா | போ |
| பி | ழை | ■ | சு | ம | ங் | க | லி |
| ய | ம | ன் | ■ | ம் | ர | ■ | யோ |
| ம் | ■ | பு | சி | ■ | சு | ப | ■ |
| ■ | து | ல | வ | ■ | க | வ | லை |
| கீ | ரி | ■ | ப் | ப | ம் | ள | அ |
| ■ | அ | ம் | பு | லி | ■ | ம் | ■ |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. திருமதி. தி. சிதம்பரநாதன்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

2. து. மாலோகன்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

3. சேரன் அமரலிங்கம்
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

**குறுக்கெழுத்துப் போட்டி 18க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




நிருபர் : "கச்சேரி முடிந்து வரும் போது புகாரி ஓட்டலில் சாப்பிட்டதாக எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"
ஆசிரியர் : "பாடகர் 'முகாரி' ராகத்தில் பாடினார் என்பதற்கு பதில் 'புகாரி' ராகத்தில் பாடினார் என்று எழுதியிருக்கிறே!"




"சேர், நம்ம ஆபீஸில் இரண்டு கம்பியூட்டர்கள் வாங்கி வைத்துவிட்டு அறையைப் பூட்டிவிட்டுப் போனீகளே..."
"ஆமாம், இப்போ என்ன ஆயிற்று?"
"காலையில் வந்து பார்த்து குட்டி போட்டிருக்கு"




"ஏன் அந்தக் கடையில் கடிகாரத்தைத் திருடினாய்?"
"டாக்டர் மூன்று மணி நேரத்துக்கொரு முறை மருந்து குடிக்கச் சொன்னார். என் கையில் கடிகாரம் இல்லை ஐயா"




"சீதை மீது இராவணனுக்கு ஒரு தலைக் காதல்"
"போடா பத்துத் தலைக் காதல்!"




"நீ எதற்கு மூக்கு முட்டக் குடிக்கிறாய்?"
"உனக்குத் தெரியாதா நிறைகுடம் தளும்பாது என்று"




"எனக்கு 'ஜான்டீஸ்' என்று வைத்தியம் செய்தீர்களே..."
"ஆமாம், இப்போது எப்படி?"
"முழும் டீஸ் ஆகிவிட்டது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

***"விழியில் விழுந்து இதயம் கனிந்து உயிரில் கலந்த உறவே..."*** என்பது வைரமுத்துவின் வைரமான வரிகள். காதல் என்ற பதத்திற்கு மிகச்சிறந்த வரைவிலக்கணமாக மேற்சொன்ன வரிகளைக் குறிப்பிடலாம். காதலின் புனிதத் தன்மையை அதன் தாற்பரியத்தை - நிலைத்தன்மையை பறை சாற்றும் சிறந்த வரிகளாக இவை மிளிர்கின்றன.

தற்போதைய சூழமைவில் எமது பிரதேசத்தில் நடந்தேறும் காதல் கதைகளை நோக்கினால் வைரமுத்துவின் வரிகளில் சிறிய மாற்றம் செய்து "செல்போனில் விழுந்து உடல்கள் கலந்து வயிற்றில் வளர்ந்த கருவே..." என்று மாற்றிப் பாடினால் சாலவும் பொருத்தமானதே.

**"சுமார் 60 வயது வயோதிபர் தனது செல்பேசிக்குள் ஆபாசப் படம் வைத்து பார்த்ததை நான் கண்டு அதிர்ந்தேன்" -இப்படிக்கூறினான் எனது நண்பன். இது உண்மையில் சிந்திக்கவேண்டியது.**

குடாநாட்டில் அண்மைக்காலமாக நடந்தேறுகின்ற பாலியல் வக்கிரகங்கள், கலாசாரச் சீரழிவுகள் பற்றி சிந்திக்கும் போது இவ் வரிகள்தான் என் மனதில் கருக்கொள்கின்றன.

அண்மையில் நடந்த ஒருசம்பவம் இங்கு பதிவுசெய்யப்படுகின்றது. யாழ். நகரில் இருந்து சற்றுத்தொலைவிலுள்ள ஒதுக்குப்புறமான பகுதி, இரவு 7.00 மணி இருக்கும். அன்றைய தினம் பூரணை தினம் என்பதால் நிலவின் ஒளி இருளை விழுங்கி அப்பகுதியை பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. அப் பகுதியில் சற்றே ஆள் நடமாட்டம் குறைந்திருந்தது. சுமார் 20 வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி செல்போனில் உரையாடியபடி அங்கும் இங்கும் அலைந்தபடி இருக்கிறாள். தோளில் கைப்பை தொங்கியது.

பார்ப்பதற்கு நவநாகரிகமாகத் தோன்றினாலும் தோளில் தொங்கிய கைப்பையை வைத்து ஏதோ ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறாள் என்பதை மட்டும் ஊகிக்கமுடிந்தது. தற்போது தனியார் நிறுவனங்களின் பெருக்கம் யாழ். குடாநாட்டை உலுப்பிக் கொண்டிருக்கின்றன. தனியார் நிறுவனங்கள் பல தமது வேலை நேரத்தை அதிகரித்துள்ளமையால் சில வேளை வேலைமுடிந்து வீடு செல்வதற்காக உறவினர்களையோ அல்லது வேறு ஏதோ அவசரத் தேவை கருதி செல்போனில் உரையாடுகிறாள் என்கிறது மனம்.



சிறிது நேரம் கழிந்திருக்கும். அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்தபடி 'விர்' என விரைந்துவந்தது ஒரு 'ஹையஸ் வான்'. அந்த வானிலிருந்து இரு இளைஞர்கள் இறங்கினார்கள். வந்து இறங்கிய இளைஞர்களில் ஒருவன் அந்த யுவதியிடம், "என்னைத் தெரியுமா?" என்றான். இன்னொருவன் தம்முடன் கொண்டு வந்த ஐஸ்கிறீமை அந்த யுவதியிடம் நீட்டினான். மூவரும் ஒன்றாக இருந்து ஐஸ்கிறீம் உண்டனர். சிறிது நேரத்தின் பின்னர் அந்த யுவதி ஹையஸ் வானுக்குள் ஏறினாள். அந்த இளைஞர்களும் கூடவே ஏறினார்கள்.

திடீரென அவ்விடத்திலிருந்து வேகமாக புறப்பட்டு கண்களிலிருந்து மறைந்தது அந்த வான். இதற்குப் பின்னர் என்ன நடந்திருக்கும் என்பது பற்றி இங்கு சொல்லத் தேவையில்லை. யாழ். குடாநாட்டில் இவ்வாறான பாலியல் வக்கிர செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது செல்பேசிக் கலாசாரம் தலைதூக்கியுள்ளதால் பல ரகங்களில் விதவிதமான செல்பேசிகள் குடாநாட்டை ஆக்கிரமித்திருக்கின்றன. முன்னர் செல்பேசியைப் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலும் தொழில்புரிவோர் மற்றும் செல்வந்த வர்க்கத்தினராகவே இருந்தனர். ஆனால், இன்று நிலமை இன்று முற்றிலும் மாறிவிட்டது.

பாடசாலை செல்லும் 10 வயது மாணவனிலிருந்து வயோதிபர் வரை செல்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். இதிலும் விசித்திரம் என்னவென்றால் வயோதிபர்கள் கூட செல்பேசியைத் திறம்படக் கையாள்வதில் அதீத திறமையை வெளிப்படுத்துகின்றனர் என்றால் பாருங்களேன்.

எனது நண்பன் ஒருவன் கூறிய கருத்து இங்கு சிந்திக்கற்பாலது. சுமார் 60 வயது முதியவர் தனது செல்பேசிக்குள் ஆபாசப் படம் வைத்துப் பார்த்ததை தனது கண்களால் நேரில் பார்த்தாகக் கூறினான். முன்னரெல்லாம் ஆபாசப்படங்கள் பார்ப்பதென்றால் இளைஞர்கள் படும்பாடு பெரும்பாடு. அதைப்பற்றி இங்கு விபரித்தால் பெரும் பத்தி நீளும்.

ஆனால், தற்போது கைக்குள்ளேயே 'எல்லாம்' வந்துவிட்டதால் ஆபாசப்படங்களையும் செல்பேசிக்குள் கொண்டுவந்துவிட்டார்கள். தாம் பார்த்து ரசித்தாலும் பரவாயில்லை. தமது நண்பர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்களுக்கென புளூரூத், எம்.எம்.எஸ். மூலம் பரப்பிவிடுகின்றனர். தான் கெட்டது மாத்திரமின்றி ஊரையே கெடுத்து விடுகின்றனர்.

'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பழமொழிக்கு இணங்க சிலர் வாழத்தலைப்படுவதனால் தான் இன்றும் இவ்வுலகு இருக்கின்றது போலும்.

ஆண் நண்பர்களிடையே இத்தகைய ஆபாசக் காட்சிகளை அனுப்பினால் பரவாயில்லை. தமது பெண் நண்பிகளுக்கும் அனுப்பி மகிழும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

நவீன வடிவில் பல கம்பனிகளின் பெயர்களில் செல்லிடப் பேசிகள் இன்று பெண்களின் கரங்களிலும் தவழ்கின்றன. பாடசாலை செல்லும் மாணவிகள் முதல் வேலைக்குச் செல்வோர் வரை வயது வேறுபாடின்றி இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். செல்பேசி என்பது தூரத்தில் இருப்பவர்களுடன், அதுவும் அவசர தேவை கருதி உரையாடுவதற்குப் பயன்படுத்தப்படுவது.

ஆனால், இப்போது உரையாடுவது என்ற எல்லைக்கப்பால் இப்படியான ஆபாசக் காட்சிகளை பதிவேற்றம் செய்து, அவற்றை வயது வேறுபாடின்றி ரசிக்கும் மனோபாவம் எம் சமூகத்தில் தலைதூக்கியுள்ளது. இதனால் தான் இன்றை இளம் சந்ததி அழிவுப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கிறது.

ஆக இன்றைய இளைஞர்-யுவதிகளிடையே அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கைத்தொலைபேசிப் பாவனையும் ஒன்றாகிவிட்டதன் பின்னணியில் அதன் தாக்கம் எமது சமூகத்தின் கலாசார வேரையே சிதைக்கும் அளவுக்கு புற்றுநோய் போல் பரவிவருகிறது. செல்போன்களின் மூலம் உண்டாகும் காதல் உறவு, பெண்களின் கர்ப்பப்பை வரை ஊடுருவிச் சென்று கருவை நிரப்பி விட்டுத் தப்பித்துச்செல்லும் தன்மை வாய்ந்தது.

இதனால் தான், வேண்டத்தகாத கர்ப்பங்களும் சட்ட விரோத கருக்கலைப்புக்களும் வீதியோர சிசுக்களும் என பட்டியல் நீள்வதற்கு வழியேற்படுத்திக் கொடுப்பனவாக இச்செயல்பாடு வழிவகுக்கின்றது. எனவே தான், கட்டுக்கடங்காமல் திசைமாறிச் சென்றுகொண்டிருக்கும் இன்றைய இளம் சந்ததியை திருத்தி, சரியான வழியில் அவர்கள் பயணிப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும்.

**உதிஷ்டிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை – கொலை – கைது – விடுதலை



அவர்களது உலகம் அசாதரணமானது. சிறை சென்று திரும்புவதும் சரி, நீதிமன்ற படியேறுவதும் சரி அவர்களுக்கொன்றும் பெரிதான விடயமுமல்ல. விரும்பியோ, விரும்பாமலோ காக்கிச் சீருடைகள் முதல் கறுப்பு கோர்ட் போட்டவர்கள் வரை அவர்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள். சில வேளைகளில் நெருங்கிய நட்பும் கூட உண்டு.

யாழ்ப்பாணத்திற்கும் திருட்டுக்களுக்குமான வரலாறு நீண்டதாகவே இருக்கலாம். ஆனால், அதுபற்றி ஆராய்வது எம் நோக்கமல்ல. சாதாரண வழிப்பறிகள், கோவில் உண்டியல் உடைப்பு, கூரை பிரித்து களவென பரிணமிக்கத் தொடங்கிய வரலாறு, போராட்ட ஆரம்ப காலங்களில் வங்கிக்கொள்ளைகளாக விரிவுபெற்றிருந்தது. முன்னர் கத்திகள் சகிதம் களம் இறங்கியவர்கள். இப்போது 9 எம்.எம். நவீன 'மைக்றோ பிஸ்டல்கள்' சகிதம் திரிகின்றனர்.

யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்ட பின்னர் கொள்ளைகளென்பது மட்டுமே யாழ்ப்பாணத்தில் எஞ்சிப்போயிருந்தன. பெரும்பாலான வழிப்பறித் திருடர்கள், கோயில் உண்டியலுடைப்போரெல்லாம் கொள்ளையர்களாகப் பதவியுயர்வு பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தாரிடம் ஆண்டாண்டு காலமாகப் பரவியிருக்கும் சேமிப்புப் பழக்கமும் கொள்ளைகளுக்கு பிரதான தொழில் ஊக்குவிப்புக்குக் காரணமாகியிருக்கிறது.

குறிப்பாக, தங்கநகை சேமிப்பும், தாறுமாறாக அதிகரித்திருக்கும் அதன் விலையும் கொள்ளைகளுக்கு இப்போது சுலபமான காரணமாகிவிடுகின்றது. ஆனாலும், பலரும் ஊகிப்பது போல இப்போதெல்லாம் கொள்ளையர்கள் ஒன்றும் கர்ணகடூரமுகம் கொண்டவர்களாக இருந்துவிடுவதில்லை. எங்களையும், உங்களையும் போன்றே அவர்களும் சாதாரணமாகவே இருக்கின்றார்கள். ஹீரோ ஹொண்டாக்களிலும், ரி.வி.எஸ். சைக்கிள்களிலுமே அவர்கள் அலைகின்றனர்.

தப்பாத இலக்கொன்றினில் அவர்கள் ஈட்டிக்கொள்ளும் பணம், உங்களது பலமாத வருமான தொகுப்பாகவே இருக்கலாம். ஆடம்பரங்களின் சின்னங்களாகிவிட்ட கைத்தொலைபேசிகள், மோட்டார் சைகிள்கள், சங்கிலிகளென கொள்ளையர்களுக்கும் தேவைகள் அதிகமுண்டு. எனினும், அண்மைக் காலங்களில் பட்டினியால் கொள்ளைக்குப் போனதாக எவர் தரப்பிலிருந்தும் தகவல்களில்லை.

சட்டங்கள் கடுமையாகும்போதே, குற்றங்கள் குறைகின்றதென்பது யதார்த்தமான விடயமொன்று. நம் நாட்டினில் சட்டங்களில் காட்டப்படும் தளர்வு, அதிலிருந்து மீட்டெடுத்துவிட கறுப்பு கோர்ட் அணிந்தவர்களது அணிவகுப்பு குற்றங்களைக் கட்டுப்படுத்த தவறியேவிடுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான முன்னணி கறுப்பு கோர்ட்காரர் அதிகரித்த வேலைப்பளுவுடனேயே எப்போதும் இருக்கின்றார்கள். யாழ். மாவட்டத்தின் ஐந்து தனிப்பிரிவுகளிலுள்ள நீதிமன்றங்களுக்கென அவர்கள் கார்களில் வேகமாக அலைந்து திரியவேண்டியுமிருக்கிறது.

இருண்ட நாட்களில் இடம்பெற்ற பெரும்பாலான கொள்ளைகளுக்கு சாட்சிகள் இல்லையெனப்படுவதால் விட்டுவிடலாம். ஆனால், யுத்தம் இல்லாத இப்போதைய காலப்பகுதியினில் ஆயுதமுனைக் கொள்ளைகள் யாரால் நடத்தப்படுகின்றன?

**யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல பரிய கொள்ளைச் சம்வங்களில் பின்னணியில் பிடிபட்டவர்கள் வெறும் சைக்கிள் திருடர்களும் வழிப்பறி கொள்ளையார்களும் மட்டுமே. ஆனால் இதுவரைக்கும் கொலை - கொள்ளையுடன் ஈடுபட்டவர்கள் கைதாகவும் இல்லை; கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.**

கும்பலாக வந்த கொள்ளையர்கள், துப்பாக்கியால் சுட்ட கொள்ளையர்கள், துப்பாக்கியை காட்டி மிரட்டிய கொள்ளையர்கள் பற்றியெல்லாம் செய்திகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், தமது விரலசைவில் வைத்துக்கொண்டுள்ளதாகக் கூறும் பாதுகாப்பு தரப்பிடமோ அவ்வாறான எவருமே பிடிபட்டதாகவே தகவல்களில்லை.

சாதாரணமாக பொலிஸார் வசம் அகப்படும் திருடர்கள் கூட சைக்கிள் திருடன், சிலைத்திருடன் சில வேளைகளில் வழிப்பறித் திருடன் என்றாகிவிடுகின்றது. பிடிபட்ட சைக்கிள்களுடன் பொலிஸ் அதிகாரிகள் நின்று எடுத்துக்கொண்ட புகைப்படங்களை நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். ஆனால், களவுபோன நூறு பவுண் நகைகளுடனோ அல்லது இலட்ச ரூபாய் பணத்துடனோ புகைப்படங்கள் வெளியாவதில்லை.

ஆண்டின் முற்பகுதியினில் யாழ்ப்பாணத்தைக் கலக்கிய கொள்ளையர்கள் பற்றிக் கண்டறிந்துவிட்டதாக யாழ். மாவட்ட தளபதியே கூறிவிட்டார். ஆனால், அவர்களில் யாரும் கைதுசெய்யப்பட்டதாகவோ, நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டதாகவோ இன்று வரை பொலிஸ் தரப்பிலிருந்து தகவல்கள் ஏதுமில்லை. அவ்வாறாயின் இராணுவத் தளபதி வழங்கிய தகவல்களை வைத்து கொள்ளையர்களை பொலிஸாரால் பிடிக்கமுடியாமல் போய்விட்டதோவென்று உங்களைப் போல எனக்கும் சந்தேகங்கள் இன்று வரை உண்டு.

ஆனாலும், பரவலாக பொது மக்களே திரண்டு பிடித்துக்கொடுத்த கொள்ளையர்களுக்கு என்ன நடக்கின்றதென்பதே இப்போதைய கேள்வி. பொலிஸாரிடம் கையளிக்கப்படும் இவர்கள் ஒரு சில வாரங்களில் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால், முறைப்பாடு செய்த பொதுமக்களும், சாட்சிகளும் நீதிவேண்டி வருடக்கணக்கில் பொலிஸ் நிலையங்களும், நீதிமன்றங்களும் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

கொள்ளையர்களை பிணையில் விடுவிக்க பேரம்பேசும் தரப்புக்களோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிட்ட கதைப்பதேயில்லை. ஏனெனில், அதில் அவர்களுக்கு வருமானமும் கிட்டப்போவதில்லை. அலைக்கழிப்பினால் ஒதுங்கிப் போகும் மனோநிலையையே பெரும்பாலான பொது மக்கள் சந்தித்துவருகின்றனர்.

பொலிஸ் தடுப்புக்காவலியாயினும் சரி, சிறையிலாயினும் சரி, குற்றவாளிகள் மோசமான நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. சிறையிலிருந்து வழக்கு தவணைகளுக்கு வந்துசெல்லும் சந்தர்ப்பங்களில் அவர்களை வெளியில் எடுத்துவிட குடும்பங்களோ அவர்களது முகவர்களோ பேரம் பேசுவதிலே ஈடுபடுகின்றனர்.

ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் யாழ்ப்பாணத்து நிலைபற்றி சொன்னதே தற்போது நினைவு வருகின்றது. பெரும்பாலான கறுப்பு கோர்ட்காரர் தமது தரப்புக்கு ஆதரவாக சட்ட ரீதியான விடயங்களை முன்வைத்து வாதாடுவதென்பது யாழ்ப்பாணத்தில் கிடையாது. பிணையில் விடக்கோரி வெறுமனே கருணை கோருகின்றனர். அவ்வாறு பிணையில் விடுவிப்பதற்கும் பேரங்களா? என்பது பற்றி எனக்குத் தெரியாதென்கிறார்.

உண்மையில் குற்றங்கள் மீதான தண்டனைகள், கடுமையாக இருந்தாலேயே எதிர்வரும் காலங்களில் அவை தடுக்கப்படும். அதை செய்யவேண்டியவர்கள் யார்? பூனைக்கு மணி கட்டப்போவது யார்? என்பதே முன்னாலுள்ள கேள்வி.

ஏற்கெனவே கல்வியங்காடு பகுதியில் கொள்ளையர்களை பொது மக்கள் மடக்கிப் பிடித்த வேளையில், அவர்களுள் ஒருவர் உயிரிழக்க காரணமெனக் கூறி 32 இற்கும் அதிகமான கிராம மக்களே மாதக்கணக்கில் சிறையில் இருந்த அனுபவம் மக்களுக்கு முன்னுதாரணமாகவே இருக்கின்றது.

• பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

கல்வியூடாக மாணவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், மிகப் பெரும்பான்மையான இளைய வயதினர் கல்வி கற்கும் எமது சமுதாயத்திலும் அவர்கள் தமது வாழ்க் கைக்குத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையே என்பதை அவதானிக் கின்ற பொழுது வேதனையாக இருக்கின்றது.

இலங்கையினுடைய கல்வித் திட்டத்திலும் பாட விதானங்களிலும் பிள்ளைகளுக்குத் தேவைப்படுகி ன்ற - உபயோகப்படக் கூடிய பல விடயங்கள் அவர் களின் வயதுக்கேற்ற விதத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி - பாலியல்பு பற்றி - கர்ப்பமடைதல் பற்றி - கர்ப்பந் தரித்தலைத் தடுப்பது பற்றி - பால்வினை நோய்கள் பற்றி எல்லாம் பாடவிதானங்களில் இருக்கின்றன. ஆயினும், பரீட்சையை மையப்படுத்திய கற்பித்தல் செயற்பாடுகளில் இவை முக்கியத்துவம் இழந்து போய்விடுகின்றன. வளருகின்ற பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்ற மிக அவசியமான விடயங்கள் கற் பிக்கப்படாமல், ஆராயப்படாமல், கலந்துரையாடப் படாமல் போகின்றன.

"நான் யோசிக்கேல்லை...உடலுறவு கொண்டால் கர்ப்பந் தரிப்பன் எண்டு எனக்குத் தெரியாது... தெரிஞ்சிருந்தால் நான் தவிர்த்திருப்பன்..."

இவ்வாறு கூறிய பிள்ளை ஒரு உயர்தரம் படிக்கும் மாணவி. 'மொக்கு' அல்ல. ஆனால், படிக்க வேண்டியதைப் படிக்காதுவிட்ட ஒரு பேதை.

கல்விப்புலத்தின் தூண்களாக இருக்கின்ற ஆசி ரியர்கள் பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைப் புகட்டுகின்ற தார்ப்பரியமுடைய, தற்றுணிவு மிக்க, பொறுப்பான ஆசிரியர்களாக இருக்கவேண்டியது அவசியம். பாடவிதானத்தை முறையாகக் கற்பிக் கின்ற அதேவேளையில், காலத்தின் தேவை கருதி யும், மாறிவருகின்ற புறச்சூழலின் தன்மை கருதியும் தேவையான பல விடயங்களையும் சேர்த்துக் கற்பிக் கும் மிகப்பொறுப்பானவர்களாக அவர்கள் மாற வேண்டும்.

அதற்கு மேலாக, பிள்ளைகள் தங்களுக்கு வரு கின்ற 'எல்லாவிதமான' சந்தேகங்களையும் தயக்க மின்றிக் கேட்டுத் தெளிவு பெறக்கூடிய ஒரு 'வெளி யை'யும், 'வாய்ப்பை'யும் ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் சிறந்த பெற்றோராகவும் இருக்கவேண்டும்; இருப்பார்கள்.

**கல்வி நிறுவனங்கள்:**

கல்வி நிறுவனங்கள் மாறிவருகின்ற உலகச் சூழ லுக்கேற்ப தம்முடைய மனப்பாங்குகளையும் மாற் றிக்கொள்ள வேண்டும். தமது மாணவர்கள் வழி தவறிப்போகின்ற பொழுது, அவை நல்ல மேய்ப்பர் களாக, அம் மாணவர்களை அணைத்து தம்வழி கொண்டு செல்லவேண்டும்.

டெங்கு நோய் வந்த ஒரு மாண வி போல், வீதி விபத் தில் அகப்பட்டுக் காலுடைந்து கைத்தடியுடன் வரும் ஒரு மாணவி போல், 'ஓடிப்போய்த் திரும்பிவந்த' மாணவியும் தனது கல்வியைத் தொடர, எதிர்காலத்தின் பிரகாசத் தைத் தேட வாய்ப்பளிக்க வேண்டும். உலக முன் னேற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்வியை அபிவிருத்தி செய்யவிழைகின்ற நாம் அதிலே இருமை நிலை கொள்ளக்கூடாது.

வெளிநாடுகள் போல் ஒவ்வொரு வகுப்பறையி லும் கணினியும், இணையத்தள வசதியும் இருக்க விரும்புவது யதார்த்தம் என்றால், அதே நாடுகள் போல எமது தேசத்திலும் மிக இளைய வயதிலேயே பாலியல் நடத்தைகளின் அதிகரிப்பு ஏற்படும் என்ற யதார்த்தையும் புரிந்துகொள்ள வேண்டும். அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதற்கான தகுந்த, சரியான, சாலப்பொருத்தமான எதிர்வினைகளைக் காட்ட வேண்டும்.

(தொடரும்...)

வைத்தியக் கலாநிதி சா. சிவயோகன்
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- சூரிய ஒளியால் கருமையாகும் சருமத்திற்கு பால் பவுடரோடு பப்பாளிக் காயின் சாற்றை கலந்து தேய்க்கவும். உலர்ந்த பிறகு வெதுவெதுப்பான வெந்நீரில் கழுவவும்.
- சமையல் சோடாவைத் தண்ணீல் கரைத்து அந்தப் பசையை பூச்சி கடித்த இடத்தில் தடவவும்.
- கரும் புள்ளிகளைப் போக்க ஒரு எளிய வழி இதோ: 2 மேசைகரண்டி பயற்றம் மா, ஒரு மேசைகரண்டி உப்பு, ஒரு டேபிள் ஸ்பூன் 'ஓட்' கலந்து முகத்தில் பூசி ஊறிய பிறக கழுவலாம்.
- உடம்பில் துர்நாற்றமா? குளிப்பதற்கு 10, 15 நிமிடங்களுக்கு முன் வியர்வை அதிகமாகத் தோன்றும் பகுதிகளில் எலுமிச்சைத் துண்டு வைத்து அழுத்தித் தேய்க்கவும். நாள் முழுவதும் சுரக்கும் வியர்வையில் துர்நாற்றம் இல்லாமல் போய்விடும்.
- உங்களுக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுகிறதா? சர்க்கரையை நாக்கில் வைத்து சிறிது சிறிதாக விழுங்கினால் விக்கல் தானாகவே நின்றுவிடும்.
- மிளகாய், மிளகாய்ப் பொடியைப் பயன்படுத்துவதால் கைகளில் ஏற்படும் எரிச்சலைப் போக்க கைகளை மோரால் கழுவினால் எரிச்சல் நின்றுவிடும்.
- ஒரு மேசைகரண்டி போரிக் பவுடரை ஒரு எலுமிச்சம் பழத்தின் சாறோடு கலந்து தலையில் தேய்த்து பிறகு குளித்தால் பொடுகு நீங்கிவிடும்.
- உலர்ந்த கூந்தலா உங்களுக்கு? இந்த முறையை கையாளுங்கள்: ஒரு கப் தண்ணீரில் சில துளிகள் பேபி ஒயிலைக் கலந்து அதை 'ஸ்ப்றே' பாட்டிலில் ஊற்றவும். தலைமுடியில் ஸ்ப்ரே செய்து சிக்கை எடுத்துவரவும். எண்ணெய் பிசுக்கு ஏற்படாமல் இது முடியை ஈரமாக்குகிறது.
- சம அளவு தேங்காய் எண்ணெயும் எலுமிச்சைச் சாறும் கலந்து தீப்பட்ட வடுவின் மீது இரவில் தேய்க்கவும். மறு நாள் கழுவவும். ஒரு மாதம் தொடர்ந்தாற் போல் செய்துவர நல்ல மாறுதல் கிடைக்கும்.



- மூக்குத்தி, காது தோடுகள் சில சமயங்களில் அரிப்பையும் கொடுக்கும். அந்த இடங்கள் வீங்கிவிடும். தோடு போடும் துளை, அதைச் சுற்றி உள்ள பகுதிகளைச் சிறிது பெருங்காயம் கலந்த தண்ணீரால் கழுவவும்.
- கரட் சாறோடு தேன் கலந்து தவறாமல் தடவிவர முகப்பரு மறையும்.
- மாதவிலக்கு சமயத்தில் பிடிப்பு ஏற்பட்டு அவதியா? பூண்டை உரித்து நெய்யில் வறுக்கவும். ஆறிய பிறகு சர்க்கரை கலந்து இரண்டு துண்டு சாப்பிடவும். 10 நிமிடங்களில் வலி குறையும்.
- வீட்டில் புதிதாக வர்ணம் பூசிய வாசனை தொடர்கிறதா? ஒரு வெங்காயத்தை வெட்டி அறையில் வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அன்னையை வளர்ப்போம்



இன்றைய நவீன உலகின் உலகமயமாக்கலில் சிக்கித் தவிக்கும் தமிழ் சமுதாயம் தமது அன்பு மழலைகளுக்கு பெயர் சூட்டுவதில் தடுமாற்றம் காண்கின்றது. அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணச் சமூகத்தினர் தாம் தமிழ் பேசுபவராக இருந்தும் தமது குழந்தைகளுக்கு வாயில் உச்சரிக்க முடியாத அளவிற்கு பெயரிடுகின்ற அவலநிலை தள்ளப்பட்டுள்ளனர். பல ஆண்டு காலம் இப்பூமியில் உயிர்வாழப் போகும் அன்பு மழலைகளின் பெயரில் கூட எமது தமிழ் அன்னையின் அழகைத் தொலைத்து விடும் நிலை உருவாகியுள்ளமை கவலையளிக்கின்றது.

சான்றோர்களும் பெரியோர்களும் தமிழன்னையினைப் பெரும் பாடுபட்டு வளர்த்துச் சென்றிருந்த வேளையில், அவர்களின் வழியில் பிறந்த நாம் இன்று தமிழ்மொழி என்ற ஒரு மொழி உண்டோ? என சில வருடங்களின் பின்னர் கேட்கப் போகும் வினாவுக்கு அடியெடுத்து வைக்கின்றோம். எத்தனையோ பெரியோர்கள் வளர்த்துச் சென்ற தமிழ் அன்னையின் அழகையும் மெருகையும் நம் தமிழர்களால் காப்பாற்றமுடியவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் கூட இலக்கியங்களை படைத்தாலும் அவர்களின் மழலைகளுக்கு தமிழ்மொழியில் பெயரிடுவது அரிதாகவே உள்ளது. அழகான தமிழ் மொழியில் அன்பு மழலைகளுக்கு பெயரிடுங்கள். இதுவே நீங்கள் தமிழ் அன்னைக்குச் செய்யும் நன்றியாகும்.

**சான்றோர்களும் பெரியோர்களும் தமிழ் அன்னையினை பெரும் பாடுபட்டு வளர்த்துச் சென்றிருந்த வேளையில் அவர்களின் வழியில் பிறந்த நாம் இன்று தமிழ்மொழி என்ற ஒரு மொழி உண்டோ? என சில வருடங்களின் பின்னர் கேட்கப் போகும் வினாவுக்கு அடியெடுத்து வைக்கின்றோம்.**

குழந்தைப் பருவத்தில் கல்வி கற்பதற்காக முன்பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு ஆங்கில மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகளை ஆங்கில மொழியில் கற்பித்து ஆளாக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் பெருவிருப்பாகும். ஆனால், அன்னையின் அரவணைப்பில் மனம் மகிழ்ந்து பாடித்திரிந்த குழந்தைகள் கல்விகற்கும் அத்திபாரமாக முன்பள்ளிகளை நாடுகின்றன. ஆனால், பெற்றோர்கள் பலரும் தமது குழந்தைகளை ஆங்கில மொழிமூல முன்பள்ளியிலேயே கல்விகற்க வைக்கின்றார்கள். அங்கு ஆங்கில வார்த்தையினை பயிலும் சிறார்கள் அம்மா என்ற சொல்லின் முதல் எழுத்தான 'அ' ஐக் கூட தெரியாது போகின்றார்கள்.

இந்நிலையினையே இன்றைய சூழலில் உண்மையில் காணக்கூடியதாக உள்ளது. ஆங்கில மொழியும் பிறமொழிகளும் அறிவை வளர்ப்பவையே. ஆனால், தமிழ் அன்னை உயர்ந்த அறிவினையும் உறுதிமொழிகளையும் நமக்கு அள்ளி வழங்குபவள். தமிழ் மொழியின் தன்மை, செம்மை, செழுமை என்பன தமிழ் அன்னையின் அணிகலன்களாகும்.

மேலும் அன்புள்ளங்களுக்கு வாழ்த்துக்கள், வாழ்த்து மடல்கள் என்பவற்றைப் பரிமாறுகின்ற போது அதனை தமிழ்மொழியில் வாழ்த்தப் பழகிக் கொள்ளுங்கள். இதனால், வாழ்த்துக்கூறுபவரின் உள்ளத்திலும் வாழ்த்துப் பெறுபவரின் உள்ளத்திலும் பூரிப்பு ஏற்படும்.

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள் வாழ்த்தின் போது HAPPY BIRTH DAY TO YOU என்பதற்கு பதிலாக, "இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்!" என மனதார வாழ்த்துங்கள். எவ்வளவு சந்தோஷம் மனதில் உண்டாகும் என எண்ணிப் பாருங்கள். காலையில் "GOOD MORNING' என்பதற்குப் பதிலாக "காலை வணக்கம்!" என்று கூறுங்கள். நாம் உச்சரிக்கும் ஒவ்வொரு தமிழ் வார்த்தையிலும் தமிழ் அன்னை மனம் குழைவாள். தமிழராகப் பிறந்த நாம் தமிழ்மொழியின் செழுமையைப் பாதுகாப்போம்; தமிழ் அன்னையை வளர்த்தெடுப்போம்.

*'வாழ்க தமிழ் வளர்க நின் புகழ்'*

# மூலிகை மருத்துவம்

## மிளகு

தாவரவியற் பெயர்: Piper Nigram

ஆங்கிலப்பெயர் : Peper

மறுபெயர்கள் : காயம், திரங்கள், மரிசம்.

உபயோகம் : கைப்பு, கார்ப்பு

செய்கை: அகட்டுவாய் அகற்றி, பசித்தீ தூண்டி, வெப்பமுண்டாக்கி, முறைவெப்பகற்றி, தடிப்புண்டாக்கி, வீக்கம் உருக்கி, வாதமடக்கி.



குணம்: பாண்டு, சுரம், பித்தம், வலிப்பு போன்றவற்றை நீக்கும்.

உபயோகம்: மிளகு இலை, நொச்சியிலை, வாதமடக்கி இலை வகை சமன் எடுத்து இவற்றை கொதிக்கவைத்த நீரினை கீழ் வீக்கம், அடிபட்ட வீக்கம் வலி ஆகியவற்றுக்கு ஒத்தடம் இட அவை குணமாகும்.

மிளகினை வறுத்து இடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு 5-10 குன்றி எடை எடுத்து தேனில் குழைத்துக் கொடுக்க வாயு, கபம், அஜீரணம் மிகுந்த ஏப்பம் ஆகியவை நீங்குவதுடன் பசியையும் உண்டுபண்ணும். இச்சூரணத்தில் 50 கிராம் அளவு 1/2 படி நீர்விட்டு அண்ணளவாக 1/2 மணி நேரம் வரை காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க தொண்டைக்கம்மல், தொண்டைப் புண் ஆகியவை நீங்குவதுடன் வயிறு சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

மிளகுத்தூள், வெங்காயம், உப்பு இவற்றை ஒன்றாகச் சேர்த்து அரைத்து தலையில் காணும் புழுவெட்டுக்குப் பூசிவர அந்த இடத்தில் மயிர் முளைக்கும்.

மிளகு - அண்ணளவாக 50 கிராம், சோம்பு (பெருஞ்சீரகம்) - 68 கிராம், தேன்-340 கிராம்.

இவற்றை லேகியமாகப் பக்குவம் செய்து தினம் 3 வேளை உண்டுவர மூலநோய் குறையும்.

மிளகினைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள் ஆவன - மிளகுத் தைலம், மிளகுச் சூரணம், மிளகு லேகியம் என்பன ஆகும்.

மிளகு வேரினை செவ்வீயம் என அழைப்பர். இது போன்று கண்டீடை என அழைக்கப்படும் திரவியமும் மிளகின் குணத்தை ஒத்துக் காணப்படுகின்றது. இது மிளகிலும் காரம் குறைந்ததாக காணப்படுகின்றது.

இதன் உபயோகம் ஆவன: செவ்வீயத்தை (மிளகு வேர்) சூரணம் செய்து தினம் 2 வேளை 1-2 கிராம் அளவு கொடுக்க அல்லது வேரை குடிநீர் செய்துகொடுக்க நாட்பட்ட சுரம், நீடித்த இருமல், சுவையின்மை, குரல் கம்மல் ஆகியவை நீங்கும்.

**ரீ. உமா** *(2 ஆம் வருடம்)*
லங்கா சித்த, ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு தன்னம்பிக்கை ஒரு வழிகாட்டி

நம்மைப் பற்றி நாம் என்ன எண்ணம் கொண்டிருக்கின்றோம் என்பதைப் பொறுத்துத்தான் நமது சந்தோசமும் சாதனையும் அமைகின்றன. இதனையே தன்னம்பிக்கை என்போம். தன்னால் முடியும் என்று எண்ணுபவரின் எதிர்காலம் ஒளிமிகுந்ததாய் அமையும். நான் நல்லவன், கெட்டிக்காரன், சோம்பேறித் தன்மையற்றவன்; என்னால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று கூறுபவனிடத்து தன்னம்பிக்கை இருக்கும்.

இது வாழ்வின் ஜீவத்துடிப்பு. அதன் ஆணிவேர் தன்னம்பிக்கை தான். தன்னம்பிக்கை உள்ளவன் மனித வாழ்க்கையின் கடைசி நிமிடம் வரை போராடுகின்றான். ஒரு மனிதன் தனது வாழ்வில் பல்வேறு வழிகளிலும் வெற்றியீட்டுகின்றான் என்றால் அதற்கு காரணம் அவன் தன்மேல் கொண்டுள்ள தன்னம்பிக்கை தான். தன்னம்பிக்கை உள்ளிருந்து புறப்படும் ஒரு சக்தி. அது உள்ளவர்களை அவர்களின் பேச்சின் மூலம், செயலின் மூலம், நடையுடை, பாவனைகள் மூலம் உடனே அறிந்து கொள்ளலாம்.

தன்னம்பிக்கை உடையவனிடத்தில் சிறந்த எண்ணத்திறனும் துணிவும் ஏற்படுகின்றன. அவன் எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அஞ்சாமல் திடமாக துணிவுடன் செயலாற்றுவதன் மூலம் வெற்றியடைந்து மேன்மை பெறுகிறான். வாழ்வில் உயர்ந்த நிலை அடையவேண்டும் என்பதே அவனது திடமான குறிக்கோளாகும். தன்னம்பிக்கை உடையவனுக்கு அவை கனவுகள் அல்ல.

ஏனெனில், அவனது துணிவும் எண்ணத் திறமையும் அவற்றை நிறைவாக்கி நிஜமாக நிகழவைக்கின்றன. இவனது குறிக்கோளுடன் கூடிய தொடர் சிந்தனை அவனது எண்ணப்பாட்டை அவனது ஆழ் மனதில் உணர்வலைகளாகப் பதித்துவிடுகிறது. அவனது நினைவற்ற மனதில் பதிந்துள்ள அலைகள் அவனது எண்ணத் திறமையை வளர்த்து தன் குறிக்கோளை அடையத் தேவையான வழிமுறைளை உணர்த்துகின்றன.

தன்னம்பிக்கை உருவாவதற்கான காரணிகளைக் குறிப்பிடும் போது ஒரு குழந்தை, தாயின் கருவில் உருவாகும் போது தாயானவள் போதியளவு பாதுகாப்பு-அரவணைப்பை வழங்கும் போது அது வெளியுலகிற்கு வந்து பல இடர்பாடுகளும் சூழ்நிலைகளையும் சந்திக்கும் போது தந்தையும், தாயும் தைரியமூட்ட - ஊக்கமூட்ட குழந்தை நிஜமான தன்னம்பிக்கையுடன் வளரும். எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் தட்டிக்கொடுங்கள்; தைரியம் கொடுங்கள். குழந்தை தானாகவே தன்னம்பிக்கையுடன் வளர்ச்சி பெறும்.

ஒரு மனிதன் முழுமையாக தன்னம்பிக்கையுடன் வளர்ச்சி பெற அவனின் கல்வியமைப்பு, மதச்சார்புள்ள வளர்ப்பு முறை, பாலுணர்வு, அறிவும் செயலும் போன்ற ஏராளமான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சிறு குழந்தையாயிருக்கும் போது குழந்தை தான் செய்யக்கூடிய பல எளிதான காரியங்களுக்கு நாம் தடைக்கல்லாக அமையாமல் அது தானாக- சுதந்திரமாக செய்ய பயிற்சி கொடுத்தால் குழந்தைக்கு 'நம்மால் முடியும்' என்ற பெருமிதத்துடன் கூடி உற்சாகம் சுயமாக எழுகின்றது. இதனால், அதற்கு தன்னம்பிக்கை ஏற்படும். கொஞ்சம் வளர்ந்தவுடன் சுமார் 14-16 வயதில் சற்று சிரமமான பயிற்சிகளை - சோதனைகளை கொடுத்தால் மாணவன் இவ்வுலகில் தான் சந்திக்கும் பல தோல்விகளும் வெற்றிக்கான படிகளே என்ற உணர்வை- உலக இயல்பை- தோல்விகளை சமாளிக்கும் மனோபாவத்தைப் பெற வழிவகை செய்கிறது.

தன்னம்பிக்கை குறைவதற்கான காரணிகளை நோக்குமிடத்து தாயின் கருவில் உருவாகும் போது தாயானவள் அதனை ஏற்கமுடியாமலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் போராடுகின்றாள். குழந்தை வெளியுலகிற்கு வந்தததும் பல்வேறுபட்ட போராட்டங்களை சந்திக்கின்றது. அதற்கு முகம் கொடுக்க முடியாமல் எதிர்நீச்சல் போடாது தவிக்கின்றான். பெற்றோரின் அன்பு, ஆதரவு கிடையாமல் போகின்றது. உலகத்தையே வெறுக்கின்றான். கல்வியில் ஆர்வமில்லாமல் காணப்படுகின்றான்.

**ஒரு மாணவன் கூறுகின்றான், "என்னுடைய பெற்றோர் என்னை 'மக்கு' என்று அடிக்கடி பேசுவார்கள்." இம்முறை கூடிய மதிப்பெண் எடுக்காவிட்டால் அனாதை இல்லத்தில் சேர்ப்பதாக கூறியதாகவும் மற்றைய சிறுவன், தான் வீட்டில் இருப்பதிலும் பார்க்க மருந்து குடிப்பது மேல் எனவும், தன்னை வீட்டிற்கு வரவேண்டாம் என கூறியதாகவும் கூறுகிறான்**

ஜெ. தயானந்தி

இதற்கு உதாரணமாக, பரீட்சையில் பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் 3 சிறுவர்கள் பரீட்சையை எழுதுகின்றனர். நல்ல மதிப்பெண் கிடைக்கவில்லை. எனவே, ஒரு மாணவன் கூறுகின்றான், "என்னுடைய பெற்றோர் என்னை 'மக்கு' என்று அடிக்கடி பேசுவார்கள்." இம்முறை கூடிய மதிப்பெண் எடுக்காவிட்டால் அனாதை இல்லத்தில் சேர்ப்பதாகக் கூறியதாகவும், மற்றைய சிறுவன், தான் வீட்டில் இருப்பதிலும் பார்க்க மருந்து குடிப்பது மேல் எனவும், தன்னை வீட்டிற்கு வரவேண்டாம் என கூறியதாகவும், மூன்றாவது சிறுவனின் பெற்றோர் இம்முறை பரவாயில்லை கெட்டிக்காரன். அடுத்த பரீட்சையில் கெட்டித்தனமாக படித்து நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என தைரியம் ஊட்டினார்கள்.பார்த்தீர்களா? பெற்றோரின் வளர்ப்பு முறையை. பிள்ளைகள் ஒரு பரீட்சையில் தவறிவிட்டால் உலகமே இருண்டு விடாது. படிப்பும், பரீட்சையும் நாம் வாழ்வதற்கான பல வழிகளில் ஒரு வழி என்று சொல்லிக் கொள்ள வேண்டும்.அவர்களில் மிகக் கவனம் எடுக்க வேண்டும்.

(தொடரும்..)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்



ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம் சிறப்பிடம் பெறுகின்றது. சிலம்பினால் விளைந்த வரலாறு பற்றி உரைக்கிறது. சங்கமருவிய காலத்தின் இறுதியில் எழுந்த இக் காப்பியம் கண்ணகியை கதாநாயகியாக வைத்தும் கோவலனை கதாநாயகனாகவும் கொண்டு புனையப்பட்டது. புகார், மதுரை, வஞ்சி போன்ற மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு சிறப்பாக செந்தமிழ் இன்பம் பயக்க இளங்கோ அடிகளால் யாக்கப்பட்டுள்ளது.

இதன் சிறப்பை பாரதியார் கூட 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று விதந்துரைக்கிறார். இக் காவியத்தினுடைய பிரதானத்துவம் பெறும் கருப்பொருள் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்ற பேருண்மையை உணர்த்துகின்றது. ஒருவன் செய்த வினை பின்னர் அவனையே திரும்பி வந்து சேரும் என்ற சித்தாந்தத்தை குறித்துரைக்கிறது.

கலிங்க நாடு அக்காலத்தில் எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்கிய தேசம். இந்நாட்டின் தலைநகரங்கள் இரண்டு. ஒன்று சிங்கபுரம் மற்றையது கபிலபுரம். இந்த இரு தேசங்களிலும் இரு அரசர்கள் ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். தமிழினத்திற்கென்று பிறவியிலிருந்து இருக்கும் கெட்ட குணமான ஒற்றுமையின்மை இவர்களிடத்தேயும் இருந்தது.

ஒற்றுமைக் குறைவினால் சங்ககாலம் முதலே அதாவது சங்ககாலத்தில் மன்னர்களுக்கிடையே இருந்த முரண்பாடுகள், இதனால் யுத்தம், அதனால் விளைந்த அழிவுகள், உயிரிழப்புக்கள் எல்லாம் எம்மினத்தின் மத்தியிலே நிகழ்ந்தன. தற்போதும் கூட தமிழர்களிடையே புரையோடிப் போயிருக்கும் ஒற்றுமையின்மையால் குத்துவெட்டுக்கள், குழிபறிப்புக்கள் என தொடர்ந்தவண்ணமே உள்ளன.

தமிழர்களின் பிறவிக்குணமான ஒற்றுமையின்மை இந்த இரு அரசர்களிடையேயும் இருந்தது. அதனால், சிங்கபுரத்திற்கும் கபிலபுரத்திற்கும் மக்கள் சென்றுவருவதில் சிக்கல்கள் இருந்தன. நாட்கள் இவ்வாறு சென்றுகொண்டிருக்கையில் கபிலபுரத்திலிருந்து சங்கமன் என்ற பொன் விற்கும் வியாபாரி சிங்கபுரம் வந்து நகைவாணிபம் புரிந்தான். இதனையறிந்த பரதன் என்ற சங்கமனுடன் கடும் பகை கொண்ட ஒருவன் சிங்கபுரத்து மன்னனிடம் சென்று சங்கமன் என்ற நகை வியாபாரி கபிலபுர மன்னனின் ஒற்றன் என்று பொய்மொழி புகன்றான். இதனால், சிங்கபுர மன்னன் சினங்கொண்டு சங்கமனைக் கொன்று விட்டான். தீர விசாரிக்காது தண்டனை வழங்குதலினால் பின்னர் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதற்கு இச்சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

சங்கமன் என்ற நகை வியாபாரியின் மனைவி மிகுந்த கற்புடையவள். அவள் பெயர் நீலி. தனது கணவன் கொல்லப்பட்டான் என்ற செய்திகேட்டு பெருந்துயர் அடைந்தாள். பதின்நான்கு நாட்கள் நிலைகுலைந்து அலைந்தாள். மலை ஒன்றின் மீதேறி நின்று "என் கணவனுக்கு இடர்புரிந்தோர் மறுபிறவியில் துயரமுற்று மாள்க" என்று சாபமிட்டு வீழ்ந்து மடிந்தாள்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்
தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கமைய சங்கமனை கொல்வித்த அவனது பகைவனாகிய பரதன் மறுபிறப்பில் கோவலனாகப் பிறந்தான். முன் செய்த தீவினையால் கோவலன் கொலையுண்டான். சிங்கபுர மன்னன் பாண்டியனாகப் பிறந்து ஆராயமல் தீர்ப்புச்சொல்லி மாண்டான். இனி கண்ணகியின் வரலாற்றைச் சுருக்கமாக பார்ப்போம்.

காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவள் கண்ணகி. மாநாயகன் புதல்வி. வீரபத்தினி, தருமபத்தினி, பத்தினிக்கடவுள் போன்ற பல சிறப்புப் பெயர்களால் புகழப்படுகிறாள்.

இவள் மாசாத்துவான் மகனான கோவலனை மணந்தாள். இவன் பெரு வணிகன், செல்வந்தனும் கூட. மாதவி என்ற கணிகைப் பெண்ணுடன் நட்புக்கொண்டு பொருள் முழுவதும் இழந்தான். இதனால் மனந்திருந்தி மாதவியை விட்டு கண்ணகியின் பால் வந்தான். பொன், பொருள் அனைத்தையும் இழந்து வறிய நிலையில் வந்த கோவலனை கண்ணகி வணங்கி இன்முகம் காட்டி வரவேற்றாள். வறுமை நிலையில் இருந்தமையால் கண்ணகி தன்னுடைய காற்சிலம்பு ஒன்றைக் கழற்றிக்கொடுத்து விற்றுவிட்டு பணத்தைக் கொண்டு வருமாறு கூறினாள். அதன்படி கோவலன் காற்சிலம்பை ஒரு பொற்கொல்லனிடம் கொண்டுசென்றான். அக்கொல்லன் பாண்டிய மன்னனிடம் சென்று, "உங்கள் அரசியுடைய காற்சிலம்பை திருடியவனை இனங்கண்டுள்ளேன்" என தெரிவித்து கோவலனைப் பிடித்து பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தான். பாண்டிய மன்னன் சரி, பிழை எதுவென்று நன்கு ஆராயாது கோவலனைக் கொன்றான்.

கோவலன் கொல்லப்பட்டான் என்ற செய்தியறிந்த கண்ணகி இடியோசை கேட்ட நாகம் போல கலங்கினாள். ஆற்றொணாத் துயருடன் அரசனிடம் சென்று தனது மற்றொரு காலில் இருந்த சிலம்பைக் காண்பித்து தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிருபித்தாள். பாண்டிய மன்னனோ, "பொற்கொல்லன் கதையைக் கேட்டு ஆராயாமல் தீர்ப்புக் கூறி அப்பாவி உயிரைப் பறித்துவிட்ட நானா அரசன்; நானே கள்வன்" என்று கூறியவாறு உயிர் துறந்தான். அவன் மனைவியான கோப்பெரும் தேவி கூட அரசனுடன் சேர்ந்து மாண்டாள் என சிலப்பதிகாரம் செப்புகின்றது. ஆனால், கண்ணகியோ தன்சினம் அடங்காமல் தனது கொங்கையைத் திருகி எறிந்து மதுரையையே எரித்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.


இளங்கோவடிகள் இவ் வரலாற்றை மதுரைச் சங்கப் புலவர்களுள் ஒருவரான சாத்தனார் நேரில் கண்டு உரைத்த வரலாற்றைக் கேட்டுப்பாடினார். அப்படி சிலப்பதிகாரம் பாடி முடித்தபோது உலக மக்களால் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகளை உரைக்கிறார்.

"பரிவும் இடுக்கண்ணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனுண் துறமின் உயிர்க்கொலை அஞ்சுமின்
தானம் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீ நட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருள் மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக்கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன் மாஞாலத்து வாழ்வீர் ஈங்கென்."

என்கின்றார்.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# உளர் புதினம்



முயற்சி என்ற ஒன்றை மட்டும் மூச்சுப் போல சுவாசிப்போம்'. ஆட்டோகிராப் படத்தில் வரும் பாடலொன்றின் வரிகள் இவை.

22 வயதான இளம் பெண் ஒருவர் அரச பொது முகாமையாளர் சேவையில் நியமனம் பெற்று கடமையாற்றுகின்றார்.

இச்சேவை முன்பு லிகிதர் சேவை, எழுதுநர் சேவை (Clerk) என அழைக்கப்பட்டது. முயற்சிக்கு முன் உதாரணமாக அவரைப் பற்றிப் பார்ப்போம்.

அரச துறை சேவைக்கு எமது மக்களிடம் உள்ள கவர்ச்சி அபரிதமானது. அப்பெண் மிக இளம் வயதில் போட்டிப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றி முதல் தரத்திலேயே அரச நியமனம் பெற்றுள்ளார். 40, 45 வயதுக்கு அண்மையில் வந்தும் கூட அரசாங்க வேலைக்காகப் போராடும் பலர் எம் மத்தியில் உள்ளனர். இப்பெண் தனது அனுபவம் பற்றிக் கூறுகையில், "குறித்த நியமனத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டதனை பத்திரிகையில் பார்த்தேன் எனது விண்ணப்பதைச் சரியான முறையில் பூரணப்படுத்தி அனுப்பினேன். அன்று முதல் தினசரி ஒரு மணித்தியாலம் வீதம் பரீட்சைக்குரிய விடயங்களைக் கற்கத் தொடங்கினேன். வழிகாட்டல் புத்தகங்களை சொந்தமாகவும், இரவலாகவும் வாங்கினேன். விடயங்களைத் தேடிக் கற்றேன்.

அரச சேவையில் போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டோரிடம் ஆலோசனை கேட்டேன். விடயங்களைக் கற்றேன். வழிகாட்டல் வகுப்புக்கள் நடத்தப்பட்ட போது அங்கு சென்று பரீட்சையின் நுட்பங்களைத் தெரிந்துகொண்டேன். விண்ணப்பம் அனுப்பிய பின் 4 மாதங்களில் பரீட்சை நடந்தது. நாளாந்தம் இரவில் மாத்திரம் ஒரு மணி நேரம் கற்றேன். 4 மாதங்களில் 120 மணித்தியாலம் கற்றது பரீட்சையில் கை கொடுத்தது. தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இப்போது சனி, ஞாயிறு நாள்ட்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பில் ஈடுபட்டுளேன் என்றார்.


பரீட்சை அனுமதி அட்டை வந்ததும் பதறியடித்து கற்காமல் விடாமுயற்சியுடன் கற்ற இவரின் முன் அனுபவம் சிறந்த முன்மாதிரியல்லவா? பின்பற்றி வெற்றி காணுங்கள்.

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்

## வரலாற்றினூடாக ஒரு பயணம்




*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

Analytical Picture (5) III மின் இயந் திரவியற் காலப் பகுதி (1840 - 1940) ஹார்னஸ் மின்சாரத்தின் (Harness Electricity) கண்டுபிடிப்பானது இக் காலப் பகுதியில் முக்கிய வளர்ச்சி கண்டிருந்தது. தகவல்களானது இக் காலப் பகுதியில் மின்னியல் துடிப்புக்களாக மாற்றீடு செய்யப்பட்டது.

இக் காலப் பகுதியில் தொலைத்தொடர்பில் ஏற்பட்ட வளர்ச்சியாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்: (i) 18 ஆம் நூற்றாண்டில் voltaic battery அறிமுகம்.


(ii) தந்தி 1800 களில் அறிமுகம். (iii) சாமுவல் மோஸ் என்பவரால் 1830 இல் Morsecode உருவாக்கப்பட்டது.


(iv) தொலைபேசி 1876 இல் Alexander Graham Bell என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.


Picture (6) (v) Guglelmo Marconi என்பவரால் 1894 இல் வானொலி கண்டுபிடிக்கப்பட்டது. மின் இயந்திர கணிப்பொறி முறையில் ஏற்பட்ட இக்கால வளர்ச்சியாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். (i) Census Machine Picture (7) (ii) ஆரம்ப கால Punch card - Picture (8) (iii) சர்வதேச வியாபார இயந்திர கூட்டுத் தாபனமாகிய IBM உருவாக்கம் - Picture (9) (International Business Machines Corporation) (iv) Harvard பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Ph.D. மாணவனாகிய Howard Ailcen, Mark I ஐ உருவாக்கினார். இதன் உருவாக்கம் 1942 இல் பூர்த்தியாகியது.

7,50,000 பகுதிகளைக் கொண்டது. இவ்வமைப்பு 8 அடி உயரமும், 51 அடி நீளமும் 2 அடி அகலமும் 5 தொன் நிறையும் கொண்டது. Picture (10) IV இலத்திரனியற் காலப்பகுதி (1940 - இன்றுவரை) முதலாவது முயற்சியாக 1940 இன் ஆரம்ப காலப்பகுதியில் இலத்திரனியல் வெற்றுக் குழாய்கள் உருவாக்கப்பட்டன. (Electronic Vaccum tubes) முதலாவது அதிவேக பொதுவான பாவனைக்கான (General purpose) கணினிகள் இவ் இலத்திரனியல் குழாய்களைப் பயன்படுத்தின.

Picture (11) ENIAC (Electronic Numerical Integrators and Computer) 1946 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலத்திரனியல் வெற்றுக் குழாய்களைக் கொண்டு அமைக்கப்பட்டது.




(தொடரும்...)

**மேகலா பாலமுரளி**
*விரிவுரையாளர்,*
*கொழும்பு பல்கலைக்கழகம்*

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.
**முகவரி**
**'வீரகேசரி' கிளைக் காரியாலயம்**
**117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.**

### B'-'1 P1-u

எழுதும் விரல்கள் உனக்காக
உருக்கொண்டு வருகின்றது
என்னையும் ஆழம் தேடி
உன்னையும் இணைக்கிறது

அசைவின் காலங்கள்
அன்பை தெளிக்கிறது
குளிர்ச்சிகளை அளந்தே
வெக்கை தணிக்கிறது.

நடுக்க பொழுதுகளில்
சூட்டை தேடுகிறது
நினைவை புதைத்து
கனவை தொலைக்கிறது.

விழிகள் மூடாத
இரவுகளிலும் கூட
விருந்துப் படையல்கள்
தொடரணி தொடர்கிறது.

*மருதங்கேணியூர்*
*வே.வே. அகிலேஸ்வரன்.*

### அறியாத பிறவி

பூபாள ராகம் மீட்கும் - என்
பூங்குயில் அவதாரமே
ஓ நீதானே என்றும்
ஒளிகொண்ட பரப்புக்களே!

என் கதை கேட்டுவிட்டு
உனக்குள்ளே சோகமேன்?
என்னருகே வந்து நித்தம்
ஏதேதோ சொல்கிறாய்.

ஆசைக்கு நீ போடும் திரைதான் - உன்
அந்தரங்க உறுப்புக்களின் மறைப்போ!
தேனும் தினைமாவும் அருந்த - என்
உமிழ்நீரும் ஊறிக்கொள்ளுதே!

சட்டங்கள் படைத்து நானுமே
சங்கதிகள் பலவும் காணவந்தேன்
காதலின் வகுப்பறையில்
கல்வி கற்கிறேன்
என் எதிர்காலம்
எப்படியோ தெரியலையே!

*மருதங்கேணியூர்*
*வே.வே. அகிலேஸ்வரன்.*

### என்னடா உலகம்

நடந்து வந்த பாதை தன்னை
திரும்பிப் பாரடா - மக்கள்
நாய் போல் அலைகிறார்கள்
ஏன் என்று கேளடா!

பட்டினியால் இருந்தபோது
மானத்துடன் வாழ்ந்தவர்கள் - இப்போ
சோறு தின்று பெருத்தவர்கள்
மானத்தை விற்கிறார்கள்

தேகசுகம் தேடிக்கிட்டு
அலைகிறார்கள் மைனர்கள் - இங்கே
அரைகுறை ஆடையுடன்
திரிகிறார்கள் நவநாக (அநாக)ரிக மங்கையர்

என்னடா உலகமிது என்று
வாயில் கை வைக்கிறார்கள் பெரியவர்கள்
இது தான் இந்தக் கால 'ஸ்ரயில்'-என்று
இளசுகள் கொட்டமடிக்கிறார்கள்

*- நீற்றா இராசலிங்கம்*
*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடக்கின் பெரும் போர்

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான 3 நாள் துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்தியகல்லூரி அணி முதலில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் மேற்படி கல்லூரிகளுக்கிடையிலான 105 ஆவது 3 நாள் பயிற்சி துடுப்பாட்டப் போட்டி இரு அணி ரசிகர்களின் ஆர்ப்பாரிப்புக்களுக்கு மத்தியில் பரபரப்புடன் ஆரம்பமாகியது.

கடந்த 4 வருடங்களாக யாழ்.மத்திய கல்லூரி அணியே தொடர்ச்சியாக வெற்றி பெற்று நடப்புச் சம்பியனாக திகழ்கிறது.

இம்முறையும் அந்த அணி வெற்றி பெறுமா? அல்லது யாழ்.மத்திய கல்லூரி அணியின் தொடர் வெற்றிக்கு முற்றுப் புள்ளி வைக்குமா? என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இவ்வருடம் யாழ்.மத்தியகல்லூரி அணி பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகளில் பல வெற்றிகளை பதிவு செய்திருக்கிறது. அதே போன்று சென்.ஜோன்ஸ் கல்லூரியும் பல வெற்றிகளை குவித்து சவாலான ஒரு அணியாக திகழ்கிறது.

எது எப்படியோ சமபலம் கொண்ட இரு அணிகளில் எந்த அணி வெற்றி பெறும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## உடற்பயிற்சி அணியினர் கௌரவிப்பு

தெல்லிப்பளை

தேசிய மட்டத்தில் உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடம் பெற்ற இளவாலை சென்.ஹன்ரியரசர் கல்லூரி அணியினரை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் அருட் தந்தை ஜே.ஏ.ஜேசுதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினராக வடமாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்,மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீக வியற்துறைத்தலைவர் பேராசிரியர் பி.ரவிராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சாதனையாளர்களைபாராட்டினர்.

## சிங்களப் பாடலுக்கு ரசிகர்கள் ஆட்டம்

(அலுவலக நிருபர்)

நேற்று ஆரம்பமாகிய வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்தியகல்லூரி அணிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்ட போட்டியின் போது பார்வையாளர் அரங்கில் சிங்களப் பாடல்கள் ஒலிக்கவிடப் பட்டிருந்தது.

யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிய இரு அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் இரு கல்லூரி அணி ரசிகர்களும் பெரும் ஆரவாரத்துடன் பார்வையாளர் அரங்கைச் சுற்றி ஆடிப்பாடியிருந்தனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் அதுவும் தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் இத்தகைய சிங்கள மொழிப் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டிருந்தமை பலரது வகனத்தையும் ஈர்த்தது.

## விளையாட்டு விழாவில் தடகள போட்டிகள்

கைதடி

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழாவின் தடகளப்போட்டிகள் இம் மாதம் 19 ஆம்,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.


நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப் போட்டிகளில் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் விளையாட்டு வீரர்கள் பங்குபற்ற உள்ளதாக பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.






அளவெட்டி அரநோதயாக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பாண்ட் வாதிய அணிவகுப்பினைப் படத்தில் காணலாம்.

(படம் தெல்லிப்பழை)




கொக்குவில் இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வரவேற்பு நடன நிகழ்வைப் படத்தில் காணாலம்.

(படம்:- தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்களை விழுங்கிய பேய்மரம்!



பல கிராமங்களில் ஒரு மரத்தை குறிப்பிட்டு சொல்லப்படும் அமானுஷ்ய கதைகள், அங்குள்ள மக்களை பயமுறுத்தி கொண்டிருக்கும். அந்த புளிய மரம் பக்கம் மட்டும் போயிடாதப்பா, அதுலதான் பேய் அண்டி கிடக்கு என எச்சரிக்கும் வார்த்தைகளை கேட்டுவிட்டு அந்த மரத்தை பார்த்தால், பார்ப் பவர்களுக்கும் பயம் தொற்றாமல் இருக்காது. இப் படித்தான் தன்னை பார்க்க வருபவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது ஒரு பேய் மரம். வா.. என் அருகில் வா.. என்று கை விரித்து அழைப்பது போல நிற்கும் இந்த பிரமாண்ட மரத்தின் பழைய கதை பீதியூட்டும்.

தமிழ்நாடு,கோவை ஆர்.எஸ்.புரம், லாலி வீதியோரத் தில் 200 ஏக்கர் பரப்பிலுள்ள குட்டி வனத்தில் அருங்காட்சியகம் அருகே உள்ளது இந்த மரம். ஆள் விழுங்கி மரம் என்பது இதன் செல்லப்பெயர். அருங்காட்சியக அமைதியின் ஊடே, பார்ப்பவர்களை கலவரப்படுத்துகிறது இந்த மரம். அருங்காட்சிய கத்துக்கு தினமும் பெரும் எண்ணிக்கையான பயணிகள், மாணவ, மாணவிகள் வருகின்றனர். இந்த 'டெவில்' மரத்தை உற்று நோக்கும் அவர்கள் அதன் கதையை கேட்டபின் அருகில் கூட செல்வதில்லை.

ஆப்ரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட இந்த மரத்தின் அறிவியல் பெயர் அடன்சோனியா டிஜிடேடா லின். அங்கு இந்த மரத்தை பாட்டில் மரம் என்றும், பேய் மரம் என்றும் அழைக்கிறார்கள். இறந்தவர்களை இந்த மரத்திற்குள் வைத்து புதைக்கும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. மரத்தின் பருமனான பகுதியில் ஆள் உயரத்துக்கு துளை போட்டு அதற்குள் உடல்களை வைத்து, வெட்டி எடுத்த பாகத்தை மீண்டும் வைத்து மூடுவது வழக்கமாக இருந்துள்ளது. இந்த மரங்கள் இப்போதும் காங்கோ நாட்டில் உள்ளன. அதில் மனித உடல்கள் செருகப்பட்டிருக்கும் என்கின்றனர் வன மரபியல் துறையினர்.

ஆபிரிக்கர்கள் இவ்வகை மரங்களை பேயுடன் தொடர்பு கொண்டதாகவே கருதியுள்ளனர். அவர் களிடம் பாட்டில் துர்ஆவிகளின் வசிப்பிடம் என்ற நம்பிக்கை உண்டு. பேயை தன்னுள் கொண்டிருப் பதாலே இதற்கும் பாட்டில் மரம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மனித சடலங்களை தன்னுள் கொள்வதால் இதற்கு ஆள் விழுங்கி மரம் என்ற பெயரும் வந்து விட்டது.

இந்த மரத்தின் அருகே சென்றால் வித்தியாசமான அதிர்வு ஏற்படுவதாக கூறுகிறார்கள் கோவை அருங்காட்சியகத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள். இங்குள்ள குடியிருப்புவாசிகள் அந்தி சாயும் நேரம் வந்து விட்டால், இந்த மரம் அருகில் செல்ல தயங்குகின்றனர். மரத்தை பார்த்து சென்றால் செண்டிமென்டா எதுவும் நல்லா நடக்கிறதில்ல. அது நிச்சயம் 'டெவில்' ட்ரீதான் என்று அச்சம் குறையாமல் சொல்கிறார்கள் சிலர்.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [11.03.11 முதல் 17.03.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### ✱ மேஷம்

மேஷராசி அன்பர்களுக்கு செல வினங்கள் சற்று அதிகமாக இருக்கும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுப றி நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற் படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு.

எதிர்பாராத வகையில் திடீர் செலவீ னங்கள் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ✱ இடபம்

இடபராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். குடும்ப நிலையில் மிகவும் அனுகூலமான பலன்கள் அமை யும். தொழில் நிலைகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலையுண்டு.

மூத்த சகோதரர் வழியில் நன்மையான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமூ கமான பலாபலன்கள் ஏற்படும். பெண்க ளுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்க ளுக்கு வெற்றி உண்டு.



### ✱ மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் சார்ந்த மாற்றங்கள் திடீரென அமையலாம். குடும்பம் நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்பட வாய்ப் புண்டு. தேவையற்ற அலைச்சல் நிலை சற்று அதிகமாக அமைந்திருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலா பலன் உண்டு.

கடன் நிலைகளில் சற்று அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.



### ✱ கடகம்

கடகராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலாபலன்கள் அமை யும். தொழில் நிலைகளில் நல்ல முன் னேற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் அனு கூலமான சிறப்புகள் அமையும் நிலை யுண்டு. பண வரவு மிகவும் திருப்திகர மான நிலையில் அமையும்.

தந்தை வழியில் மிகவும் சிறப்பான அனு கூலங்கள் கிடைக்கும். கடன் நிலைகளில் சுமூகமான பலாபலன்கள் ஏற்படும் நிலை யுண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### ✱ சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைக ளில் அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். உடல் நிலையில் சிறு சிறு சுக யீனங்கள் ஏற்பட்டு மறையும். பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் அமைந்திருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ✱ கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு அனு கூலமான பலாபலன்கள் அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலை கள் காணப்படும். குடும்பத்தில் அனுகூல மான நற்பலன்கள் அமையும் நிலை யுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு.

மனைவி வழியால் நன்மையான பலாப லன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமூ கமான பலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர் கட்கு வெற்றி உண்டு.



### ✱ துலாம்

துலாராசி அன்பர்களே சற்று சுமா ரான பலன்களே அமையும். தொ ழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை அமைந்திருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்ப டும். எதிரிகளின் தொல்லை சிரமங்கள் சற்று அதிகமாக இருக்கும்.

பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமை யும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மா ணவர்கள் முயற்சி தேவை.



### ✱ விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. தொ ழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன் அமையும். பண வரவு அனுகூல மான நிலையில் சிறப்பாக அமையும் பலாபலன் உண்டு.

குடும்பத்தில் சிறப்பான நிறைவான ப லன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்க ளுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### ✱ தனுசு

தனு ராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நன்மையுண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் ஏற்படும். தாயார் வழியில் செல வீனங்கள் அமைய பலன் உண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக் கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மா ணவர்களுக்கு மேன்மையுண்டு.



### ✱ மகரம்

மகரராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் இழுபறி தாமத பலன்கள் ஏற்ப டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூல மான பலன்கள் அமையும். சகோதரர் வழி யில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைக ளில் சற்று மத்திமமான பலனே அமையும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மா ணவர்கள் முயற்சி தேவை.



### ✱ கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமை யும். தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்ற முண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சுப காரிய நிலைப் பலனும் ஏற்படும்.

பண வரவு மிகவும் திருப்திகரமான நிலை யிலே அமையும். உறவினர்களின் மூலம் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### ✱ மீனம்

மீனராசி அன்பர்களுக்கு மத்திம மான சுமாரான பலனே அமையும். தொ ழில் நிலைகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் சற்று சுமாரான மத் திம பலன்களே அமையும்.

பண வரவு தேவைக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும். கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் ஏற்ப டும். பெண்களுக்கு மத்திம பலன் அமை யும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நூற்றாண்டு விழாக் காணும் உரும்பிராய் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் உரும்பிராயில் பிரதான வீதிக்கு மேற்குப் புறத்தில் கம்பீரமான மாடிக் கட்டடத்துடன் காணப்படும் உரும்பிராய் இந்துக் கல்லூரி, மலேசியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே 1950க்கு முந்தைய காலப் பகுதியில் நிலவிய நெருக்கமான தொடர்பை எடுத்தியம்பும் வகையில் 'மலாயா உரும்பிராய் சங்க மண்டபம்' என்ற தெளிவான குறியீட்டுடன் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது.


கல்லூரியின் நூற்றாண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் விழா ஏற்பாட்டுக் குழுவினால் மிக மும்முரமான வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் மூன்று தினங்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நூற்றாண்டு விழாவுக்கு முத்தாரமாக கல்லூரியின் பழைய மாணவனும், தற்பொழுது லண்டனில் வசித்துவருபவருமான கந்தசாமி தர்மகுலசிங்கம் எனும் பரோபகார சிந்தனையுள்ளம் கொண்ட பெருமகனார் தனது சொந்தப் பணமான 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணித்து வரும் மாடிக் கட்டட கட்டுமான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. 120 அடி நீளமும், 49 அடி அகலமும்கொண்டதான முறையில் நவீன கட்டுமானங்களை உள்ளடக்கியதாக இக் கட்டடம் உருவாகி வருகின்றது.

இரண்டு தளங்களைக் கொண்ட இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், கூரையமைப்பு வரையும் நிறைவுபெற்று நூற்றாண்டு விழாவுக்குத் தயாராகிக் கொண்டிருப்பதையும், கட்டுமானப் பணிகளை ஸ்தாபகரின் உறவினர் ஒருவர் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவந்து வேலைகளை உரிய திட்டப்படி நிறைவு செய்வதை அவதானிக்க முடிந்தது. பாடசாலைச் சமூகமானது தனது பாடசாலை வளர்ச்சியின் சகல படி நிலைகளிலும் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரையும் பங்களிப்புச் செய்து வருகின்றது.

வலிகாமத்தில் உள்ள 1-ஏ.பி பாடசாலைகளில் ஒன்றான இந்தக் கல்லூரி 1911 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. கல்லூரி ஸ்தாபகரில் ஒருவரான வைத்தியக் கலாநிதி பு.வல்லிபுரம் ஆரம்ப தினத்தன்று சுருட்டு சுற்றும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 05 சிறுவர்களை சேர்த்து கல்லூரியில் வித்தியாரம்பத்தை ஆரம்பித்து வைத்ததாகக் கூறப்படுகின்றது.

கல்லூரியின் ஆரம்ப தினத்தன்று அதிபராக சின்னையா பணியாற்றியுள்ளார். உரும்



பிராயில் கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அண்மையில் கிறிஸ்தவ குருமாரால் நடத்தப்பட்டுவந்த ஆங்கிலப் பாடசாலையில் கிறிஸ்தவ சமயத்தோடு கல்வி புகட்டப்பட்டமையால், சைவப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த செல்லப்பா என்பவரின் இல்லத்தில் பாடசாலை செயற்படத் தொடங்கியது.

பாடசாலைக்கு உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள் 10 பரப்பு நிலத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த நிலத்தில் கட்டப்பட்ட பாடசாலைக்கு ஆரம்பத்தில் 'உரும்பிராய் இந்துக் கலவன் பாடசாலை' என பெயர் சூட்டப்பட்டது. ஐந்து பிள்ளைகளுடன் ஆரம்பமான பாடசாலையில் அந்த வருடத்திலேயே 70 பிள்ளைகள் சேர்ந்து கொண்டனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் பாடாசாலைக்கு மாணவர்களை சேர்ப்பிப்பதிலும் பாடசாலைக்கான வளவசதிகள் மற்றும் உதவிகளை வழங்குவதிலும் வைத்தியக் கலாநிதி வல்லிபுரம் மற்றும் அமிர்தலிங்கம் அம்பலவாணர் மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்கள் முன்னின்று உழைத்தனர்.

1915 ஆம் ஆண்டு பாடசாலையின் தமிழ்ப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு, அதன் அதிபராக நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை விளங்கினார். தமிழ்ப் பிரிவில் வகுப்பு மூன்று வரை நடைபெற்றது. தமிழ்ப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பு சித்தியடைந்தவர்கள் ஆங்கிலப் பாடசாலையில் இணைக்கப்பட்டு தொடர்ந்து உயர் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியை தரிசிக்கும் போது பிரதான வீதிக்கு மேற்குப் பக்கத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கும் மாடிக் கட்டடத்தின் முகப்பில் 'மலாயா உரும்பிராய் சங்க மண்டபம்' எனப் பொறிக்கப்பட்டிருப்பது கல்லூரிச் சமூகத்திற்கும், கல்லூரிக்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்பினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அத்துடன், நூற்றாண்டு நிறைவு விழா மண்டபத்தை லண்டன் வாழ் பழைய மாணவர் கந்தசாமி தர்மகுலசிங்கம் 2 கோடி ரூபா செலவில் நிர்மாணிப்பதுவும் யாழ். குடா நாட்டிற்கு முன்னுதாரணமான நிகழ்வு என்பது கல்விச் சமூகத்தின் கருத்தாகும்.

மலாயா உரும்பிராய் சங்க மண்டபம் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிகழ்ந்த வலிகாமம் மாபெரும் இடப்பெயர்வின் போது வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்து இடித்து அழிக்கவேண்டிய நிலையில் இருந்தபோது கல்லூரிச் சமூகத்தின் உயர் தொழில்நுட்ப உதவியுடனும், அதன் அயராத பங்களிப்புடனும் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது.

இக் கல்லூரியில் கல்விப் பணியாற்றிய அதிபர்கள் வரிசையில் வியாசேகர், குமாரசுவாமி, தம்பு, சீதாராமன், ஸ்ரீநிவாசன், வைத்தியலிங்கம், சச்சிதானந்தம், சுவாமிநாத சர்மா, தியாகராசா, கனகலிங்கம், சிவானந்தன், சிவபாலன், சண்முகரத்தினம் ஆகியோர் அர்ப்பணிப்போடு சேவையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்ததை கல்லூரிச் சமூகம் என்னென்றும் பசுமையுடன் நினைவுகூருகின்றது.

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த இராணுவ நடவடிக்கையினாலும், 1995ஆம் ஆண்டு குடாநாட்டில் நிகழ்ந்த மாபெரும் வலிகாமம் இடப்பெயர்வினாலும் கல்லூரி பல்வேறு வகையிலும் பாதிப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் முகம் கொடுத்த போதிலும் மீளக்குடியேறிய பின்னர் மீண்டும் புதிய மிடுக்குடன் வளர்ந்து வருகின்றது.

1999 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை அதிபர் அ.ஈஸ்வரநாதன் கடமையாற்றி வருகின்றார். கல்லூரியில் 1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1,600 மாணவர்கள் வரையில் கல்வி கற்றனர். அந்தக் காலப் பகுதியில் கல்லூரியில் கல்வி கற்றவர்களில் கணிசமான தொகையினர் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் கணக்காளர்களாகவும் எனப் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கின்றனர். தற்பொழுது யாழ்ப்பாணத்தின் முன்னணி வைத்தியர்களாகத் திகழும் வைத்தியக் கலாநிதிகளான சிவன்சுதன், சிவதாஸன் ஆகியோரும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களே என கல்லூரியின் அதிபர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

தற்பொழுது கிராமப் புறங்களில் இருந்து நகரம் சார்ந்த பெயர்வு மூலம் பெரும்எண்ணிக்கையான மாணவர்கள் நகரப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்ற சூழ்நிலையானது கல்லூரியின் மாணவர் தொகையில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும் கல்லூரியின் கல்வி அடைவு மட்டமும், பரீட்சைப் பெறுபேறுகளும், இணைப்பாட விதான செயற்பாடுகளும் உயர் நிலையிலேயே உள்ளன. இந்த வருடம் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இக் கல்லூரி மீண்டும் வளர்ந்து மேல் நிலை பெறும்.

● எம்.ஜி. லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தில் க.பொ.த. சா/த பரீட்சை எழுதிய புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் ஆளுநர், அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் நிற்பதை படத்தில் காணலாம்.



மிருசுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹா உன்னத பாஞ்ஜசன்ய சகித 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பூர்ணாகுதி நிகழ்வைப் படத்தில் காண லாம்.



காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 100 பயனாளிகளுக்கு மரமுந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டன. பயனாளி ஒருவருக்கு அதிகாரிகள் கன்று ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- வட்டுக்கோட்டை நிருபர்)




சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெற்ற கலை ஞானவிலாசம் நிகழ்வில் கலந்துகொண்டோரை படத்தில் காணலாம்.

(படம்:- தெல்லிப்பழை நிருபர்)



யாழ். முஸ்லிம் பகுதியிலுள்ள சேதமுற்ற வீடுகளை அளந்து சேத மதிப்பீட்டை யாழ்.- கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் மேற்கொண்டது.இதன்போது கொழும்பு இஸ்லாமிய மாணவர் இயக்கமான 'ஜம்பியா' மாணவர்கள் 63 பேர் வருகைந்தது சேத மதிப்பீட்டு சேவையை மேற்கொண்டனர். பெரிய பள்ளிவாசல் சம்மேளன உறுப்பினர்களையும் ஜம்மியா மாணவர்களையும் படத்தில் காணலாம்.

(படம்:- ஜந்துசந்தி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி.யின் முடிவு சரியானதா?

பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்று வருகின்ற புதிய அல்லது கற்றுக்குட்டி அணிகளான அயர்லாந்து, நெதர்லாந்து, கனடா மற்றும் கென்யா உள்ளிட்ட அணிகள் சர்வதேச தரநிலையில் பிரதான இடத்தை வகிக்கின்ற அணிகளுடன் மோதி அந்த அணிகளுக்கு மிகவும் சவாலாக விளங்கிவருகின்ற நிலையில் அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் கற்றுக்குட்டி அணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) அறிவித்திருப்பது எந்தளவு நியாயமானது.என்பதே இன்றைய கிரிக்கெட் உலகின் கேள்வியாகவும் சந்தேகமாகவும் இருக்கின்றது.

அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா இங்கிலாந்து நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் சர்வதேச அளவில் தமக்கென



தனியானதொரு இடத்தை தக்கவைத்து ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் வித்தியாசமான சாதனைகளை புரிந்து வருகின்ற அணிகளாக விளங்குகின்றன. இவ்வாறான சிறப்புத்தன்னை வாய்ந்த பெரிய அணிகள் கற்றுக்குட்டி அணிகளின் பந்து வீச்சுக்கும் துடுப்பாட்டத்துக்கும் முகம் கொடுக்க முடியாது திணறுகின்ற நிலையிலேயே ஐ.சி.சி. தனது தீர்மானத்தை திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது இது கிரிக்கெட் பிரியர்களிடத்தில் அதிர்ப்தியையும் அதே வேளை மேற்கூறப்படுகிறவாறு கற்றுக்குட்டி அணிகளுக்கு மிகுந்த அசௌகரியத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

10 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் இங்கிலாந்தை சந்தித்த நெதர்லாந்து இங்கிலாந்தின் பந்து வீச்சைலாவகமாக எதிர்கொண்டு 292 ஓட்டங்களை குவித்தமையானது அந்த அணியின் துடுப்பாட்ட வரிசையின் பலத்தை நிரூபித்திருக்கின்றது. இதேவேளை கிரிக்கெட் தாயகம் என பெயர் பெற்றுள்ள இங்கிலாந்து அணி தான் எதிர்கொண்டுள்ள அயர்லாந்திடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது கிரிக்கெட் உலகையே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இந்த ஆட்டத்தில் அயர்லாந்தின் துடுப்பாட்டம் மெச்சும்படியாகவும் குறைகூறுவதற்கு காரணங்கள் இல்லாத வகையிலும் அமைந்திருந்தது.

இதேபோல இந்தியாவை எதிர்கொண்ட அயர்லாந்து இந்தியாவுக்கு கடுமையான நெருக்கடியை கொடுத்திருந்தமையும் காணக்கிடைத்தது. இந்தியா இதில் வெற்றிபெற்றிருந்தாலும் அது மயிரிழையில் பெற்றுக்கொண்ட வெற்றி என்றே கூறவேண்டும். இது இவ்வாறிருக்க நெதர்லாந்தும் இந்தியாவுக்கு சவால்விடுத்திருந்ததை கிரிக்கெட் உலகு கண்டுகளித்தது.




மறுபுரத்தில் 'ஏ' குழுவில் இடம் பெற்றுள்ள கனடா இது வரையில் தான் எதிர் கொணட போட்டிகளில் குறிப்பிடத்தக்க திறமையினை வெளிக்காட்டியுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற லீக்போட்டியில் கனடாவின் பந்து வீச்சு அபாரமாக இருந்த அதே வேளை மிகுந்த போராட்டத்தின் மத்தியிலேயே பாகிஸ்தான் கனடாவை வெற்றிக்கொண்டது.

நிலைமை இவ்வாறிருக்கும் போது கற்றுக்குட்டி அணிகளை அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் இணைத்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் இல்லை என ஐ.சி.சி. அறிவித்திருக்கின்றமை அதன் அவசரப்போக்கினை வெளிப்படுத்தியிருக்கின்றதே என்று சிந்திக்கத் தூண்டுகின்றது. பங்களாதேஷ் மற்றும் கென்யா ஆகிய அணிகளே இந்தத்தொடரில் சோபை இழந்து வருகின்ற நிலையில் நெதர்லாந்து, அயர்லாந்து மற்றும் கனடா ஆகிய அணிகளை சுட்டும் விதத்தில் ஐ.சி.சி. யின் கருத்து வெளிப்பாடு ஆரோக்கியமானதாக தோன்றவில்லை. இவ்விடயத்தில் ஐ.சி.சி. யின் தீர்மானம் சரியானதா அல்லது தவறானதா என்பதை தீர்மானிப்பது சற்று கடினமாக இருந்தாலும் இந்த அறிவிப்பானது அவசரமானது தான் என தீர்மானிக்க முடியும். மேற்படி அணிகளைப் பொறுத்த வரையில் அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்காக 4 வருட காலப்பகுதிக்கும் தம்மை மேலும் மெருகேற்றிக்கொள்ள முடியும் என்றதொரு நிலைகாணப்படுகின்றது. அந்தவகையில் நீண்டதொரு கால இடைவெளி இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஐ.சி.சி. நினைத்தால் மேற்படி கற்றுக்குட்டி அணிகளுக்கு சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அதிகமான சந்தர்ப்பங்களை வழங்கி அந்த அணிகளின் திறமையை வளத்தெடுக்கமுடியும். அவ்வாறு ஐ.சி.சி. சிந்திக்கத்தவறியது ஏன்? என்பது எமது பக்க நியாயமாகும். கிரிக்கெட் உலகுக்கு அறிமுகமாகின்ற அணிகளையும் அதன் வீரர்களையும் ஊக்குவித்து சர்வதேச அளவில் புகழ்பெற செய்யவேண்டியதே ஐ.சி.சி.யின் கடப்பாடும் பொறுப்புமாக இருக்கின்றது. எனவே இது உணரப்பட்டதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமைய வேண்டும். மாறாக அணிகளினதும் வீரர்களினதும் திறமைகளை குறைத்து மதிப்பிட்டு மழுங்கடிக்கச் செய்வது கௌரவமான கிரிக்கெட்டுக்கு அழகு அல்ல.

# சுழல்பந்து வீச்சின் அவசியம்

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பெரும் திருவிழாவாக நடைபெற்று வரும் 10 ஆவது உலகக்கிண்ணப் போட்டியில் நேற்று வியாழக்கிழமை வரை 26 லீக் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன.

இத் தொடரில் ஆரம்பத்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் மெல்ல மெல்ல பந்துவீச்சாளர்களும் தங்களது திறமையை நிரூபித்து வருகின்றனர். ஆனால் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான இந்திய ஆடுகளங்களில் இந்திய பந்து வீச்சாளர்கள் தடுமாறி வருவது அடுத்து வரும் போட்டிகளில் இந்திய அணிக்கு நெருக்கடியாக அமையவுள்ளது.

ஒரு காலத்தில் சுழற் பந்துவீச்சு என்றாலே இந்தியாதான் என்ற நிலை இருந்தது. சுபாஷ் குப்தே, பிஷன் சிங் பேடி, சந்திரசே, பிரசன்னா, வெங்கட்ராகவன், அனில் கும்ப்ளே, திலிப் தோஷி போன்ற சுழற் பந்துவீச்சாளர்கள் எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தனர்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உலகக்கிண்ணப்போட்டியில் துடுப்பாட்ட பலத்தினை மட்டுமே நம்பி களமிறங்கியுள்ள இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர்கள் பற்றாக்குறை காணப்படுவது அவ்வணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. 2001-இல் அவுஸ்திரேலிய அணியை கதிகலங்க வைத்தவரும் 93 டெஸ்ட் போட்டிகளில் 393 விக்கெட்டுகளையும், 220 ஒரு நாள் போட்டிகளில் 248 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளவருமான ஹர்பஜன் சிங் இந்த உலகக் கிண்ணப்போட்டியில் இதுவரை 3 ஆட்டங்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமே வீழ்த்தியுள்ளார். அதில் அயர்லாந்துக்கு எதிராக அவரால் 9 ஓவர் பந்து வீசி எந்தவொரு விக்கெட்டினையும் பெறமுடியவில்லை என்பது பரிதாபகரம்.

மற்றொரு சுழற் பந்துவீச்சாளரான பியூஸ் சாவ்லா தற்போது மிகவும் மோசமாகப் பந்துவீசினார் என்றே கூறலாம். சகீர் கான் தவிர மற்ற வேகப் பந்துவீச்சாளர்களும் எதிர்பார்த்த அளவு பிரகாசிக்காத நிலையில் இந்திய அணி அடுத்து வரும் போட்டிகளில் சுழற்பந்து வீச்சு முக்கியத்துவம் அளிக்குமாயின் தமது சொந்த ஆடுகளங்களில் போட்டிகளை இலகுவாக எதிர்கொள்ள முடியும் என்பது நடந்து முடிந்துள்ள போட்டிகளின் அடிப்படையில் தெளிவாகியுள்ளது.

Printed and published by Express Newspapers (Cey) Ltd at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday March 11, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org